


திரைஒளி
சிறப்பிதழ்!
கல்கி
KALKI
20.2.2005
ரூ.6.00
அபர்ணாவின்
அராஜக
ஷாப்பிங்!

## Trichy SARATHA' S
## Largest Textile Showroom in India







# திருச்சி சாரதா'ஸ்™

45, என்.எஸ்.பி. ரோடு, திருச்சி – 2. போன் : 2702077
தன்பில்டிங், 827, அண்ணாசாலை, சென்னை – 2. போன் 2852117



# வாழிய செந்தமிழ்!

இந்த இதழில் தொடர்களுக்கு
தமிழ் எண்கள் தரப்பட்டுள்ளன
ராமதாஸ்
உள்ளம் மகிழ்வாராக!



கல்கி

20.2.2005

"தாழ்த்தப்பட்டவர்களும், பழங்குடியினரும் அரசியல் தளத்தில் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருகிறார்கள். இதற்கு முடிவு கட்ட இரட்டை வாக்குரிமைதான் வழி" என்று கோரிக்கையை வலியுறுத்தி, மதுரையில் பிரம்மாண்டமான மாநாட்டை நடத்தினார் தொல். திருமாவளவன். அது என்ன இரட்டை வாக்குரிமை?

# "மோசடி அரசியலுக்கு முடிவு

**இரட்டை வாக்குரிமை என்றால் என்ன?**

ஒரு தனித்தொகுதியில் தாழ்த்தப்பட்ட பழங்குடி இன மக்களின் சட்டமன்ற, நாடாளுமன்ற, உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களை, தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மட்டுமே வாக்களித்து தேர்ந்தெடுக்கும் ஒரு வாக்குரிமையையும், அதே தொகுதியில் பொது உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் மற்றொரு வாக்குரிமையையும் தாழ்த்தப்பட்ட, பழங்குடியினருக்கு வழங்குவதுதான் இரட்டை வாக்குரிமை.

**நமது நாட்டில் இதுபோன்ற இரட்டை வாக்குரிமை முன்பு நடைமுறையில் இருந்ததுண்டா? இதன் பின்னணி என்ன?**

இந்தக் கோரிக்கை, புரட்சியாளர் அம்பேத்கார், ரெட்டை மலை சீனிவாசன் ஆகியோரால் 1930-31ல் லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாடுகளில் எழுப்பப்பட்டது. காந்தியடிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். ஏனெனில் இந்துக்கள் ஒற்றுமையைச் சிர்குலைத்திட ஆங்கிலேயர்கள் சதி செய்வதாக அவர் கருதினார்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றிருக்க, தாழ்த்தப்பட்டோருக்கு மட்டும் இரட்டை



**வாக்குரிமை என்பது அரசியல் சாசனத்துக்கு எதிரானது அல்லவா?**

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று சொல்லும் அரசியல் சட்டத்தில் சமூக ரீதியாக ஒடுக்கப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு போன்ற சிறப்புரிமைகளும் வழங்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டோர் என்ற பெயரில், பிற சமூகத்தைச் சார்ந்தவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களைத் தேர்ந்தெடுக்கும் இன்றைய நடைமுறையானது ஒரு வெளிப்படையான மோசடி முறையாகும். நீண்ட காலமாக அரசியல் தளத்தில் இருக்கும் இந்த மோசடியை அம்

# கட்டுவோம்!"

பலப்படுத்தவே, மீண்டும் இரட்டை வாக்குரிமை கோரிக்கையை நாங்கள் எழுப்புகிறோம்.

**அப்படியென்றால் இதுவரை நடைமுறையில் உள்ள தனித்தொகுதி முறையில், தாழ்த்தப்பட்டவர்கள் பயன்பெறவே இல்லையா?**

தனித் தொகுதி முறையால் தாழ்த்தப்பட்டோரில் சில தனி நபர்கள் பதவி, புகழைப் பெற முடிந்திருக்கிறது. ஆனால் சேரி வாழ் மக்களின் வாழ்க்கை நிலை, குறிப்பிட்டுச் சொல்லும்படியான மேம்பாடு அடையவில்லை. கரண்டலும், வன்கொடுமைகளும் தொடரவே செய்கின்றன. பிற அரசியல் கட்சிகளை, அல்லது பிற சமூகங்களைச் சார்ந்தே வாழும் நிலைமை அரசியல் தளத்திலும் தொடர்கிறது. இதனால் சேரி மக்கள் அரசியல் அதிகாரத்தோடு தொடர்புடைய அரசியல் சக்தியாக வளர முடிவதில்லை. அரசியல் அதிகாரம்தான் அனைத்துக் கொடுமைகளுக்கும் தீர்வைப் பெற வழிவகுக்கும். அதற்கு இந்த தனித் தொகுதி முறை துளியும் பயன்படவில்லை என்பதே யதார்த்த நிலை.

**ஒரு தொகுதியில் இரு உறுப்பினர் என்றால் குழப்பம் வராதா?**

வராது. தாழ்த்தப்பட்டோருக்கான உறுப்பினர், அவர்களது மேம்பாடுகளில் சிறப்புக் கவனம் செலுத்தவே இந்த முறை தேவைப்படுகிறது. பொது உறுப்பினர், தாழ்த்தப்பட்டோர் அல்லாத பிற சமூகத்தினரின் மேம்பாட்டில் கூடுதல் கவனம் செலுத்தவும் வாய்ப்பு உருவாகிறது.

\- ப்ரியன்

## தொல்.திருமாவளவன்


# கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P. ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621


மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

# அபர்ணா அராஜக ஷாப்பிங்!



“என்னங்க, கேமராவும் கையுமா வந்திருக்கீங்க, எதாவது பேட்டியா?” என்றார் அபர்ணா பதற்றத்தோடு. ‘ஆமாம்’ என்று தலையாட்ட, தலை கிறுகிறுத்துவிட்டது அவருக்கு. “என்ன சார், இப்படிப் பண்றீங்க! ‘மாழூ’ பட சூட்டிங் நடந்திட்டிருக்கு. லஞ்ச் பிரேக்லே வீட்டுக்கு சாப்பிட வந்தேன். இன்னும் ஒரு மணி நேரத்தில் நான் ஏவி.எம்மில் இருக்கணும். முன்னமே சொல்லக்கூடாதா?” என்று செல்லமாய் சிணுங்கினார்.

“இதுபோல ஒரு நெருக்கடியான சூழ்நிலையில், பதறாமல் சிதறாமல் ஷாப்பிங் பண்ணும் திறமை உங்களுக்கு இருக்கிறதா என்று சோதிக்கவே யாம் வந்தோம்” என்றதும் அபர்ணா முகத்தில் அழுகை வராத குறை.



அவர் எவ்வளவோ கெஞ்சியும் விடவில்லை நாம். நொடிக்குள் ஒரு முடிவுக்கு வந்தவராக கட்டை விரலைத் தூக்கி நம் மூக்கில் குத்துகிறமாதிரி உயர்த்திக் காட்டி “சேலஞ்ச்” என்றார். அடுத்த வினாடி நம் கையிலிருந்து ஐம்பது ரூபாயை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு காரில் ஏறினார்.





**பா**ண்டி பஜார் பூக்கடைகளிலிருந்து "அம்மா இங்கே வாங்க! இங்கே வாங்க!" என்று ஆள் ஆளுக்கு கூப்பிட "என்னைப் பார்த்தா உங்களுக்கு அம்மா மாதிரி தெரியுதா?" என்று அபர்ணா முகத்தில் கோபம் மின்னல் வெட்டியது. ஒரு பெண்மணி மட்டும், "தங்கச்சி, நம்ம கடைக்கு வா கண்ணு" என்று கூப்பிட்டார். மலர்ந்த முகத்துடன் கடையை நோக்கிப் போனார் அபர்ணா. அது செயற்கைப் பூக்கள் அணி வகுத்திருந்த சிந்தெடிக் பொக்கே ஷாப். "உங்கக் கடையிலே எந்தப் பூவை வாங்கிறதுன்னே தெரியலே... சரி! கடையை அப்படியே வாங்கிகிறேன். விலை சொல்லுங்க!" என்றதும் எல்லாம்மா நம்பாமல் "சும்மா டபாய்க்காத கண்ணு" என்று சிரித்து வைக்க, அபர்ணா விடுவதாக இல்லை.



தமது கைப்பையிலிருந்து ஒரு சிறு டர்க்கி டவலை எடுத்தவர், அதை எல்லாம்மாவின் கைகளில் போட்டார். இவரும் டவலுக்குள் கையை விட்டுக் கொண்டு பேரம் பேச, நமக்கோ கொட்டாம்பட்டி மாட்டுச் சந்தையில் இரண்டு அம்மணிகள், வெள்ளாடு விலைபேசுவது போலிருந்தது. ஐயாயிரம் ரூபாய்க்கு கிரெடிட் கார்டை எடுத்து நீட்டினார். "அம்மா காளியாத்தா! ஆளைவுடு! இந்தா! நம்ம கடைக்கு வந்ததுக்கு இதை எனாமா வெச்சுக்கோ" என்று ஒரே ஒரு ரோஜாப் பூவை நீட்டினார். "பாவம் விட்டுடலாம்" என்று காரில் ஏறிய அபர்ணா, அடுத்து பிரவேசித்தது பாண்டிபஜார் பாட்டா ஷோ ரூமுக்குள்.

**அ**ங்கே புத்தம் புதிய வருகையாக பல வண்ணங்களில் பளபளத்துக் கொண்டிருந்தன லில்லி காலணிகள். ஒரு ஜோடியின் விலை நூற்றுத்

தொண்ணூற்று ஒன்பது ரூபாய். அபர்ணாவோ ஒரு ஜோடி பிங்க் நிறக் காலணியில் ஒன்றை மட்டும் விலைக்குக் கேட்க, அங்கிருந்த விற்பனை ஊழியர் 'தரமுடியாது' என்று மறுக்க, அபர்ணாவுக்கு அருள்வராத குறை. நிலவரம் கலவரமானதை உணர்ந்த கடையின் தலைமை ஊழியர் சரவணன் ஓடி வர அவ்வளவுதான்! கண் இமைப்பதற்குள் ஒரே ஓட்டமாக எஸ்கேப் ஆன அபர்ணாவை, அடுத்து நாம் கண்டுபிடித்தது காஞ்சி பிளாசாவில்.

ஒரு அட்டை நிறைய அணி வகுத்திருந்த குண்டூசிகளிலிருந்து ஒரே ஒரு குண்டூசியை எடுத்து கையில் வைத்துக் கொண்டு "என்ன விலை?" என்று கேட்க, கல்லாவில் இருந்த கேஷியர் இப்ராகிம் மிகத் தெளிவாக ''அபர்ணான்னு பேருள்ள பொண்ணுங்களுக்கு நாங்க குண்டூசி விக்கிறதில்லே" என்று மறுத்தார். குண்டூசி பட்ட பலூன் மாதிரி அபர்ணாவின் உற்சாகமும் புஸ்ஸென்று வடிந்து விட்டது.

தன் முயற்சியில் கொஞ்சமும் தளர்வடையாமல், நடைபாதையில் பொம்மைகள் விற்றுக் கொண்டிருந்த ஒரு இளைஞரை நெருங்கி, ''அண்ணே! அண்ணே! இந்த குட்டி பைக்கை எனக்கு கொடுண்ணே" என்று குழந்தை மாதிரி கெஞ்சினார். "பத்து ரூபாய் விலை! சரி பரவாயில்லே, உன்னைப் பார்த்தா பாவமாயிருக்கு. அஞ்சு ரூபா கொடு" என்றார். அவரிடமும் கிரெடிட் கார்டை நீட்டிய அபர்ணாவை கோபித்துக் கொள்ளாத பொம்மை அண்ணன், ''அப்பாலே ஷாப்பிங் வருவேல்ல! அப்போ மறக்காம கொடு!'' என்று பைக்கை இலவசமாகவே கொடுத்து விட்டார்.

'அடப்பாவிகளா! இதுவே ஒரு அழகான பையன் என்றால் இப்படிக் கொடுப்பார்களா!' என்று நான் வாய் பிளந்து நிற்கும்போதே காரில் ஏறிவிட்ட அபர்ணாவைப் பின் தொடர்ந்து ஓடினோம்.



''இனிமே தன்னோட கட் அவுட்டுக்கு யாரும் பாலாபிஷேகம் பண்ண வேண்டாம்னு ஹீரோ சொல்லிட்டாராமே, ஏன்?''

''எல்லா ரசிகர் மன்றங்களும் பசு மாடு கேட்டு வம்பு பண்றாங்களாம்!''

- அம்பை தேவா

வெங்கட் நாராயணா சாலையில் இருந்த சென்ட்ரல் ஆட்டோமொபைல்ஸ் ஹீரோ ஹோண்டா ஷோ ரூம் முன்பு கார் நின்றது! ஷோ ரூமில் ஒரே கூட்டம். எக்ஸ்சேஞ்ச் ஆஃபரில் விற்பனை தூள் பறந்து கொண்டிருந்தது.

அபர்ணாவைப் பார்த்ததும் ஷோ ரூம் ஊழியர் சங்கீதா ஓடி வந்து வரவேற்றார்.

''வண்டி எக்ஸ்சேஞ்ச் ஆஃபரில் எடுக்கணும்... இந்தாங்க பைக்! நல்ல கண்டிஷன்லே இருக்கு'' என்றபடி பொம்மை பைக்கை மேஜைமேல் வைக்க, ஒட்டுமொத்த ஷோ ரூமும் சிரிப்பில் அல்லோகலப்பட்டது.

"உங்க முகத்துக்காக நீங்க கொண்டு வந்த பைக்குக்கு அஞ்சோ, பத்தோ கழிச்சு கிறோம்" என்றதும் "ஆ... நம்ம ஷாப்பிங் சக்சஸ்!'' என்று துள்ளிக் குதித்த அபர்ணா, அதற்குமேல் ஒரு நொடி கூட அங்கே நிற்காமல், காரில் ஏறி கூலாக படப்பிடிப்புக்குப் போய்விட்டார். பிஸியான விற்பனை நேரத்தில் வந்து கலாட்டா செய்ததற்காக, ஷோரூம் ஊழியர்கள் நம்மை 'கவனித்து' அனுப்பினார்கள்.

களைத்த மனத்துடன் அலுவலகம் வந்து சேர்ந்த நமக்கு, அபர்ணாவிடமிருந்து ஒரு எஸ்.எம்.எஸ்., ***'அடி உதவுற மாதிரி அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள்!'***

**- ஸ்ரீ சக்கரம்**

அட்டை படங்கள் : **ஸ்ரீஹரி**

## எஸ்பிஆர் ஹோம்ஸ் வழங்கும்

## கோவையில் பல நவீன வசதிகளுடன்

# தனி வீடுகள்



- ★ 2 மற்றும் 3 படுக்கையறைகள் கொண்ட தனி வீடுகள்
- ★ ரயில் நிலையத்திலிருந்து 6 கி.மீ.
- ★ பள்ளி, கல்லூரி, பல் பொருள் அங்காடிகள், பஸ் நிலையம் அருகில்
- ★ முன்னணி வங்கிகள் மூலம் கடன் வசதி
- ★ 24 மணிநேரம் பாதுகாவலர் வசதி

தயார் நிலையில் வீடுகள்

## *Espeeyare Homes*

**Site Address:**
Behind Cheran Nagar,
Kavundampalayam, Coimbatore.
Phone : 2232818, 2233846, 5589177

**Office Address:**
Promoted by: Espeeyare Enterprises (I) Pvt. Ltd.
15, Malavia Street, Ramnagar, Coimbatore - 641 009.
Cell : 98422 32818, 92444 07388

# SUNDARI SENIOR CITIZEN'S HOME

1. LAKSHMI NAGAR, S.K. MUTHUR P.O
COIMBATORE - 641 010

- Located at KOVAIPUDUR, 10 kms away from COIMBATORE
- OFFERS excellent living conditions with unpolluted air and cool breeze.
- SUNDARI provides a home for people to live in peace and in good company.
- It has all basic comforts, medical help, tie-up with hospitals etc.
- It has 12 single and 4 double rooms, each fully furnished with telephone and 24 hour hot and cold water facility.
- It has an attached bathroom with western toilet and a balcony.
- Sundari's infrastructure facilities are free donated by Trust.
- Running expenses including food are recovered at Rs. 3250 p.m. Per person for single room and Rs. 5750 for a couple in double room.
- Interest free refundable deposit of Rupees one lakh per person.

**Contact**

Managing Trustees, Ph: 0422 - 2608797, 2608799, 2608812
Website : www.sundarihome.org

# ரஜினியைச் சீண்டுகிறார்களா?


கடந்த வாரம் ரஜினி காந்த் வாரம். 'சந்திரமுகி' படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்க, அந்தப் படத்தின் விற்பனை உரிமை கோடிக் கணக்கில் போயிருக்கும் நிலையில், வருமான வரித் துறையின் நடவடிக்கை பல வதந்திகளைக் கிளப்பி விட்டிருக்கிறது.

ஒரு துணைக் கமிஷனர் தலைமையில் பத்து அதிகாரிகள் ரஜினி வீட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். போயஸ் தோட்டத்து வீடு, ராகவேந்திரா கல்யாண மண்டபம் என்று அவரை அழைத்துச் சென்று விசாரணை (?) நடத்தி, பல டாக்குமெண்டுகளை வாங்கிச் சென்றிருக்கிறார்கள். "முதிர்வடைந்த ஒரு எல்.ஐ.சி பாலிஸியில் 48 லட்ச ரூபாயை மறு முதலீடு செய்தது குறித்து விசாரிக்கப் போனோம்" என்று வருமான வரித்துறை சொன்னாலும், வேறு பல விஷயங்களும் காற்று வாக்கில் அடிபடுகின்றன.

'சந்திரமுகி'யின் ஆந்திர மாநில உரிமையை வாங்கியிருக்கும் ஒரு புள்ளியின் வீட்டில், சமீபத்தில் வருமானவரி அதிகாரிகள் சோதனை நடத்தினர். அது தொடர்பான விசாரணை ரஜினியிடம் நடந்தது என்கிறார்கள். "ரஜினி எப்போதுமே கணக்கு விவகாரங்களில் மிகச் சரியாக இருக்க விரும்புவார். மடியில் கனமில்லை" என்று சொல்கிறார் அவரது உதவியாளர் ஒருவர்.

ரஜினியின் ஆடிட்டர் சீதாராமன் என்பவராம். சென்றவருடம் வருமான வரித் துறை அதிகாரி ஒருவரது வீட்டில் சி.பி.ஐ. சோதனை நடந்தபோது சீதாராமனின் வாடிக்கையாளர்கள் சம்பந்தப்பட்ட சில பேப்பர்கள் கைப்பற்றப்பட்டதாம். அந்தப் பேப்பர்கள் தொடர்பாகவும், 'சந்திரமுகி' விற்பனை பற்றி துறைக்கு வந்த 'மொட்டை' கடிதத்தின் அடிப்படையிலும்தான் விசாரணை நடந்ததாகச் சொல்கிறார்கள். ரஜினியின் 'அருணாசலா இன்' ஹோட்டல் இப்போது குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது.

"ஒரு நபரின் வசிப்பிடங்களைச் சோதனை செய்யவோ, சர்வே (விசாரணை) நடத்தவோ வருமான வரித் துறை சட்டம் 132 மற்றும் 133 அனுமதிக்கின்றன. தேவையில்லாமல் சோதனை நடத்துகிறார்கள் என்றெல்லாம் வாதிட முடியாது. சுப்ரீம் கோர்ட், சோதனை செய்ய துறைக்கு முழு அதிகாரம் உண்டு என்றும் சொல்லியிருக்கிறது. சோதனையின்போது எதேச்சதிகாரத்தைக் காண்பித்தால் ஆட்சேபிக்கலாம்.



அவ்வளவுதான். ரஜினி வீட்டுக்குப் பத்துப் பேர் சென்றதற்குக் காரணம் முன்னெச்சரிக்கைதான் அவர் ஒத்துழைப்புக் கொடுக்காவிட்டால் சோதனை நடத்த ஆயத்தமாகவே அவ்வளவு பேர் சென்றிருக்கிறார்கள்.... என்பது தெளிவாகத் தெரிகிறது" என்கிறார் வருமான வரித் துறை வழக்குகளில் ஆஜராகும் மூத்த வழக்கறிஞர் ஒருவர்.

இந்த விவகாரத்துக்கு அரசியல் டார்ச்சை அடித்துப் பார்ப்பவர்களும் உண்டு. திருட்டு வி.சி.டி ஒழித்ததற்கான பாராட்டு விழாவில், ஜெ.வை அஷ்ட லட்சுமிக்கு ஒப்பிட்டுப் பேசி அசத்தி விட்டார் ரஜினி. ஆனால் தி.மு.க கூட்டணிக் கட்சிகளுக்கு (பா.ம.கவைத் தவிர) ரஜினி மீது எந்தக் கோபமும் இல்லை. கருணாநிதி ரஜினியோடு மிக்க நட்புறவோடு இருக்கவே நினைக்கிறாராம். சென்ற பாராளுமன்றத் தேர்தலில் ரஜினியின் வாய்ஸ் எடுபடாமல் போனதற்குக் காரணம், ஜெ. எதிர்ப்பு அலைதான் என்று தி.மு.க கருதுகிறது. சாதாரணமான சூழலில் தேர்தல் நடக்குமானால், ரஜினியின் பலம் ஒரு முக்கியமான அம்சமாக இருக்கும் என்றும் தி.மு.க கருதுகிறது. எனவே, எந்தக் காரணம் கொண்டும் பேச்சுக்களாலும், செயல்களாலும் ரஜினியை ஜெ. பக்கம் கொண்டு சேர்த்து விடக் கூடாது என்பதில், தி.மு.க கூட்டணிக் கட்சிகள் எச்சரிக்கையாக இருக்க விரும்புகின்றன.

ரஜினி விவகாரத்தைத் தொடர்ந்து கோலிவுட் வட்டாரம் நடுங்கிப் போயிருக்கிறது.

எம்.ஜி.ஆர், என்.டி.ஆர் ஆகியோரை வருமான வரித்துறை சீண்டியபோது, அவர்கள் அரசியல் தளத்தில் தமக்கென செல்வாக்கு தேடிக் கொண்டது வரலாறு.


- ஸ்ரீநி

# கெட்டி மேளம்... கெட்டி மேளம்!



''கெட்டி மேளம்! கெட்டி மேளம்!'' ஐம்பத்தேழு வயசு கமீலா பார்க்கர் போல்ஸுக்கும், ஐம்பத்தாறு வயது பிரிட்டிஷ் இள(?)வரசர் சார்ல்ஸுக்கும் கல்யாணம்! 'வானப் பிரஸ்தம் போகிற வயசுல கல்யாணம் ஒரு கேடா?'ன்னு இங்க உள்ள 'கன்ஸர்வேடிவ்' கட்சிக்காரங்க முணுமுணுக்கிறது கேட்குது.

வயசென்ன வயசு! நாம எவ்வளவு 'யங்கா' உணர்றோமோ, அவ்வளவு வயசுதான் நமக்கு... (இப்போ நான் இல்லே.. மார்கண்டேயனோட ஃபீமேல் கவுண்டர்பார்ட் மாதிரி..!)



அது போகட்டும். தன்னோட கல்யாண வாழ்க்கையைப் பத்தி, இளவரசி டயானா பல வருஷங்களுக்கு முன்னால சொன்னதையா இப்போ எல்லாப் பேப்பர்லயும் எடுத்துப் போடணும்?

''எங்க திருமண வாழ்க்கைல மூணு பேர் இருந்ததால கொஞ்சம் இட நெருக்கடியாப் போச்சு!'' அப்படின்னு பேட்டி கொடுத்திருக்காங்க டயானா!

'த்ரீ இஸ் எ கிரவுட்'னு என்னோட ஃபேவரிட் இங்க்லீஷ்ல ஒரு பழமொழியே இருக்கு. அது ஜெனரல் மொழி. கல்யாணத்தைப் பத்தினது இல்லை... ஆனால் வேற எந்த சிச்சுவேஷனையும்விட, திருமண உறவு விஷயத்துக்கு ரொம்பப் பொருந்தி வரும் மொழி.

கமீலாவை சார்ல்ஸால் மறக்க முடியாததாலதான், டயானாவுடனான திருமணம் ஃபெயிலாச்சு. மூன்றாவது மனுஷிராலதான் எந்தக் கல்யாண உறவுலயும் பெரிய பிரச்னை ஏற்படுது. நான் சொல்றது 'மெட்டிஒலி' டைப் ஆஃப் வலிய திணிச்ச சிச்சுவேஷன்கள் இல்ல... விநோத விசித்திர வாழ்க்கைத் தருணங்கள்.

முன்னாள் துணை வேந்தர் மருமகளும் மகனும் நீதிமன்றத்துக்கு வந்ததும்; நீதிபதி அவங்களுக்குள்ள சமரசம் பண்ணி வைக்க, திரும்பவும் கல்யாணம் பண்ணிக்கச் சொன்னதும்; வடபழனி கோயில்ல அந்தச் சடங்கு நடந்ததும், எல்லாப் பத்திரிகைலயும் வந்த செய்தி. இப்போ...? மணமகளிடமிருந்து மணவிலக்குக் கோரி, தான் வசிக்கும் அமெரிக்காவில் உள்ள கொலராடோ கோர்ட்டில் மனு செய்துள்ளார் மாப்பிள்ளை ராஜவேல்!

ஒரு முறைக்கு இரு முறையா கல்யாணம் பண்ணிக்கிட்டாலும், அது மூணாவது மனிதர் விருப்பத்துக்காக என்னும்போது, நீடிக்கமாட்டேங்குது!

கொலராடோ நீதி மன்றம் என்ன சொல்லுமோ, நமக்குத் தெரியாது. ஆனா எந்தக் கல்யாணத்தோட வெற்றியையும் நிர்ணயிக்கறது, சம்பந்தப்பட இரண்டு பேரோட மன மன்றம்தான்னு மட்டும் தெரியுது...

தர்ட் பர்ஸன் தோத்துப் போன இன்னொரு கதை சொல்லட்டுமா...?

பெண் பார்க்கும் படலம். மாப்பிள்ளை-பெண் ஓ.கே. சொல்லியாச்சு. பெண்ணோட அம்மா 'என் டாட்டரோட அழகுக்கு இந்த மாப்பிள்ளை லட்சணம் போதாது'ன்னுட்டாங்க. அப்புறம் மூணு வருஷம் மகளுக்கேத்த அழகனைத் தேடினாங்க. திரும்பவும் பெண் பார்க்கும் படலம்... கல்யாணம் நிச்சயமாச்சு - மாப்பிள்ளை..? மூணு வருஷத்துக்கு முன்னால மாமியார் நிராகரிச்ச அழகன்தான். இரண்டு குடும்பங்களும் ஒரு ரவுண்டு அடிச்சிட்டு, ஆரம்பிச்ச இடத்துக்கே திரும்ப... கெட்டி மேளம்! கெட்டி மேளம்!

**சுமி**

# ஐம்பெருங்காப்பியங்கள்

• சிலப்பதிகாரம் • மணிமேகலை • சீவகசிந்தாமணி • வளையாபதி • குண்டலகேசி

ஆகிய ஐந்து காப்பியங்களும் **மூலமும் உரையுடன்** அமைக்கப்பெற்றுள்ளன.

உரையாசிரியர் பேராசிரியர் ஜெ. ஸ்ரீசந்திரன்

*2500 பக்கங்களுக்குமேல் 5 தொகுதிகளில்* - **விலை ரூ. 650**

**விழா நாளன்று அரங்கினில், சிறப்புச் சலுகை விலை ரூ. 275 மட்டுமே.**

---

## ஸ்ரீமத் வால்மீகி இராமாயணம்

# சுந்தர காண்டம்

*(மூலமும் உரையும்)*

உரையாசிரியர் **டாக்டர் சுதா சேஷய்யன்**

*650 பக்கங்களுக்குமேல்* - **விலை ரூ. 190**

**விழா நாளன்று அரங்கினில்,**
**சிறப்புச் சலுகை விலை ரூ. 95 மட்டுமே.**

வடமொழி மூலம் (தமிழ் வரி வடிவத்தில்) ஒரு பக்கத்திலும் தமிழ் உரை அதன் எதிர்ப்பக்கத்திலுமாக அமைக்கப் பெற்று, படிப்பதற்கும் பாராயணம் செய்வதற்கும் வசதியாக, பற்பல பாராயண முறைகளையும் விளக்கிச் சொல்கிறது இந்நூல்!

## வெளியீட்டு விழா

இந்நூல்கள் 20.2.2005 ஞாயிறு
காலை 10.00 மணியளவில் சென்னை
ஆழ்வார்பேட்டை, நாரதகான சபா
பெரிய அரங்கினில் வெளியிடப்பெறுகின்றன.

**அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம்**
தலைமையேற்க

முனைவர் க.ப. அறவாணன்,
மூத்த வழக்கறிஞர் ஆர். கிருஷ்ணஸ்வாமி,
முனைவர் அ. அறிவொளி,
டாக்டர் சுதாசேஷய்யன்,
திரு. எஸ். கீர்த்திவாசன்,
திரு. அலைகள் சிவம்,
பேராசிரியர் டி.என். கணபதி,
பேராசிரியர் ஜெ. ஸ்ரீசந்திரன் ஆகியோர்
பங்கேற்கும் இவ்விழாவினில்
அனைவரும் கலந்து கொள்ளுமாறு
கேட்டுக் கொள்கிறோம்.

---

# மெய்கண்ட சாத்திரம்

*(மூலமும் உரையும்)*

உரையாசிரியர்
**முனைவர் அ. அறிவொளி**

*600 பக்கங்களுக்குமேல்*

**விலை ரூ. 190**

**விழா நாளன்று அரங்கினில்,**
**சிறப்புச் சலுகை விலை**
**ரூ. 95 மட்டுமே.**

திருவுந்தியார்
திருக்களிற்றுப்படியார்
சிவஞானபோதம்
சிவஞானசித்தியார்
இருபா இருபது
உண்மை விளக்கம்
சிவப்பிரகாசம்
திருவருள்பயன்
வினா வெண்பா
போற்றிப் பஃறொடை
கொடிக்கவி
நெஞ்சு விடு தூது
உண்மை நெறி விளக்கம்
சங்கற்ப நிராகரணம்

**என்னும் இப்பதினான்கு நூல்களையும் உள்ளடக்கியதே மெய்கண்ட சாத்திரமாகும்.**

**அரிய பெரிய சைவ சித்தாந்தக் கருத்துக்களைக் கூறும் இந்தச் சாத்திர நூல்கள் அனைத்திற்கும் தெளிவான உரை வகுத்துள்ளார் உரையாசிரியர்.**



# உள்ளக்கடத்தல்

ஆய்த எழுத்துக்குப் பிறகு இத்தனை சுத்தமான தமிழில் ஒரு தலைப்பா? இதற்காகவே ராமதாஸ், திருமாவளவன் கூட்டணி போட்டிபோட்டு பாராட்டியிருக்கும் தலைப்பின் மரியாதையை இயக்குனர் காப்பாற்றியிருக்கிறாரா எனப் பார்ப்பதே நமது கடமை. சும்மா சொல்லக் கூடாது! ஆரவாரம், ஆடம்பரம் எதுவுமின்றி எளிமையாகவும், இனிமையாகவும் கதை சொல்லியிருக்கிறார், இயக்குனர் புகழேந்தி தங்கராஜ்.

"அப்பா அம்மா சொல் கேட்டு நடக்கும் அடக்கமான பொண்ணுப்பா" என்று அக்கம்பக்கத்து மனிதர்களே நற்சான்று தரும் ஒரு நம்பிக்கைக்குரிய இளம்பெண், காதலா பெற்றோரா என்ற நெருக்கடியில் சிக்கிக் கொண்டால், என்ன முடிவு எடுப்பார்? காதல்தான் எனத் துணிந்துவிட்டால், என்ன விளைவுகளைச் சந்திப்பார் என்பதை வலியும், போராட்டமுமாகச் சொல்லும் கதை.


விஷுவல் கம்யூனிகேஷன் படிக்கும் கதைநாயகி குட்டிராதிகா, போட்டோகிராபி சொல்லித்தரும் யுகேந்திரனை அவரது நல்ல குணங்களுக்காக, காதலிக்கிறார். ஓர் இக்கட்டான சந்திப்பில் தொடங்கி, மெல்ல, மெல்ல உருப்பெற்று முழுமை பெறும் இவர்களின் காதல், பிரிவுக்குப் பிறகும் உயிர்ப்போடு இருப்பதை அழுத்தமான சம்பவங்கள் வழியே, யதார்த்தம் தோய்த்து சொல்லிருப்பது நம் வீட்டுக்கு அருகிலேயே கதை நிகழ்வது போன்ற தோற்றத்தை உருவாக்குகிறது.

இருப்பினும் அங்கங்கே சினிமாத் தனம் கொஞ்சமாய் எட்டிப் பார்க்கிறது. என்னதான் கொடுமையான அண்ணனாக இருந்தாலும், தங்கையின் கழுத்தில் தொங்கும் தாலியை பிய்த்தெறியத் துணிவாரா என்பது சந்தேகம்தான்.

நாயகன் யுகேந்திரனை விட நாயகியின் அண்ணன் விக்னேஷ் பாத்திரம் சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் குட்டிராதிகா, யுகேந்திரன் இருவரும் வெகு யதார்த்தமான நடிப்பால் பாத்திரங்களுக்கு வலுசேர்க்கிறார்கள்! விக்னேஷ்!? அவரது உடல்மொழி, வசன உச்சரிப்பு இரண்டுமே படு செயற்கையாகப் படுத்துகிறது.

பட்ஜெட்டுக்குத் தகுந்த மாதிரி பாடாவதி இசை தந்திருக்கும் பரத்வாஜ், படத்துக்கு நன்மை எதுவும் செய்துவிடவில்லை. இருந்தும் உள்ளக் கடத்தலில் காதலும், இழப்பும் உயிர்ப்போடு பதிவு செய்யப்பட்டுள்ளன.

● ஆவரெஜ் - விஷுவல்தாசன்




## கோவா கேலிக் கூத்து!

நல்ல நோக்கத்துடன் கட்சித் தாவல் தடைச் சட்டம் என்பதாக ஒன்று நமது நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்டது. இச்சட்டப்படி, கொள்கை அடிப்படையில் அல்லாமல், வெறுமனே எண்ணிக்கை பலமூட்டுவதற்காக கட்சி மாறும்போது, அவை உறுப்பினர்கள் தங்கள் உறுப்பினர் பதவியையே இழப்பார்கள். ஆனால், இந்தச் சட்டத்தின் ஓட்டையிலும் புகுந்து, ஜனநாயக மரபுகளையும், கட்சித் தாவல் தடைச் சட்டத்தையும், ஒரு சேர கேலிக்கூத்தாக்கியிருக்கிறார்கள் கோவா அரசியல்வாதிகள்.

பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்க்க, நான்கு பா.ஜ.க. உறுப்பினர்கள் சட்டசபையிலிருந்தே ராஜினாமா செய்திருக்கிறார்கள். காங்கிரஸுக்குத் தங்கள் ஆதரவை உறுதிப்படுத்தி அவர்களில் இருவர் அமைச்சர் பதவியையும் பெற்றுவிட்டனர். இவர்கள் ஆறு மாத காலத்துக்குள் மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் போதுமே!

இப்படி ஒரு நிலைமை உருவாக கோவா ஆளுனரும் காரணமாக இருந்திருக்கிறார். காங்கிரஸ் அனுதாபியான அவருக்கு, அக்கட்சியை ஆட்சியில் அமர்த்திவிட, காங்கிரஸ் தலைமையைக் காட்டிலும் அவசரம்!


தங்கள் கட்சியிலிருந்து நான்கு எம்.எல்.ஏ.க்கள், காங்கிரஸால்



# கல்கி



2005 பிப்ரவரி 20
தாரண மாசி 8
மலர் : 63
இதழ் : 30





ஆசைகாட்டி இழுக்கப்பட்டதாக பா.ஜ.க.வினர் இப்போது புலம்புகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களின் கட்டுக்கோப்பைத் தக்க வைத்துக் கொள்ள அக்கட்சித் தலைமை யால் இயலவில்லை. சட்டப் பேரவைத் தலைவரின் பாரபட்சமான நடவடிக்கையின் மூலம் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணமும் பலிக்கவில்லை. உட்கட்சிப் பூசல், அதிருப்தி எல்லாம் வளர அனுமதித்துவிட்டு இப்போது புலம்புகிறது கட்சித் தலைமை! ஆளுநனரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று வீதிக்கு வந்து போராடுகிறது.

எல்லாவற்றையும்விடக் கேவலம்; சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தே விலகிய இரு உறுப்பினர்களுக்கு, கோவா காங்கிரஸ் தலைமை, அமைச்சர் பதவி அளித்து அரவணைத்துக் கொண்டிருப்பதுதான்! 'கட்சித் தாவல் தடைச் சட்டப்படி, கட்சி மாறிய எம்.எல்.ஏ. / எம்.பி.க்களுக்குத்தானே அமைச்சர் பதவி அல்லது ஊதியமுள்ள வேறு பொறுப்பு தரக்கூடாது... இதோ, இவர்கள் எம்.எல்.ஏ.க்களே இல்லையே! இப்போது இவர்களுக்குப் பதவி அளித்தால், சட்டம் எங்களை என்ன செய்ய முடியும்?' என்று சவால் விடுவதுபோல் செயல்பட்டிருக்கிறது காங்கிரஸ்.

இன்னும் எத்தனை சட்டமன்றங்களில் இதுபோன்ற கேலிக் கூத்துகளைப் பார்க்கப் போகிறோமோ!

ஜனநாயகத்தின் அடிப்படை, எண்ணிக்கை பலம் மட்டுமல்ல. மக்கள் ஆதரவு பெற்று ஆட்சி அமைக்கும் கட்சி அல்லது கூட்டணி, உயர்ந்த நோக்கங்களுடன் மக்கள் நலனுக்காகச் செயல்பட வேண்டும். எதிர் அணியினரும், எதிர்கட்சிப் பணி என்பது ஆட்சியில் அமர்வதற்கு ஒப்பான கௌரவமும் முக்கியத்துவமும் உடையது என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். இதை மறந்து, சுயநல நோக்கில் கவிழ்ப்பு ஆட்டம் ஆட ஆரம்பிக்கும்போது, ஜனநாயகத்துடன் சேர்ந்து மக்கள் நலனுக்கும் சமாதி கட்டப்படுகிறது!




ஜனநாயகம் என்பது சட்டத்தின் துணைகொண்டு மட்டுமே செயல்படுத்தக் கூடியது அன்று. சட்டத்தைக் காட்டிலும், நல் மரபுகளும் உயர்நோக்குகளும்தான் அதனைச் செயல்படுத்த முடியும். மரபுகளையும் இலக்குகளையும் தூக்கிப் போட்டுவிட்டு, சட்டத்தை மட்டும் (அதிலும் சட்டத்தை ஏய்ப்பதை மட்டும்) குறிக்கோளாகக் கொண்டு அரசியல் நடத்தினால், மக்கள் மட்டும் எவ்வாறு சட்டத்தை மதிக்கும் பிரஜைகளாக இருப்பார்கள்...? அவர்களும் சட்டத்தை எங்கேயெல்லாம், எப்படியெல்லாம் ஏய்க்கலாம் என்றுதான் பார்ப்பார்கள்!

இப்படியொரு ஏய்ப்பு ஏய்த்து, ரானே தலைமையிலான ஆட்சி கோவாவில் அமைவதற்கு வழி செய்துள்ள காங்கிரஸ், இன்னும் எத்தனை நாட்கள் அங்கு ஆட்சியில் நீடிக்க முடியும்! இதே 'தொழில், நுட்பத்தைப்' பயன்படுத்தி, காங்கிரஸ் ஆட்சியை பா.ஜ.க. மீண்டும் கவிழ்க்க முற்படலாம் அல்லவா?

இப்படியே போனால், நம்பி வோட்டுப் போட்ட மக்களின் கதிதான் என்ன..? ஜனநாயகத்தின் கதிதான் என்ன? இந்தியாவின் எதிர்காலம்தான் என்ன?...

பீஹார் - ஜார்கண்ட் தேர்தல்களில் பிஸியாக இருக்கும் காங்கிரஸ் மேலிடம், இந்த கோவா நாடகத்தை எதிர்பார்த்ததா என்பது சந்தேகம்தான். ஆனால், நடந்தவற்றுக்கு காங்கிரஸ் தலைவி பொறுப்பேற்கத்தான் வேண்டும். ரானே அரசு ஆட்சிக்கு வந்ததற்காகப் பெருமைப்பட முடியாது. தலைகுனியத்தான் வேண்டும்.

இப்போது ரானே அரசு குறிப்பிட்ட காலத்துக்குள் தன் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. 'குதிரை வியாபாரம்' மும்முரமாக நடக்கும்.

இப்படி பெரும்பான்மையை நிரூபிப்பதற்குப் பதில், ரானே அரசு ராஜினாமா செய்து தேர்தலுக்கு வழி வகுக்க வேண்டும் என்று சோனியா கட்டளையிட வேண்டும்.

அப்போதுதான் காங்கிரஸும் அதன் தலைவியும், இந்த கவிழ்ப்பு நாடகத்தால் இழந்த கௌரவத்தைத் திரும்பப் பெற முடியும். ●


## ஆசிரியர் பக்கம்


பண்டரிபுரத்துக்குப் பாத யாத்திரை கிளம்ப துகாராம் சுவாமிகளுக்கு மிகுந்த ஆசை. ஆனால் உடல்நிலை அனுமதிக்கவில்லை. மிகவும் பிரயத்தனப்பட்டுக் கொண்டு எழுந்தார் துகாராம்.

"எங்கே போகிறீர்கள் இந்த உடம்போடு?" - அவர் மனைவி கேட்டார். "யாத்திரைதான் போகமுடியவில்லை. யாத்திரை போகிற பக்தர்களையாவது வீதியில் இருந்தபடி பார்க்கிறேனே..." என்றார் துகாராம்.

பண்டரிபுரத்தில் ஒயிலாக இடுப்பில் கைவைத்து நின்றுகொண்டிருந்த பாண்டுரங்கன் - ரகுமாயி தம்பதி காதில் இது விழுந்தது. ரகுமாயித் தாயாரின் மனம் கசிந்தது.

# கதைகதையாம் காரணமாம்!






"நீங்கள் மனம் வைத்தால் நிமித்த மாத்திரத்தில் துகாராமை இங்கே வரவழைக்கலாம் அல்லவா...? என்றாள் பாண்டுரங்கனைப் பார்த்து!

பாண்டுரங்கன் தம் கருட வாகனத்தை வருவித்து, துகாராமை அழைத்து வரும்படி அனுப்பினான்.

கருடாழ்வார் வந்து அழைத்தால் துகாராம் ஏறிக் கொண்டு போக வேண்டியதுதானே? ஊஹூம்! மறுத்து விட்டார்.

"எம்பெருமான் ஏறும் வாகனத்தில் ஏற எனக்கு என்ன அருகதை இருக்கிறது...?"

"பாண்டுரங்கனே அனுப்பினான் உங்களை அழைத்து வர..." கருடன் விளக்கினான்.

"என்னால் என்றைக்கு முடிகிறதோ, அன்றைக்கு நடந்து வந்து அவனைப் பார்க்கிறேன். அதுவரைக்கும் அவனை எனக்குள்ளேயே பார்த்துக் கொள்கிறேன்..." என்றார் துகாராம்!

இந்தக் கதையையும், இதைப் போன்ற உன்னத பக்திக்கு உதாரணமான இன்னும் பல கதைகளையும் உள்ளடக்கிய சப்தாஹ் (ஏழு நாள் வாரகரி சம்பிரதாய சங்கீர்த்தன ஹரிகதை) நிகழ்ச்சியினை ஒலிநாடாவாக வழங்கியிருக்கிறார் துகாராம் கணபதி மகராஜ். (வெளியீடு: விட்டல் விஹார், கிழக்கு தெரு, கடையநல்லூர் - 627751)

துகாராமின் ஏக்கத்தை தென்னாட்டின் குலசேகர ஆழ்வாரிடமும் காண முடிகிறது. மன்னன் குலசேகரன், ஸ்ரீரங்கத்து ரங்கநாதர் தரிசனத்துக்காக அல்லும் பகலும் அனவரதமும் ஏங்கினான். மறுநாளே யாத்திரை புறப்படவேண்டும் என்று மனத்தில் உறுதி பூண்டு உறங்கப் போவான். ஆனால், மறுநாள் அவையில் பக்தர்கள் காத்திருப்பார்கள், பாகவத குழாம் காத்திருக்கும்... அந்த சத்ஸங்கம் அவனை ஆட்கொண்டுவிட, யாத்திரையை மறந்துவிடுவான்...! அவன் ஏக்கத்தையும், அது தீர்ந்த விதத்தையும் 'குலசேகரர் கண்ட ராமன்' என்ற ஹரிகதை ஒலிநாடாவாக வழங்கியிருக்கிறார் கல்யாணபுரம் ஆராவமுதன். (வெளியீடு: கோதா சாரிடபிள் டிரஸ்ட், 189 டி.பி.எஸ். நகர், தஞ்சாவூர் - 613 007)

இன்று சுஜாதா முதல் சிலம்பரசன் வரையில் கதை சொல்லக் கையாளும் யுக்திகள் அனைத்தும், இந்தக் கர்ண பரம்பரைக் கலையில் காணக் கிடைக்கின்றன...... கடல் கடந்து வந்ததாக நாம் கருதும் சர்ரியலிஸம் முதல், மாஜிகல் ரியலிசம் வரையிலான நவீன கதை சொல்லும் யுக்திகள் அனைத்தும் ஹரிகதையில் 'உள்ளேன் ஐயா!' என்கின்றன!







"ஹலோ... அலமுவோட இரண்டு பெயின்டிங்ஸ் வித்துப் போச்சு... எங்கனோடதுதான். நல்ல ரெஸ்பான்ஸ்யா!" செல்ஃபோனில் குதித்துக் கொண்டிருந்தார் கிருஷ்ணப்ரியா!

சென்னை, அரசு நுண்கலைக் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு மாணவிகளான அலமு, சாய் திவ்யா, கிருஷ்ண ப்ரியா நடத்திய 'த்ரிலோக்வா' ஓவியக் கண்காட்சியில் தான் இந்த உற்சாகக் குரல் கேட்டது.

சாய்திவ்யாவின் 'மஞ்சள்', 'துளசி' ஓவியங்களில் தனித்தன்மை மிளிர்ந்தது.

"எங்க வீட்டு சமையலறையில் இருந்த மஞ்சள் ஜாடியில் இயல்பான வெளிச்சம் பட்டிருந்தது. அதைப் பார்த்து பதினைஞ்சே நிமிஷத்தில் வரைஞ்சதுதான் 'டர்மரிக்' " என்றார் சாய்திவ்யா.

கிருஷ்ணப்ரியாவின் கலங்கரி ஓவியங்களில் நிறைய பூனைகளைப் பார்க்க முடிந்தது. "எங்க வீட்டுலே ஒன்பது பூனைகள் வளர்க்கிறேன். அதான் அப்படியொரு கிரேஸ்" என்கிறார்.

''கிருஷ்ணர் ஓவியத்தின் தலைக்கு மேலே இருக்கும் மயிலிறகுகள் மேலே போகுதா, கீழே இறங்குதா?'' என்று கேட்டால், "இரண்டுமில்லை; மிதக்குது" என்றார். ஓவியத்தில் வேதாந்தம்!

அலமுவின் கை வண்ணத்தில் மனித முகங்களின் மாறுபட்ட பாவங்கள் வெளிப்பட்டன. 'மானஸா' ஆயில் பெயிண்டிங்கில் 'இளம் பெண்ணின் தவிப்பு' ஓராயிரம் கதைகளைச் சொன்னது.

# கலைத் திட்டணி

- சரண்



• அலமு



• சாய் திவ்யா



• கிருஷ்ண ப்ரியா



# வட்டமேஜை

# நினைத்து நினைத்து சிரிக்க... சிரித்து சிரிக்க...

✉ 'ஹெல்த் ஸ்பெஷல்' பிரமாதம்! 'வலிக்கு வழி, தட்டு சத்து, நடையழகு, அஜீரணம்' என்று அலசி, ஆராய்ந்து ஒரு கை பார்த்து விட்டீர்களே? சபாஷ்!

திருச்சி, அ. அனீஸ்

✉ 'சும்மா அலட்டாதீங்க' கதை யதார்த்த உண்மை.

திருச்சி, எஸ்.மீனா

✉ சங்கர் பாபுவின் 'நீராடல்' சிறுகதையில் நானும் நனைந்தேன்.

கரூர், க.குழந்தைவேல்

✉ தெப்பக் குளத்தில் இறங்கி குளிக்கும் சுகத்தில் மெய்மறந்து... மேன்ஷன் காக்கைக் குளியலின் நினைவுகளில் வாடி நின்று.. நிறைய நீர் இருந்தும் குளத்துக் குளியலின் சுகத்தை அனுபவிக்க இயலாத சக்தியின் பரிதாப நிலையை, கவிதை நிலையில் மிக அழகாகச் சொன்ன சங்கர் பாபுவின் 'நீராடல்' சிறுகதைக்கு நிச்சயம் தரணும் தங்க மடல்!

புனலூர், பி.எல்.பரமசிவம்

✉ அங்கங்கே மலர்ந்து மணம் வீசிய 'சிஹிஹிச்சை' துணுக்குகளின் மீது 'ஹிச்சையே' கொண்டு விட்டேன்.

நெய்வேலி, எஸ்.கண்ணன்

✉ தலையங்கம் படித்தேன். மனித நேயம் குறைந்து வருவதோடு, நல்வழி காட்டி முன்னுதாரணமாகத் திகழ வேண்டிய அரசியல் தலைவர்களே மக்களின் நெறியற்ற போக்கினை வளர்த்து விடுவதும் கவலை அளிக்கிறது.

மதுரை, என்.பாலகிருஷ்ணன்

✉ அமரர் கல்கியின் ஐம்பதாவது நினைவு நாளில், நாங்கள் கலந்து கொள்ளாத பெரும் குறையைப் போக்கியது 'உதித்தது நான்காவது தமிழ்' கட்டுரை. என்றும் வாழ்க கல்கியின் பெரும் புகழ்!

மதுரை, பி. ராஜசேகரன்

✉ 'பாலிடிக்ஸ் பஜார்' பாரபட்சமில்லாமல் பக்குவமாகப் பரிமாறப்படுவதால், படு டேஸ்ட்டாக இருக்கிறது.

திசையன்விளை, ஆர்.ஜி.கல்யாணி

✉ 'கோவை கூப்பிடு விநாயகர்' கட்டுரை கண்டேன். எண்ணற்ற பக்தர்களில் நானும் ஒருவர் என்ற முறையில் பிரசுரித்ததற்கு மிக்க நன்றி.

விழுப்புரம், சி.வி. அனந்தராமன்

✉ மிகவும் உபயோகமுள்ள ஹெல்த் ஸ்பெஷல்.

சென்னை, வேதவல்லி

✉ 'வைட்டமின் வேஸ்டா?' கட்டுரையில் இடம் பெற்ற அம்மா - குழந்தை கொள்ளை அழகு!

சென்னை - 18, எஸ்.வாசவி

✉ 'கிளினிக் கிளுக்' நகைச்சுவையை நினைத்து நினைத்து சிரித்துக் கொண்டே இருக்கேன்.

கழுகுமலை, எஸ். ஆறுமுகம்

மாதம் இருமுறை

# குமுதம் பக்தி

பிப்ரவரி 15, 2005 ஸ்பெஷல்

## ராகு_கேது பெயர்ச்சி பலன்கள்

தனிப் புத்தகம்

மனைவியுடன் காட்சிதரும் அபூர்வ

## தட்சிணாமூர்த்தி 2 in 1 புகைப்படம்

## சுனாமி

ஆபத்திலிருந்து காப்பாற்றும்

## சுப்ரமண்ய புஜங்கம்

தமிழில் ...

தற்போது விற்பனையில்

# சுஜாதா

ராகவேந்தர் சென்னை வந்தடைவதன்முன் நிகழ்ந்த சம்பவங்கள் இவை. அவருக்குப் புதுசாக அந்த பயம் வந்தது. இதுவரை இல்லாத பயம். மரண பயம்! லண்டனின் வசதி படைத்த ஓட்டலில், வி.ஐ.பி.களுக்கான ஏறத்தாழ ஒரு சிறிய வீடுபோல வரவேற்பறை, படுக்கையறை, குளியலறை, உணவறை எல்லா வசதிகளும் படைத்து, கண்ணாடிக்கு வெளியே தேம்ஸ் நதியும் பிக் பென்னும் தெரிய, அனைவரும் மேலுதட்டில் அலங்கார இங்கிலிஷ் பேசிக் கொண்டு, உலக ராஜாக்களும் ஜனாதிபதிகளும் தங்கும் அந்த பிரம்மாண்டமான ஓட்டல் அறையின் சௌகரியங்களையும், உலகத்தின் அத்தனை பிசினஸ் செய்தித்தாள்களையும், பத்திரிகைகளையும், பலவிதப் பழங்களையும் மலர்களையும், சாக்லேட்டுகளையும் தின்பண்டங்களையும், கவனிக்க முடியாமல், பயம் அவரை கப்பிய இருள்போல சூழ்ந்து கொண்டிருந்தது. 'நான் இந்த தேசத்தை விட்டு உயிருடன் புறப்படப் போவதில்லை!'




'நான் சாக விரும்பவில்லை. எத்தனையோ காரியங்கள் பாக்கியிருக்கின்றன. எத்தனையோ சாதனைகள், பட்டப்பெயர்கள் காத்திருக்கின்றன. ராஜ்யசபா மெம்பராக்கப் போகிறார்கள், எனக்கு பத்ம பூஷண் கொடுக்கப் போகிறார்கள். என்னைப்போல சின்ன வயசில் ஏழையாக இருந்த மாணவர்களுக்கான ஒரு மிகப் பெரிய ஸ்காலர்ஷிப் திட்டமும், அங்கஹீனர்களுக்கான ஒரு பள்ளியும் துவங்க வேண்டும். கம்பெனி விவகாரங்களை ஒழுங்குபடுத்த வேண்டும்.

இதெல்லாம் சாத்தியமாவதற்குள் செத்து விடுவேனோ. அப்படி சாவதாக இருந்தால், இந்தியாவில்தான் சாக விரும்புகிறேன். சென்னையில் என் வீட்டில், என் படுக்கையறையின் ஜன்னல்களைத் திறந்து கொண்டு, நல்ல சங்கீதம் கேட்டுக் கொண்டு, எனக்கு என் பெண்

கணக்குல புலிங்கிறாங்களே... இதுதானா?



பளீர்
இளமைத்
தொடர்



# உள்ளம் துறந்தவன்

களைப் பார்க்க வேண்டும். மனைவி அருகில் வேண்டும். முக்கியமாக மஞ்சரியை என் கைப்பிடித்து உள்ளங்கைக்குள் கதகதப்பாக பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். சூடாக்க வேண்டும். அவளைப் பார்த்துக் கொண்டேதான் சாக வேண்டும். இந்த லண்டன் குளிரில் புறப்பட்டுவிடாதே உசிரே, இரு இரு. எதற்காக நான் பயப்பட வேண்டும். உலகி லேயே உத்தம சிகிச்சை எனக்குக் கிடைக்கும். இதோ பாலா வின் போன் வரும். சிறந்த டாக்டர்களை வரவழைத்து, சுவஸ்தம் பெறலாம் என்ன. இந்த சின்ன கையளவு இதயம் தானே மக்கர் செய்கிறது? மூத்த மாப்பிள்ளை பாலா ரிப்பேர் பண்ணிவிடுவார். கலங்காதே, அவ்வளவு எளிதில் துறக்க விரும்பவில்லை.'

அறையின் அழைப்பு மணி சன்னமாக ஒலிக்க "கமின்" என்றார். "ஹலோ ஐம் டாக்டர் ஜான்சன். டாக்டர் பாலா கால்ட் மி. வாட் ஸீம்ஸ் டு பி தி ப்ராப்ளம்?"

“பக்தா.. உன் கடுந்தவத்தை மெச்சினேன். என்ன வரம் வேண்டும் கேள்!”

## அம்பை தேவா

இகேஜி எடுத்தபோது இதயம் மிக சமீபத்தில் ஒரு தாக்கம் தாக்கியிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிந்தது.

பாலாவிடம் ஓட்டல் அறையிலிருந்தே தாழ்ந்த குரலில் பேசினார். பாலாவும் இந்தியாவில் கார்டியாலஜிஸ்டுடன் பேசினார்.

அதன்பின் போனை ராகவேந்தர் கையில் கொடுத்தார்கள்.

“மாமா. நான் பாலா பேசறேன், டாக்டர் ஜான்சன் உங்களைப் பார்த்தாரே. அவர் ரொம்பப் பெரிய டாக்டர் லண்டன்ல. அவர் உடனே உங்களுக்கு ஒரு ஆன்ஜியோகிராம் எடுப்பார். உங்க இதயம் கால்பாகம்தான் வேலை செய்யுது. உடனே உங்களுக்கு ஒரு ஆன்ஜியோப்ளாஸ்டி பண்ணணுமா, இல்லை எமர்ஜன்சியா பைபாஸ் பண்ணணுமான்னு தீர்மானிப்பாங்க.” அவர் மெல்லப் பேசினார்.

“பாலா, என்னவா இருந்தாலும் லண்டன்ல வேண்டாம்.”

“மாமா. நான் சொல்றதைக் கேளுங்க மாமா. இது ஒரு எமர்ஜன்சி”

“என்னவா இருந்தாலும், சென்னைல போய்த்தான். இப்ப சரியாயிருச்சு. வலி இல்லை. பரமேஸ்வரன் ப்ரைவேட் ஜெட் ஏற்பாடு செய்வார். என்ன சொகுசா அழைச்சுகிட்டுப்போக ஏற்பாடு செய்வாங்க. எனக்கு இங்க எதும் ஆபரேஷன் வேண்டாம்”

“ஆப்ரேஷன் இல்லை மாமா, எக்ஸ்ரே படம் பிடிக்கிறாப்பல”

“என்ன புண்ணாக்கா இருந்தாலும் சென்னைலதான், சென்னைலதான். பரமேஸ்வரன் கூட பேசிரு”

“என்ன மாமா, இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறீங்க”

பாலா அடுத்த பதினைந்து நிமிஷத்தில் பரமேஸ்வரனிடம் பேசினார்.

“அவரை உடனே சென்னைக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்துர்றேன். ஒரே ஒரு ரிக்வெஸ்ட் டாக்டர்”

“என்ன?”

“சாருக்கு உடம்பு சரியில்லாததை யார்கிட்டயும் சொல்ல வேண்டாம். அதும் உங்க ஷட்டகர்கிட்ட”

“ஷட்டகர்னா?”

“சின்ன மாப்பிளை நாகரத்தினம்”


“ஏன்?”

“நீங்க, இண்டியா வர்றபோது விவரமா சொல்லிர்றேன். நீங்க எப்ப வரீங்க?”

“கிடைச்ச ப்ளேனைப் பிடிச்சுகிட்டு வரவேண்டியதுதான்.”

“டாக்டர் உங்களை ஒண்ணு கேக்கலாமா?

“எல்லாம் ஆன்ஜியோ கிராம் எடுத்தப்புறம்தான் சொல்ல முடியும் எவ்வளவு,



“எதுக்கு உங்க தமிழ் படத்துக்கு ஜப்பானிய மொழியிலே தலைப்பு வெச்சிருக்கீங்க?!”

"கேட்கும்போது முன் ஜாமீன் கிடைக்க அருள்புரி இறைவா!"



எந்த எந்த ரத்தக்குழாய் அடைச்சிருக்குன்னு."

"அவர் ஸ்மோக்கிங்கை நிறுத்தவே இல்லையா?"

இந்த அமர்க்களம் எதுவும் மஞ்சரிக்குத் தெரியாது. மாலை அழகேசனுடன் சாப்பிட்டு விட்டு வெளியே வந்ததும், அழகேசன் "தாங்கஸ்ங்க. ஒரு நாளில்லாட்டா ஒரு நாள், உங்களுக்கு நான் வாங்கித் தர்ற காலம் வரும். காத்திருப்போம்"

"எங்க போறீங்க, உங்களை வீட்டில ட்ராப் பண்ணட்டுமா?"

"வீடா? எனக்கா?"

"பின்ன ஆஸ்டல்ல தங்கறீங்களா?"

"ஒரு மாதிரி சின்ன ரூமுங்க. ஒருத்தர் படுத்துக்கற மாதிரி. பரவால்லைங்க, திருவான்மியூர் பஸ் நிலையத்தில் ட்ராப் பண்ணிருங்க. நான் திருப்போரூர் பஸ் அல்லது வேன் பிடிச்சுப் போய்க்கறேன்."

"திருப்போரூர்ல இருக்கீங்களா?"

"இல்லைங்க. இடையில ஒல்டு மகாபலிபுரம் ரோடில"

அவனை பஸ் டிப்போவில் இறக்கி விட்டபோது, "உங்களிடமிருந்து விடை பெறுமுன் ஒரு ஹைக்கூ"

'கோடை காலத்தில்
குதிரை மணலில்' இறங்கி
ஆற்றைக் கடக்கிறது.'

"அய்யோ அறுக்கறீங்களே! குதிரை எப்படிக் கடந்தா எனக்கு என்னங்க?"

"இந்த ஹைக்கூவுக்கு எத்தனையோ அர்த்தமுங்க."

"வேண்டாங்க. ராத்திரி வேளையில ஹைக்கூ கேட்டா எனக்கு ஒத்தைத் தலைவலி வந்துரும்"

"ஒத்தைத் தலைவலிக்கு சித்தரத்தை நல்லது. விடை பெறுகிறேன் உங்கள் லகு"

"லகுவா?"

"புனைப் பெயருங்க. விகடன் பவள விழாவில ஒரு குட்டிக் கவிதை கூட எம் பேர்ல வந்திருக்குங்க"

"நைஸ்"

"ப்ரைஸ்தான் கிடைக்கலை. ஒரு நாளில்லை ஒரு நாள், தமிழ்நாட்டில் லகுங்கற பேர் போஸ்டர் ஒட்டி கொண்டாடுவாங்க. பாத்துகிட்டே இருங்க"

அவன் சிரித்தான் கார் புறப்பட்டு சற்று தூரம் போனதும் தலை தெறிக்க ஓடி வந்தான். ஓரிரண்டு வாகனங்கள் கிறீச்சிட்டு. "டே சாவு கிராக்கி" என்று திட்டின.

"தலைவா, நிறுத்துங்க"

"என்னங்க, சாவி கீவி மறந்துட்டீங்களா?"

"சொல்ல மறந்துட்டேங்க"

"என்ன?"

"உங்களுக்கு இந்த டிரஸ் நல்லாருக்கு"

ஜன்னல் வழியாக, அவன் கலைந்த தலைமயிரை மேலும் கலைத்தான்.

(தொடரும்)

"பின்னே; ஆங்கிலத் தலைப்பு வெச்சா எதிர்ப்பு கிளம்புதே, அதான்!"

யமுனா, ரெங்கநாதன்





சினிமா கிரேஸிகள்! சினிமா கிரேஸிகள்!

**த**மிழ்நாட்டின் கிரேஸியான விஷயங்களில் ஒன்று, தமிழ் சினிமா மீது அதீத அன்பு கொண்ட ரசிகர்கள். குஷ்புவுக்குக் கோயில் கட்டியது, மோனல் இறந்த போது மூன்று நண்பர்கள் தற்கொலை செய்து கொண்டது. இன்னமும் எம்.ஜி.ஆர். உயிரோடிருப்பதாக நம்புவது... என ரசிகர்களின் ஆர்வத்திலும் அன்பிலும் எண்ணிலடங்கா சுவாரஸ்ய, சோகக் கதைகள்.

சரி, ரசிகர்களிடமிருந்து எவ்விதமான கிரேஸியான கடிதங்கள் வருகின்றன என்று நடிகர் விஜய் மற்றும் 'ஜெயம்' ரவி ரசிகர் மன்ற அலுவலகங்களுக்குச் சென்றோம்.

**'ஜெயம்' ரவி :**

**இ**வரது பர்சனல் பி.ஆர்.ஓ.வான சங்கரலிங்கமே அகில இந்திய ஜெயம் நற்பணி மன்றத் தலைவராகவும் இருக்கிறார். "ரவி நடித்த இரு படங்களும் ஹிட் ஆனதால், ரசிகர்கள் குறிப்பாக, ரசிகைகளின் அன்புத் தொல்லைகளைக் கட்டுப்படுத்தவே முடிவதில்லை. காதல் உணர்வுகளை போனிலும் கடிதத்திலும் வெளிப்படுத்தி, ஒரு கட்டத்தில் அலுக்க வைத்து விடுகிறார்கள். அடித்தட்டு மக்களும் வசதியானவர்களும் தான் இது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்கள்" என்றவர், சாம்பிளுக்கு சில கடிதங்களைக் காண்பித்தார். சென்னையிலிருந்து சிற்றூர் வரை கைவலிக்காது ஏராளமான பெண்கள் காதல் வசனங்களை எழுதிக் குவித்திருக்கின்றனர். அதில் 'பளிச்' என்று கண்ணில் பட்ட வாசகம், *"டியர் ரவி, நீ ராஜ் டி.வி பேட்டியில் கண் சிமிட்டியது, ரொம்ப நன்றாக இருந்தது. கீப் இட் அப்!"*

**விஜய் :**

**சா**லிகிராமத்தில் உள்ள ஷோபா திருமண மண்டபத்திலேயே தமது நற்பணி மன்றத்தை வைத்திருக்கிறார் விஜய். (அஜீத்துடைய தலைமை ரசிகர் மன்றமும் அருகிலேயே உள்ளது!) தினந்தோறும் ரசிகர்களிடமிருந்து வரும் கடிதங்களைப் படிப்பதற்கும், தொலைபேசி அழைப்புகளுக்கு பதில் சொல்வதற்குமே தனித்

# 'விஜய், விஜய்' என்று பாடும் நதி!

தனியே ஆள் போட்டிருக்கிறார்கள். மூட்டையில் கட்டி வைத்திருந்த ஏராளமான கடிதங்களைப் படித்ததில், விஜய்க்கு 95% கடிதங்கள் உடன் பிறவா தங்கைகளிடமிருந்துதான் வருகிறது. அதில் கண்டெடுத்த சில விநோத வரிகள்:



• விஜய் அண்ணா, எனக்கு கீழ் பாகம் நல்ல ஹீல்ஸ் வைத்த கறுப்பு ஷூ வாங்கித் தாருங்கள்.

• நான் எழுதிய லெட்டர் கிடைத்து விட்டது என்பதை நீங்கள் எழுதும் தொடரில் ஒரு லைன் எழுதவும்!

• விஜய்யால் கெட்-அப் மாற்றி நடிக்க முடியாது என்ற குற்றச்சாட்டை உடைப்பதற்காக, ஒரு மாத காலம் சரியாகத் தூங்காமல் ஒரு மிகச் சிறந்த கதையை உருவாக்கியுள்ளேன்.

• விஜய்க்கு சாந்தி எழுதிக் கொள்வது. இப்பொழுது என் பெயரை விஜி சாந்தி என மாற்றிக் கொண்டேன். எனக்கு உங்களின் ஞாபகமாக ஒரு கடிதார் எடுத்து அனுப்பவும்.

• விஜய் அண்ணா, இனிமேல் ஒரு நடிகையுடன் ஒரு படத்தில் மட்டும் நடிக்கவும்.

• விஜய் அண்ணா, ஒரு வேலை கொடுங்கள். உங்கள் அன்பு மகனை பார்த்துக் கொள்கிற வேலையாவது கொடுங்கள்.

• விஜய், எங்கள் ஊரில் ஓடும் நதி கூட 'விஜய் விஜய்' என்றுதான் பாடுகிறது.

• ஹாய் விஜய், நான் லூஸ் மாதிரி கடிதம் எழுதியிருக்கிறேன். இந்த லூஸ் கடிதத்துக்கு பதில் போடவும்.


இப்படி ஒவ்வொரு கடிதத்திலும் ஏராளமான அலைபாயும், ஆச்சர்ய மூட்டும் வரிகள். இதிலுள்ள துரதிர்ஷ்டம், பெரும்பாலான கடிதங்களைப் படிக்க விஜய்க்கோ, ஜெயம் ரவிக்கோ நேரம்




இருப்பதில்லை என்பதுதான்.

"ரசிகர் மன்றங்களாக இருந்ததை நற்பணி மன்றங்களாக மாற்றி விட்டோம்" என்று எந்த நடிகராவது காலர் தூக்கினால், அது உட்டாலக்கடி. தனி நபருக்கு ரசிகர் மன்றம் அமைப்பதை அரசாங்கம் தடை செய்திருப்பதால், வேறு வழியின்றி அனைவருமே தங்களது ரசிகர் மன்றங்களை நற்பணி மன்றங்களாக மாற்றி விட்டனர்.

**- சநகன்**






**பத்திரிகைகளுக்கு கடிதம் எழுதுவதில் ஒரு சிலருக்கு அதீத 'த்ரில்'. அப்படிப்பட்ட சில த்ரில்லர்களைச் சந்தியுங்க...**




# கடுதாசி த்ரில்!



* சிம்ம வாஹினி



* அய்யாறு வாசுதேவன்



* த. சத்திய நாராயணன்

**கவிஞர் அய்யாறு வாசுதேவன்**

பதினாலு வயசுல ஆரம்பிச்ச பழக்கம் இது. போன வருஷம் பொன்விழா வருஷம். முதன் முதல்ல 'கண்ணன்'ங்கற குடும்பப் பத்திரிகைக்கு கடிதம் அனுப்பினேன். இப்போ கிட்டத்தட்ட இருபத்தஞ்சு பத்திரிகைகளுக்கு கடிதம் அனுப்பறேன். இதற்காக மாதா மாதம் பட்ஜெட்ல இருநூற்றி ஐம்பது ரூபா ஒதுக்கிடுவோம். போஸ்டு கார்டு வாங்க தனியா நூற்றைம்பது ரூபா ஒதுக்கறோம். இவ்வளவு செலவு பண்ணி அனுப்பினாலும், அனுப்பற கடிதங்கள்ல பத்து சதவிகிதம் தான் பிரசுரமாகுது. இந்த மாதிரி கடிதம் அனுப்பறதை பல பேர் கிண்டல் செய்திருக்காங்க. ஆனா எதைப் பத்தியும் கவலைப்படாம, இன்னிக்கும் அனுப்பிகிட்டு இருக்கேன். சாதாரண வாசுதேவனான எனக்கு அய்யாறு வாசுதேவன்னு பெயர் வச்சதே 'கல்கி'தான்.

**சிம்ம வாஹினி :**

முடிஞ்ச வரைக்கும் பாஸிட்டிவா எழுதணும். எழுதறவங்களை உற்சாகப்படுத்தணும்னு எண்ணம் வந்து, கிட்டத்தட்ட நாற்பத்து இரண்டு வருஷமாயிடிச்சு. எவ்வளவு பெரிய பத்திரிகையாக இருந்தாலும் அரை மணியில படிச்சிட்டு உடனே கடிதம் எழுதிடுவேன். கிட்டத்தட்ட ஆறு புனைப் பெயர்கள்ல எழுதுவேன். நான் எழுதற லெட்டர் எடிட் ஆகாம அப்படியே பிரசுரமாகணும்கறதுதான் என்னோட ஆசை. இப்படிக் காசைக் கரியாக்கறியேன்னு பல பேர் கேட்டிருக்காங்க. ஆனா இதை எழுதறதுல ஏதோ ஒரு த்ரில் இருக்கு" என்று சொல்லும் இவருக்கு இந்தப் பெண் பால் பெயரை வைத்தவர் காஞ்சி மஹாப் பெரியவர்.

**அயன்புரம் த.சத்தியநாராயணன் :**

1976ல வந்த வியாதி(!)ங்க இது. உண்மையிலேயே நம்ம பேர் எல்லாருக்கும் தெரியணும். அதன் மூலமா பிரபலமாகணும்னு நினைச்சு, ஒரு பத்திரிகைக்கு கடிதம் போட்டேன். அநேகமா அது சிவாஜிக்குப் போட்ட லெட்டர்னு நினைக்கிறேன். அதுக்கு அவரளித்த பதில் பிரசுரமாக, ரொம்ப உற்சாகமாகி, தொடர்ந்து லெட்டர் போட ஆரம்பிச்சிட்டேன். இதுக்கு மாசம் ஐந்நூறு ரூபா வரைக்கும் செலவாகுது. ரொம்பப் பெருமைப்பட்ட விஷயம்னா, அது இயக்குனர் ஷங்கருக்கு நான் அனுப்பின கேள்விக்கு அவர் அனுப்பின பதில் : "ஆமா! நீங்க எப்போ கின்னஸ் புத்தகத்துல இடம் பெறப் போறீங்க?'' ஆக, லெட்டர் போட்டே நான் பிரபலமாயிட்டேன்னு தானே அர்த்தம்...!

\- முராரி

# ஆன்மீக உலகில் ஓர் அற்புதம்!

ஆன்ம சக்தியை அழித்து, அறிவின் திறனை குறைத்து, மனவலிமையை தகர்த்து, நிம்மதியைக் குலைத்து, வலிவை பாழாக்கி, ஆரோக்யத்தைக் குறைத்து, குடும்பத்தில் குழப்பம், தொழிலில் நஷ்டம், உத்தியோகத்தில் பிரச்சனை, கல்வியில் தோல்வி, காதலில் வீழ்ச்சி போன்ற காரியங்களை பில்லி, சூன்யம், ஏவல் இவற்றால் தீமை உண்டாகின்றன.

விண் மட்டும் விஞ்ஞானம் வளர்ந்த போதும், இவைகளுக்குத் தீர்வு அருள் மறையில் மாத்திரமுண்டு. இந்தக் குறைகளை நீக்கி எல்லாத் துறையிலும் வெற்றி பெறச் செய்கிறார் மாபெரும் தவச்சீலர் மறையகம் பாபா. உடனே அணுக வேண்டிய முகவரி



அருள்

## மறையகம்

1 B, மகாலட்சுமி அப்பார்ட்மெண்ட், நெ. 3, அப்துல் ரசாக் தெரு, நூர்ஜஹான் தியேட்டர் எதிரில்(தற்போது ராஜ் தியேட்டர் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது), சைதாப்பேட்டை, சென்னை – 600 015.

❖போன் : 2435 1190, 2433 2047. செல்போன் : 3100 5716

குறிப்பு : வெளியூர், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பிரச்சினை தீர்க்க தங்கள் பெயர், தங்கள் தாயார் பெயருடன் தங்கள் பிரச்சினைகளை எழுதி, ரூ. 10 (அ) அதற்கான அஞ்சல் தலையுடன் அனுப்பி வைத்து ஆலோசனை பெறவும்.



## ஆஹா! நெய் வாசம் மூக்கைத் துளைக்குதே!
## செண்பகம் பிராண்ட் நெய் தாங்க!!

செண்பகம்
பிராண்ட்
PURE GHEE

**சுவையான சமையல் என்றென்றும் செண்பகம் பிராண்ட் நெய்யில்**

தற்போது
15Kg, 5L, 2L, 1L, ½L
டின்களிலும், கேன்களிலும்
மற்றும் 200ml, 100 ml, 50 ml,
பவுச் பேக்கிலும் கிடைக்கிறது.

**SRI DHANALAKSHMI & CO.**
**SENBAGAM BRAND GHEE MANUFACTURER,**
18, M.G Pudur, I street,
TIRUPPUR - 641 604
Phone : 0421 - 2213557, Cell: 94433 56808

## எங்க ஊர் பிள்ளையார்

# "கொண்டா, கொண்டா!"

மதுரை மாநகரில் உலகப் புகழ்பெற்ற மீனாட்சி அம்மன் கோவிலில் மீனாட்சி அம்மைக்கும் சொக்கநாதருக்கும் இடையில் கோவில் கொண்டுள்ளார் முக்குறுணிப் பிள்ளையார்.

இவரது உருவம் மிகப் பெரியது. பானை வயிற்றோடு பக்தர்களைக் காக்கும் இப்பிள்ளையாரின் மகிமையும் மிகப் பெரிது.

ஆதியில் விநாயகரின் வாய்வழி உட்புகுந்து, அவரை அழிக்க முற்பட்ட அனலாசுரன் என்னும் கொடிய அரக்கனை அழிப்பதற்காக, அருகம்புல், எருக்கம்பூ, வன்னி முதலியவற்றால் அர்ச்சித்தனர். அதனால் அனலாசுரன் விநாயகர் வயிற்றினுள்ளேயே மாண்டு போனான் என்கிறது புராணம்.

ஆனால் அவன், அவர் வயிற்றினுள் இருந்து கொண்டு தன் முன்னே வந்து தொழுது தலையில் குட்டிக் கொண்டும், தோப்புக்கரணம் போட்டும் பக்தர்கள் கொட்டிக் குவிக்கும் பாவ மூட்டைகளை "கொண்டா! கொண்டா!" என்று வாங்கி பஸ்பமாக்கி, பரிசுத்தப்படுத்துவதாலேயே விநாயகரின் வயிறு அவ்வளவு பெரியதாக இருக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

விநாயக சதுர்த்தி தோறும் இப்பிள்ளையாருக்கு முக்குறுணி (3 குறுணி) கொழுக்கட்டை எனப்படும் ஒரே பெரிய கொழுக்கட்டையாக திருமலை மன்னர் நிவேதனம் செய்தார். அதனால் சித்தி விநாயகர் 'முக்குறுணிப் பிள்ளையார்' ஆனார்.

- டி.எஸ்.பார்வதி, மதுரை



* மதுரை முக்குறுணிப் பிள்ளையார்

### இயற்கைப் பிள்ளையார்

சென்னை அரசினர் தோட்டத்தில் ராஜாஜி ஹால் பக்கத்தில் ஒரு மரத்தில் இயற்கைப் பிள்ளையார் இப்பொழுது முழுவதும் வளர்ச்சி பெற்று இருக்கின்றார். அவர் வளர்ச்சியை, ஒவ்வொரு பாகமாக வளர்வதை, பக்கத்தில் இருந்து பார்த்தவள் நான். நான் சொல்லும் அந்த மரத்தில் முதலில் தும்பிக்கை வந்தது. பிறகு இரண்டு கால்களும் கைகளும் வந்தன. இதைப் பார்த்தவுடன் பிள்ளையார்தான் மரத்தின் அடிபாகத்தில் வளர ஆரம்பிக்கிறார் என்று எல்லோரும் அறிந்தோம். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு நாளைக்கு பால் கொண்டு வந்து அபிஷேகம் செய்து, விளக்கேற்றி கும்பிட்டு வந்தோம். பிறகு முகம், கிரீடம் என பிள்ளையார் முழு உருவம் பெற்றுத் திகழ்கிறார்.


- பாக்கியலக்ஷ்மி, சென்னை

### ஸ்ரீஈச்சனாரி விநாயகர்

ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் வடிவிலான பஞ்ச விநாயகப் பெருமான் பல இடங்களில் பல்வேறு வடிவங்களாக இருந்தாலும், கோயமுத்தூரை அடுத்த ஈச்சனாரி என்ற இடத்தில் அமர்ந்து

அருள்பாலிக்கும் அழகு, வார்த்தைகளில் அடங்காது. மகாகாயர் என்பதற்கு ஏற்ப பெரிய சரித்திரத்துடன் தனிக் கோயில் கொண்டு எழுந்தருளி உள்ளார்.

நாயக்கர்கள் காலத்தில் கோவையை அடுத்த சிவத்தலம் பேரூர் பட்டீஸ்வரர், கோயிலில் பிரதிஷ்டை செய்ய எழுந்தருளும் போது விநாயகரது திருவிளையாடலால் வண்டியின் அச்சு முறிந்து அவ்விடத்திலேயே அமர்ந்துவிட்டார். என்ன செய்தும் அசைக்க முடியவில்லை. அவ்வூர் மக்கள் சின்னதாக கோயில்கட்டி வழிபட்டனர். தற்சமயம் கோயில் வளர்ந்து



• ஸ்ரீ ஈச்சனாரி விநாயகர்



சீரும் சிறப்புமாக விழாக்கள் நடக்கின்றன. வாகனங்களில் செல்வோரும் நின்று பிரார்த்தித்துவிட்டே செல்கின்றனர். வழித்துணையாக ஸ்ரீ ஈச்சனாரி விநாயகரும் அருள்பாலிக்கிறார்.

- சி.வி.அனந்தராமன், விழுப்புரம்

## இலங்கையில் விநாயகர்கள்!

சித்தங்கேணி பெரிய வளவு ஸ்ரீமகாகணபதி கோயில்


பருத்தித் துறை கொட்டடி - பெரிய பிள்ளையார் கோயில்

யாழ்ப்பாணம் - நீராவியடி விநாயகர் கோயில்

மட்டக்களப்பு - திருநீலகண்ட பிள்ளையார் கோயில்

சாவகச்சேரி - வீரசக்தி விநாயகர் கோயில்

- இரா.பார்த்திபன், வயலூர்




கலைநிறை கணபதி
சரணஞ் சரணம்!
கஜமுக குணபதி சரணஞ் சரணம்!
தலைவனை நினையடி
சரணஞ் சரணம்!
சரவண பவகுக சரணஞ் சரணம்!
சிலைமலையுடைய சரணஞ் சரணம்!
சிவ சிவ சிவ சிவ சரணஞ் சரணம்!
உலைவறு மொருபரை
சரணஞ் சரணம்!
உமை சிவயம்பிகை சரணஞ் சரணம்!

- பி. ஜானகி,
பாளையங்கோட்டை

சூப்பர் ஆடியோ நிறுவனத்தினர் வழங்கும் 'கிருஷ்ண கான மாலை' ஆன்மிகம் மணக்கும் ஆடியோ சிடி பரிசு பெறுபவர்
டி.எஸ்.பார்வதி, மதுரை

## விநாயகரும் திருப்பெயர்களும்

விநாயகப் பெருமானுக்கு அவரது கருணை, தோற்றம், ஆற்றல், காரணமாக சூட்டப்பட்ட பெயர்கள் உண்டு.

ஏகதந்தர் : அளவற்ற ஆற்றல் உடைய விநாயகப் பெருமான் அவர் தம் கொம்பை ஒடித்து எடுத்துச் சென்று கயமுகாசுரனைக் கொன்றார். ஒற்றைக் கொம்பர்.

கஜாநனர் : பக்தர்களின் இன்னல் போக்கி கருணை காட்டுபவர்.

லம்போதரர் : சரிந்த தொந்தியை உடையவர்


குகாக்கிரார் ஸ்கந்தபூர்வசர் : முருகப் பெருமானுக்கு முன்னர் அவதரித்தவர்

விநாயகர் : கொடியவர்களை அழித்து இன்னல்களை நீக்குபவர்

விகடர் : விசித்திரமானவர்


கணாதிபன் : பிரதான கணங்களுக் கெல்லாம் தலைவர்

- ஆர்.ஆர். பூபதி, திண்டுக்கல்



# க்ரேஸி கேள்விகள்!

'ஒரு வட்டமான அறையில், ஏதாவது ஒரு மூலையில் சென்று உட்கார முடியுமா?' 'mother-in-law' என்ற வார்த்தையின் எழுத்துக்களை மாற்றியமைத்தால் 'Woman Hitler' என வருவது ஏன்?' 'பதிலே கிடைக்காத கேள்விக்கு, கேள்வி என்ற பெயர் பொருந்துமா?', 'என்னால் முடிவெடுக்கவே முடியாது - என்று முடிவெடுக்க முடியுமா உங்களால்?' - 'இரத்தக் காட்டேரிகளின் ப்ளட்-குரூப் என்னவாக இருக்கும்?'- இப்படிப் பல சுவாரசியமான கேள்விகளோடு வலம் வரும் தளம் crazythoughts.com இதுல என்ன கிரேஸின்னா, கேள்வி மட்டும்தான் இருக்கு. பதில்... முடிஞ்சா நீங்க சொல்லுங்க சார்! (என்னோட கேள்வி... 'பெயர்'ன்னு யாரும் ஏன் 'பெயர்' வைச்சுக்க மாட்டேங்கிறாங்க?)





மனசை லேசாக்கி, கலகலன்னு சிரிக்க வைக்க நிறைய தளங்கள் இருக்குது கிரேஸியா! afunworld.com அந்த ஜாதிதான். இதுல இருக்கிற பிக்சர்ஸ், 'ஹா...ஹா...'க்கு நல்ல விருந்து. Lifeisajoke.com, goofyhumour.com, jokesgallery.com -னு நிறைய இருக்குல நெட்டுல. சும்மா ரிமோட் பட்டனைத் தட்டி, சொட்டுச் சொட்டா 'மெகா' கண்ணீர் விடுற மக்களே, சிரிக்கவும் கத்துக்கோங்க இங்க வந்து!

பிரபுதேவா - இப்போது தெலுங்குத் திரையுலகில் 'கிரேஸ்' உள்ள டைரக்டராகி விட்டார். அவர் டைரக்டராக அவதாரம் எடுத்த 'நுவ்வோஸ்தானந்தேதேனோன்தான்டனா' (கரெக்டா?) திரைப்படம் செம பிக்-அப். சித்தார்த் - த்ரிஷாவின் இளமையும், தேவி ஸ்ரீ பிரசாத்தின் இசையும் ப்ளஸ். சித்தார்த் அடுத்து ஹிந்தியில் அமீர் கானுடன் இணையப் போகிறாராம். ராகவேந்திரா லாரன்ஸ் நாகார்ஜுனாவை வைத்து டைரக்ட் பண்ணிய 'மாஸ்' தெலுங்குப் படமும் ஹிட்தானாம். அவர் அடுத்து தமிழில் ஒரு படம் டைரக்ட் பண்ணப் போகிறாராம். ஆஹா... பார்முலா மாறுது... இனிமே டைரக்டராகணும்னா, டான்ஸ் மாஸ்டரா இருக்கணும்போல! தெலுங்கு சினிமாவின் 'கிரேஸ்' நியூஸ்களை அள்ள telugucinema.com போங்க.



- ப்ரௌஸர்

## மைக்ரோவேவ் மாமி





# தீயல்

“ஹாய்! ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு டிஷ் சொல்லித் தரேன். ஆனா ஏற்கெனவே நமக்கு நன்னாத் தெரிஞ்ச ஐட்டத்துக்கு புதுசா ஒரு சைடு டிஷ் சொல்லித்தரப்படாதா?”ன்னு சில பேர் கேட்டிருந்தா. அதனால இந்த வாரம் சைடு டிஷ் வாரம் - பேரு 'தீயல்'. இது எதற்கு சைடு டிஷ்ங்கறதை கிளைமாக்ஸ்ல சொல்றேன்.

முதல்ல ரெண்டு பெரிய வெங்காயத்தை பொடியா நறுக்கிண்டு, அரைமூடி தேங்காயைத் துருவி வச்சிக்கோங்கோ. துளியூண்டு புளியை வெதுவெதுப்பான ஜலத்துல ஊற வச்சிருங்கோ. அப்புறம் ரெண்டு டேபிள் ஸ்பூன் தனியா, ஒரு டேபிள் ஸ்பூன் வெல்லம். இரண்டு டேபிள் ஸ்பூன் ஆயில், எட்டு சிவப்பு மிளகாய் எல்லாத்தையும் தயாரா வச்சிருங்கோ. அத்தோட கடுகு, கறிவேப்பிலை, உப்பு மூணுத்தையும் கொஞ்ச கொஞ்சம் எடுத்துக்கோங்கோ.

துருவிய தேங்காய், தனியா, சிவப்பு மிளகாய் சேர்த்து வறுத்து, மிக்ஸில போட்டு பேஸ்ட் பண்ணி வச்சிடுங்கோ, முதல்ல, நறுக்கின வெங்காயத்தை வதக்கிடுங்கோ. பிரௌன் கலர் வந்துடுத்துன்னா, அதுல நாம ஏற்கெனவே தயார் பண்ணி வச்சிருக்கோமோன்னோ, அந்த மிளகாய் பேஸ்டைக் கலந்து, மூணு நிமிஷத்துக்கு வேக விட்டுடுங்கோ. அந்த கேப்ல கல்கி லாஸ்ட் பேஜ் வி.ஐ.பி. யாருன்னு பார்த்துட்டு, அடுத்த வார வி.ஐ.பி. யாரா இருக்கும்னு கெஸ் பண்ணிட்டே இருந்தேன்னா, மூணு நிமிஷம் ஆயிடும். இப்போ புளி ஜலத்தை அந்தப் பேஸ்ட்ல கலந்துடுங்கோ. மறக்காம வெல்லத்தையும் மிக்ஸ் பண்ணிடணும். ஓ.கேவா!

ஒரு தனி வாணல்ல ஆயில் விட்டு, அதுல கடுகு, கறிவேப்பிலை தாளிச்சு தனியா எடுத்து வச்சிக்கோங்கோ. இப்போ வெங்காயம் நன்னா வெந்துருக்கும். தாளிச்ச கடுகு, கறிவேப்பிலையை அதுல கொட்டி, உப்பு சேர்த்தேன்னா தீயல் பக்காவா ரெடியாடுத்துன்னு அர்த்தம்.

இதோ கிளைமாக்ஸ் : இந்த 'தீயல்' ஆப்பத்துக்கு சூப்பர் காம்பினேஷன். டிரை பண்ணுங்கோ! வரட்டுமா!

# அது குற்றாலம், இது நயாகரா!

விபத்துகள் நடப்பது யாருக்குமே பிடிக்காதுதான். ஆனால் அமெரிக்க விஞ்ஞானி, டாக்டர் கிருஷ்ணா ராக வேந்தரின் வீணைக்கு ஏற்பட்ட சிறு விபத்தால், புதுமையான இசை கிடைத்துள்ளது.

"நான் அப்போதுதான் ஒரு ஜுகல் பந்தி கச்சேரியில் வீணை வாசித்து முடித்திருந்தேன். எனக்கு உதவ வந்த அமெரிக்கர் ஒருவர், வீணையைத் தூக்கத் தெரியாமல் தூக்கி 'தடால்' என கீழே போட்டு உடைத்துவிட்டார். பாஸ்டனில் உள்ள இசைக் கருவிகள் பழுது நீக்கும் கடைக்குத் தூக்கிச் சென்றேன். உசத்தியான பலா மரத்தில் செய்யப்பட்ட தஞ்சாவூர் வீணை அது. அந்த மரம் அமெரிக்காவில் கிடைக்குமா? ஆனாலும், அந்த வீணையின் உயர் அம்சத்தைப் புரிந்து கொண்டு, ரெட்வுடார் மரத்தில், ஃபைபர் கிளாஸ் ரெஸ்டிங் பீஸ் வைத்து தயாரித்துக் கொடுத்தார்கள். நான் பயோஃபிஸிக்ஸ் விஞ்ஞானி என்பதால், ஒரு சில புதுமைகளைப் புகுத்த விரும்பினேன். அதன்படியே, அதை, நான்கு பகுதிகளாகப் பிரித்து, பொருத்தக் கூடிய 'டிடாச்சபிள் வீணா'வாக மாற்றினேன். மைக், எலக்ட்ரிக் பிக்-அப், ஈக்வலைஸர்ஸ், ஆம்பிளிஃபையர் என எல்லா ஒலி அமைப்புகளும் வீணைக்குள்ளேயே இருக்கும்படி அமைத்தேன். எங்கள் உழைப்பு வீண் போகவில்லை. புதுமையான வீணை உருவாகிவிட்டது. வீணையின் நாதம் என்னையே பிரமிக்க வைத்தது. எவ்வளவு பெரிய ஹாலாக இருந்தாலும், மைக்கே தேவையில்லை. இதில் இன்னொரு விசேஷமும் உண்டு. இதை இயல்பான வீணையாகவும் வாசிக்கலாம். எலெக்ட்ரிக் பிக்-அப் கொடுத்தும் அசத்தலாம். ஒன்று குற்றால அருவி என்றால், இன்னொன்று நயாகரா" என்று சிரித்தார் கிருஷ்ணா ராகவேந்தர்.

இப்படி எல்லாம் புதுமை செய்வதை, பாரம்பரியக் கலைஞர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

"வொய் நாட்? வீணை ரங்கநாயகி ராஜகோபாலன், பாரம்பரிய இசைக் கலைஞர். அவருக்கே இந்த வீணையின்மீது பிரியம் ஏற்பட்டுவிட்டது. 'ரொம்ப நல்ல நாதமிருக்கு. எனக்கு இது மாதிரி மேளம் வைச்சுத் தர முடியுமா?' என்று கேட்டார்" என்றார் பெருமையாக

'ரேர்' என்ற உலக இசை ஆராய்ச்சி நிறுவனத்தை, பிரிட்ஜ்



வாட்டர் பகுதியில் நடத்திவரும் கிருஷ்ணா ராகவேந்தர் சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தார்.

ஏ.ஆர். ரகுமான், வித்யாசாகர் போன்றவர்களுக்கு தம்முடைய புதுமையான வீணையை வாசித்துக் காட்டி அசத்திவிட்டாராம்.

அப்ப, விரைவில் இலங்க இசையமைப்புலே கிருஷ்ணா ராகவேந்தர் வாசிச்சுடுவாருன்னு ஸ்டூடியோ பட்சி சொல்லுது!

- ஜெயஸ்ரீ

# அருள்வாக்கு

ரொம்ப விசித்ரமாய் கவி பாடுவதில் காளமேகப் புலவரைத் தமிழில் தலைமை ஸ்தானத்தில் வைத்திருக்கிறார்கள். நினைத்தே பார்க்க முடியாதபடி, நூதன நூதனமாக எதையாவது சொல்லி அந்தக் கருத்துக்கு இசைய இவர் கவிபாட வேண்டும் என்று மற்ற கவிகள் பந்தயம் வைத்திருக்கிறார்கள். கொஞ்சங்கூடச் சளைக்காமல் அத்தனை பந்தயத்திலும் அவர் ஜயித்திருக்கிறார்.

லோகத்திலே ஒரு விஷயம் பாக்கியில்லாமல் எல்லாவற்றையும் பற்றி, இப்படி அநேக கவிகள் சமத்காரமாக இருக்கின்றன. பரமாத்மாவிலிருந்து ஆரம்பித்து ஒரு சின்ன கொசுவரையில் எதைப் பற்றியும், அர்த்த சித்ரமாகவும், சப்த சித்ரமாகவும் கவிகள் விநோத விநோதமாகப் பண்ணியிருக்கிறார்கள்.

பரமாத்மா, கொசு இரண்டையும் குறிப்பிடுவதாகச் சிலேடை செய்து கூடக் கவி இருக்கிறது. ஒரு அர்த்தப்படி ஸாக்ஷாத் மஹாவிஷ்ணுவைக் குறிக்கும்; இன்னொரு அர்த்தப்படி கொசுவைக் குறிப்பிடும்.

சுற்றிக் கொண்டேயுள்ள சக்கரத்தைக் கொண்ட கரத்தை உடையவர் மஹாவிஷ்ணு. சக்கரவட்டமாகச் சுற்றும் காரியத்தை ஓயாமல் செய்வது கொசு.


கெட்ட நோக்குடையவர்களால் நெருங்க முடியாமல் தூரத்தில் விலகியிருப்பவர் பகவான். 'குத்ருஷ்டிபி:' கண் வலிக்காரர்கள் என்றும் இன்னொரு அர்த்தம். கொசு என்றாலே கண் நோவுள்ளவர்கள் தூர ஓடிவிடுவார்கள்.

உபநிஷத்திலே பகவான் ஆனந்தமாக விளையாடுகிறார். கொசுவைக் குறிப்பதாகக் கொள்ளும்போது, 'ச்ருதி' என்றால் காது. காதுநுனி 'ச்ருத்யந்தம்'. கொசு நம்முடைய காதோரத்தில் வந்து 'ஙய்ங்' என்று சப்தம் பண்ணிக் கொண்டு விளையாடி ஹிம்ஸை பண்ணுகிறது.

"மசக! த்வாம் ஏவ மாதவம் மந்யே" - "ஏ கொசுவே! உன்னையே நான் மாதவனாக நினைக்கிறேன்" என்று முடிக்கிறார்.

"சக்ர ப்ரமணம் பண்ணுவது, குத்ருஷ்டிக்காரர்களை தூரப் போகப் பண்ணுவது, ச்ருத்யந்தத்தில் விளையாடுவது என்ற காரியங்களை நீ செய்கிறபடியால், ஏ! கொசுவே, உன்னையே மஹாவிஷ்ணுவாக நினைக்கிறேன் - மசக! த்வாமேவ மாதவம் மந்யே!"

அனந்த சயனமாகப் படுத்துக் கொண்டு தூங்குகிற பகவான்தான், அந்தக் கொசு ரூபத்தில் வந்து காதிலே ரீங்காரம் பண்ணுகிறார் என்று நினைத்துக் கொண்டால், கொஞ்சம் ஹிம்ஸையை மறக்கலாம். கொசுத் தொல்லையில் தூக்கம் வராவிட்டால் இந்த கவித்வ விசித்ரங்களை நினைத்துக் கொண்டு கொஞ்சம் நிம்மதி பண்ணிக் கொள்ளலாம்.



**- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்**



# 1000s
of Successful Marriages

சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட
நல்வாழ்க்கைத்துணையை
ஸ்வயம்வரா.காமில்
கண்டறியுங்கள்



**www.swayamwara.com**

இன்றே இலவசமாக ரிஜிஸ்டர் செய்து
தங்கள் மனதிற்கினிய வாழ்க்கைத் துணை
நன்றே அமையப் பெற்று மகிழ்வடையுங்கள்

**swayamwara.com**

கல்யாண வைபோகமே!

Swayamwara.com Internet Services Pvt. Ltd.,
571 A, Anna Salai, Teynampet (Opp to DMS), Chennai - 600 018.

Chennai : 044 - 521 22800, 5529 5050

24 hours Helpline : 98844 99235 / 236

Bangalore : 98862 66462

*An Easy & a Secured Internet Portal for all Castes and Communities*

# ஆத்ரேயா



★ ரெடிமேட் ரவிக்கைகள்
★ பெட்டி கோட்ஸ் ★ நைட்டீஸ்

சிறிய மற்றும் பெரிய
ஷோரூம்களுக்காக 2 x 2 ரெடிமேட்
ரவிக்கைகள் இப்பொழுது
மொத்த விற்பனைக்காக
தயாரிக்கப்பட்டுள்ளது. நல்ல தரம்
சரியான பிட்டிங் உங்கள் ஊரிலும்
ஆத்ரேயா ரெடிமேட்
ரவிக்கைகள் விற்பனை
செய்ய அணுகவும்

**Athreya**

No.1, Jambulingam Street, (Valluvar Kottam High Road),
Nungambakkam, Chennai - 600 034.
☎ 28226586 Fax : 091-044-25360076
E-mail : raj@oceanload.com

| | | |
|---|---|---|
| SINGAPORE | : | MUSTAFFA |
| UAE | : | LULU CENTRE |
| KARAIKAL | : | EVE'S PARK, BARATHIYAR STREET |
| THANJAVUR | : | LATHA. PH : 240636 |
| NANGANALLUR | : | CHARY'S STORE, CHENNAI-61. ✆ 55298033 |
| MADURAI | : | EVE'S ERA, CHINNA CHOKKIKULAM |
| KUMBAKONAM | : | LAXMI TEXTILES |
| ADYAR | : | NALLI SILK CENTER |

CHARY'S, 044-22240710

சங்கரி அப்பன்

கிராமத்துப் புழுதியை வாரி இறைத்துக் கொண்டே பஸ் கிளம்பியது. பார்த்தசாரதி தமது மஞ்சள் நிறப் பையை வயிற்றோடு சேர்த்து இறுக்கிக் கொண்டார். பஸ்ஸின் ஆட்டத்தில் சாமான்கள் விழுந்துவிடக் கூடாதே! "பெரியவரே, எங்கே போவணும்?" கண்டக்டர் கட்டைக் குரலில் கேட்டார்.

"மதுரை" எச்சில் தொட்டு கிழித்துத் தரப்பட்ட டிக்கெட்டைப் பொறுமையாக வாங்கி வைத்துக் கொண்டார் பார்த்தசாரதி.

"பேத்திக்கு அதிரசம் பிடிக்கும். கடலை பர்பி ஒரு பாக்கெட், மதுரை பஸ் ஸ்டாண்டிலே வாங்கிக்கங்க..." மனைவி லக்ஷ்மியின் கவனிப்பால் பை முழு லோடுடன் மூச்சுத் திணறியது.

ஜன்னலோர சீட் வசதியாகவே இருந்தது. காலைக் காற்றின் இதத்தில் கண் மூடித் தூங்கினார். அவருக்கு பேத்தி மஞ்சுவின் செந்தாமரை நிற முகம் ஞாபகத்துக்கு வந்தது. அவள் கல்யாணத்தை முடித்துவிட்டு, அவள் பெற்றோர் காசி யாத்திரைக்குச் சென்று விட்டனர். இவரால் பேத்தியின் கல்யாணத்துக்குப் போக முடியாமல் போனது. விஷ ஜுரம். இப்போது நான்கு மாதங்கள் கழித்து அவள் குடித்தனம் பண்ணும் பாங்கைப் பார்க்கப் போகிறார்.



"நீயும் வாயேன் லக்ஷ்மி..." என்று மனைவியைக் கூப்பிட்டார். "மார்கழி மாசப் பனியிலே என்னாலே இன்னொரு வீட்டிலே சங்கடப்பட முடியாது. வெந்நீர் வேணும். ராத்திரி டிபன் வேணும். இன்னும் எத்தனையோ விதத்திலே என்னாலே மஞ்சுவுக்குக் கஷ்டம் வரும். நீங்க போயிட்டு வாங்க. பேத்தியைக் கேட்டதாகச் சொல்லுங்க..." மனைவியை அதற்குமேல் வற்புறுத்தாமல், தான் மட்டும் கிளம்பினார்.

டெஸ்ட் ட்யூப் பேபி எல்லாம் வேணாம்னேனே! கேட்டியா?



வீட்டைக் கண்டு பிடிக்கக் கொஞ்சம் கஷ்டப்பட்டார். கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்த படி ஒரு பையனிடம் விசாரித்தார்.

"தாத்தா..." அவர் விசாரித்துக் கொண்டிருந்த வீட்டின் உள்ளேயிருந்தே மஞ்சு



# ஊசிமுனை உறவுகள்

துள்ளிக் கொண்டு வந்தாள். பார்த்தசாரதி பாசம் பொங்க மஞ்சுவைப் பார்த்தார்.

"நல்லாயிருக்கியாமா?"

"ஜம்முன்னு இருக்கேன் தாத்தா. பாட்டி ஏன் வரலை?"

"அவளுக்குக் கண் பார்வை பத்தலை. அதான் என்னை மட்டும் அனுப்பி வச்சா..."

"பொய்யா சொல்றீங்க...? இருங்க, நான் பாட்டியைப் பார்க்கும்போது வச்சுக்கறேன். என்னங்க, எங்க தாத்தா வந்திருக்காங்க."

"வாங்க, நமஸ்காரம்..." என்றபடி வந்தவனைப் பார்த்தார் கிழவர். நன்றாகத்தான் இருந்தான். களை பொருந்திய முகம். ஆரோக்கியமாக இருந்தான். நிறம் கொஞ்சம் மட்டுதான். ஆனால் ஏதோ ஒரு ஸ்நேகத் தன்மை அவனிடம் ஒளிந்திருந்தது. பேத்திக்குப் பொருத்தமானவன்தான். லட்சுமியிடம் சொன்னால் மகிழ்வாள்.

“வினைத் தொகை, பண்புத் தொகை கூட உங்க பையனுக்குத் தெரியலியே; எப்படி பாஸ் பண்ணினான்?”

## ஜோசப் காமராஜ்

மஞ்சு ஓயாமல் பேசினாள். கோபமாக, கனிவாக, என்று வெவ்வேறு முகம் காட்டினாள். கணவனும் மனைவியும் எப்படிப் பழகுகிறார்கள் என்று வந்த நாளிலிருந்தே கவனிக்கத் தொடங்கியிருந்தார். மஞ்சு நன்றாகத்தான் கணவனை உபசரித்தாள்.

“நல்லாச் சாப்பிடுங்க... இப்படித்தானா மூணு இட்லியோடு எந்திரிக்கறது..?” தாய்ப்பாசம் காட்டினாள்.

“என்னங்க, பைக்கை சரி பண்ணக் கூடாதா? தினம் இந்த உதை உதைச்சா கால் என்னத்துக்காகும்?” கரிசனம் காட்டினாள்.

“அட... இந்த ஷர்ட்டிலே ராஜா மாதிரி இருக்கீங்க.” காதலாய்க் கசிந்துருகினாள். இது வெளிச்சப் பகுதி. நெருடலையும் கவனித்தார்.

“மஞ்சு, இன்னிக்கு என்ன சமையல்?”

“ரசமும் பொரிகடலை துவையலும் தான்.”

“சே... சாம்பார் வைக்கக் கூடாதா? எனக்கு ரசம் பிடிக்காதுன்னு தெரியாதா?”

“உங்க சம்பளத்துக்கு இதுதான் கட்டுப்படியாகும். பருப்பு என்ன விலை விக்குது தெரியுமா? சாம்பார் அடிக்கடி வச்சா, திருவோடு ஏந்த வேண்டியது தான்.” நறுக்கென்று அவள் குத்தின ஊசியை அவன் சிரித்துக் கொண்டே ஏற்றான். “சரி, சோறாவது கிடைக்குமா என் சம்பளத்திலே?” என்று ஜோக் அடித்தான்.

கிழவர் கண் கலங்கிவிட்டார். இப்படித்தான் எல்லாவற்றிற்கும் அவன் சம்பளத்தில் வந்து முடித்தாள்.

“மஞ்சு புறப்படு... புறப்படு... கல்யாண ரிசப்ஷனுக்கு.”

“நீங்க போங்க போதும். ஒரு நல்ல பட்டுப் புடைவை வாங்க முடியலை உங்க சம்பளத்திலே... எனக்கு எதுக்கு கல்யாணம் கச்சேரின்னு ஆசையெல்லாம்..”


“ஓ.கே.” அவன் சிரித்தபடி போனான்.

இன்னொரு நாள் இரவுச் சாப்பாட்டின்போது -

“ராத்திரி சாதம் சாப்பிடறது பெரிய தண்டனையா இருக்கு; சூடாய் இரண்டு தோசை கிடையாதா எனக்கு?”

“இங்கே என்ன ஃப்ரிட்ஜா இருக்கு? மாவை அரைச்சு நாலு நாள் வச்சிருந்து சாப்பிட. பேசாம முழுங்குங்க. வர்ற வருமானத்துக்குள்ளே குடித்தனம் பண்ண வேண்டாமா?” என்றான். இரண்டு தோசை கேட்டதற்கு இத்தனை விளக்கம் தேவையா? இல்லை ஃப்ரிட்ஜ் இல்லை என்று குத்திக்காட்டுகிறாளா? கிழவர் மனசு விழுந்துவிட்டது. அவர் கிளம்பிவிட்டார். நம்மையே பாரமாக நினைத்துக் கொண்டிருக்கிறானோ என்னவோ... லட்சுமி கெட்டிக்காரி, அதான் வராமல் இருந்துவிட்டாளோ!

கிராமத்துக்கு வந்து சேர்ந்தபோது நிம்மதியாக உணர்ந்தார். வீட்டுக்குள் காலடி வைத்தபோது, லட்சுமி அவருக்கு முதுகைக் காட்டிக் கொண்டு விளக்கு ஏற்ற தீப்பெட்டியுடன் குனிந்திருந்தாள். அவளைப் பார்த்துக் கொண்டே நடந்த



“என்னங்க... நம்ம வீட்டுக்கு இன்னிக்கு சாயந்தரம் ஆறு மணிக்கு சுனாமி வரப் போவுது!”

"பெருந்தொகை செலவழிச்சேன்ல."



தில் 'டமார்' என்று மண்ணெண்ணெய் டின்னை தட்டிவிட்டுவிட்டார். எண்ணெய் பூராவும் தரையில் சிந்திவிட்டது.

"அறிவிருக்கா உனக்கு? மனுஷன் நடக்கிற வழியில் வைச்சிருக்கியே..." என்று வழக்கம்போல் கத்த வாயெடுத்த அவர், சட்டென்று அடக்கிக் கொண்டார். மஞ்சு மாதிரி கத்த வேண்டாமே! சத்தம் கேட்டுத் திரும்பிய லட்சுமி, "வாங்க... வாங்க... பத்தே நாளுக்குள்ளே திரும்பிட்டீங்களே... கிடக்கட்டும், நான் சுத்தம் பண்ணிடறேன். கால் கழுவிட்டு வாங்க. சாப்பிடலாம். சூடா தோசை சுட்டுப் போடறேன்..." என்று கனிவாகப் பேசினாள். முதல் முறையாக அவர் கண்களில் நீர் சுரந்தது.

இனி லட்சுமி தோசை வார்க்க விறகு அடுப்பைத்தான் பற்ற வைக்க வேண்டும். எல்லாம் அவர் அஜாக்கிரதையால் வந்ததுதான். இந்நேரம் மஞ்சுவாக இருந்தால், அவர் மண்ணெண்ணெயைக் கொட்டியதற்கு "இங்கே எல்லா வீட்டிலேயும் காஸ் அடுப்பு வந்தாச்சு. உங்க சம்பளத்திலே வாங்க முடியுமா? உள்ள மண்ணெண்ணெயையும் கொட்டிப்புட்டீங்க... இந்த விறகு அடுப்போடு யார் போராடறது?" என்று வார்த்தைகளைக் கொட்டிருப்பாள்.

சாப்பிட உட்கார்ந்தார்.

"மஞ்சு எப்படி இருக்கா?" என்று லட்சுமி கேட்டாள். அவர் எல்லாவற்றையும் கொட்டினார். கடைசியில் சொன்னார், "இரண்டு தோசை சுட்டு போடக் கூடவா முடியாது. அதுக்குப் போய் பொருளாதார இயலாமை பற்றிப் பேசறா... மனசை குத்துறா..." சொல்லிவிட்டு லட்சுமி முகத்தையே பார்த்தார். லட்சுமி சிரித்தாள். அதில் அவரை 'புரியாதவரா இருக்கீங்களே' என்கிற பாவம் இருந்தது. சுருக்கமாகச் சொன்னாள்.

"இப்பவெல்லாம் தாம்பத்தியத்துக்கு காசும் முக்கியம். ஆம்பளை அட்ஜெஸ்ட் பண்ணிக்கறதும் முக்கியம்."

லட்சுமி போர்த்திவிட அவர் படுத்தார். தூக்கம் வரவில்லை. அவரிடம் என்றும் பிரமாதமாகக் காசிருந்ததில்லை. எந்த நவீன சாமானும் அவர் வாங்கிப் போட்டதில்லை. ஆனால் சந்தோஷத்துக்குக் குறைவில்லை. மஞ்சு புருஷன் போல் மனசில் ஊசி வாங்கிக் கொண்டே சிரிக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்ததேயில்லை. லட்சுமி என்ன சொல்ல முயன்றாள், யோசித்தார். 'மனைவி மட்டுமே அட்ஜெஸ்ட் பண்ணிய அந்தக் காலம் முடிந்து விட்டதைய்யா' என்று மறைமுகமாகச் சொல்கிறாளோ! அவர் கண்களை மூடினார். கண்ணுக்குள் ஈரம் கசிந்தது.


அடுத்தவர் காலை மிதித்துக் கொண்டு, எனக்கு வலிக்கவேயில்லையே என்பது போல் லட்சுமியை நசுக்கிக் கொண்டேயல்லவா சந்தோஷம் அனுபவித்து வந்திருக்கிறார், தன் சௌகர்யம் மட்டுமே குறியாக. முதல் முதலாக குற்ற உணர்வில் தவித்தார். ●

"டீவியில்கூட சொல்லலையே"


"உங்க அம்மா வர்றதையெல்லாம் அதில் சொல்ல மாட்டாங்க!"

**ஆர். ராஜகோபால்**


# இப்படி இருந்தா ஜாலிதான்!



சில நொடிகளில் இன்ஸ்டன்ட் மேக்-அப்!





எளியமுறை எக்ஸ்-ரே!




ஜீன்ஸோடு பில்ட்-இன்னா ஒரு ஸ்டூலும் இருந்தா!

ஸ்கூல்பேக் நம்மைச் சுமந்தா ஜாலிதான்!






அட!




பெட்ரோல் விலையை சமாளிக்க!




தொகுப்பு : முகில்



தூங்கும்போதே எக்ஸர்சைஸ் + நேரம் மிச்சம்!




பாத்ரூம்குள்ளேயே சர்ஃபிங்!




டிராபிக் ரூல்ஸை மதிக்காட்டி 'டமால்'தான்!



துட்டுள்ள ப்ளேயர்
இப்படியும் விளையாடலாம்!



# வெற்றிகரமான நூறாவது...



மரத்தை வச்சவன்
தண்ணீர் ஊற்றுவான்
மந்திரி வருவாரா தினமும்!

தொழில் போட்டி
ஆங்கில டியூஷன் போகிறார்
தமிழ்ப்படப் பாடலாசிரியர்.

மெகா சீரியல் நேரம்...
பார்வையாளர்களைக் கட்டிப்போட்டது
கொள்ளைக் கும்பல்.

பஸ்ஸுக்குக் காத்திருந்தேன்
எதிர்பார்த்த நம்பர் வந்தது
எதிர்த் திசையில்!

இளநீரில் இரண்டு ஸ்ட்ரா...
காதலை நினைத்தாள் அவள்
பர்ஸை நினைத்தான் அவன்.

அண்மையில் வெளியான
படத்தின் போஸ்டர் :
வெற்றிகரமான 100வது ஆள்!

ஆட்டோக்கள்...
பிரசவத்துக்கு இலவசம்,
சாலைகள்...
பிரசவமே இலவசம்!

மேடையில் தெலுங்கு கீர்த்தனை,
வெறுங்கையுடன் திரும்பிய
பாகவதருக்கு
வீட்டில் கிடைத்தது
தமிழ்ப்பாட்டு.

அடுத்த தொகுதியில்
இடைத் தேர்தல்.
அமைச்சரிடம் கேட்டான் மகன் :
நம்ம தொகுதியில் எப்போ?

சிறந்த ரசிகர் விருது...
எல்லாப் படத்துக்கும்
கடைசி வரை இருக்கும்
ஆபரேட்டருக்கு!

- கோவி. லெனின்

கடற்கரையில்
காதலில் மூழ்கும் காதலர்கள்...
வேடிக்கை பார்த்தது கடல்

கருணை உள்ள மருமகள்
மாமியாரை வாக்கிங் போகச்
சொன்னாள்...
தினமும் கடற்கரைக்கு.

நோயுற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம்...
டாக்டர்களுக்கு.

காவலருக்கு லஞ்சம்
கொடுத்தபின் புரிந்தது...
'அடிக்கிற கை அணைக்கும்'



**அ**ளவு மட்டுமா
குறைகிறது—
மரியாதையும்தான்
ரேஷன்கடையில்...

- சீர்காழி சிற்பி,
சென்னை

**பா**ர்க்க நினைத்த சாமியார்
பக்தனைத் தேடி வந்தார்...
சிறைச்சாலைக்கு!

- டாக்டர் ஆகுரா, நெற்குன்றம்

**சா**லையில் நிற்குது காளை
காவலர் கலவரமாய் நெளிகிறார்
முதல்வர் வரும் வேளை

- கன்னிக்கோயில் இராஜா

**த**லைகுனிந்தபடி மகள்
கண்ணீர் சிந்தியபடி தாய்
கோபம் பொங்கியபடி தந்தை
கையில் அரிவாளுடன் சகோதரன்
கிசுகிசுத்தபடி ஊர்க்கூட்டம்
டிராயியில் காமிரா...

- நாமக்கல் பாலு

ஸ்டீஃபன், உண்மையாகவே தன் மனைவியைக் காதலிப்பவன். எப்படி ஜேனட்டுக்கு, அவனை விட்டால் வேறு உறவு கிடையாதோ, அது போல அவனுக்கும் ஜேனட்டை விட்டால் நாதி கிடையாது.

ஜேனட்டுக்காவது அம்மா என்று ஒருத்தி எங்கேயோ இருக்கிறாள். இவனுக்கு அதுவும் கிடையாது. நினைவு தெரிந்த நாளிலிருந்து சர்ச் கான்வென்ட்டில் வளர்ந்தவன்.

ஜேனட் கிடைத்தது அவனுக்குப் புதையல் கிடைத்தது மாதிரி!

குழந்தை வேண்டும் என்கிற ஆசையெல்லாம் ஜேனட்டுக்குத்தான். அவனுக்குப் பெண்டாட்டியே போதும்.

ஆனாலும் ஒரு குழந்தைக்காக அவள் உருகுவதைக் காணச் சகிக்காமலேயே அவனும், 'மைக்ரோ ஓவனில்' வைத்த ஐஸ்க்ரீமாய் உருகிக் கொண்டிருந்தான்...

அப்படிப்பட்ட மனைவி ஆசைப்பட்டு, அவனால் வாங்கித் தர முடியாதது, அம்மாவை மட்டும்தான்!

அது என்னவோ கருவுற்றதிலிருந்து ஜேனட்டுக்கு விநோதமான, விபரீதமான ஆசையெல்லாம் ஏற்படுகிறது.



ஒரு நாள் இப்படித்தான்... 'இன்டியன் குரோஸரி'யில் - காய்கறிகள் அடுக்கப்பட்டிருந்த பகுதிக்கு வந்து நின்று, 'டியர், எனக்கு அது வேண்டும்' என்று ஒரு நீளப் புடலங்காயைச் சுட்டிக் காட்ட, ஸ்டீஃபன் விழிகள் பிடுங்கி விழும்படியாக விழித்தான்.

ஆனால் அவளோ பரவசமாய், ஒரு புடலங்காயை எடுத்து முத்தமிட்டு, மார்புறத் தழுவிக் கொண்டாள்.

**'நான் எரிமலை; நீ பனிமலை' னு ஜோரா போஸ் தராங்களே, இவங்க அஜித் ரசிகைகளா?**



ஒரு நாள் இவளும், ப்ரியம்வதாவும் இதே கடைக்கு வந்தபோது, ப்ரியா இதை வாங்கியிருக்கிறாள்.

"ஹேய்... இது என்ன...?"

"ஸ்நேக் கார்ட்..."

"இவ்வளவு பெரிசை எப்படி குக் பண்ணுவே?"

"கட் பண்ணித்தான். நாளைக்குக் கொண்டு வர்றேன் பாரு..."

சொன்னவள், மறு நாளே ஆபீசுக்கு புடலங்காயைச் சமைத்துக் கொண்டு வந்தாள்.

"இதுக்குப் பேரு புடலங்காய் பொரிச்ச குழம்பு..."

"பொரிச்ச... வாட் இஸ் த மீனிங் ஆஃப் பொரிச்ச...?"

"பொரிச்சன்னா... ஃப்ரைய்டுன்னு அர்த்தம். ஆனா இது ஃப்ரைய்டு இல்லே.

எதுக்காக இப்படிப் பேரு வந்ததுன்னு தெரியல்லே. அம்மாவைத்தான் கேட்கணும்..."

ஜெனட், தான் கொண்டு வந்திருந்த எக் பாஸ்தாவில் நாலு ஸ்பூன் பொரித்த குழம்பைக் கலந்து கொண்டு சாப்பிட்டு, கண் மூக்கு, இப்படி பஞ்ச துவாரத்திலிருந்தும் நீர் பெருக்கெடுக்க, சிநேகிதியின் கரங்களைப் பிடித்துக் குலுக்கினாள்.

"வாவ்... ஃபென்டாஸ்டிக்பா..."

மேற்கண்ட சம்பவம் நடந்து ஒரு வருடத்துக்கு மேலாகி விட்டது. இப்பொழுது, இந்திய அங்காடியில் புடங்காயைப் பார்த்ததும், பொரித்த குழம்புக்கு அவளது நாக்குப் பறந்தது...

"ஸ்டீஃபன் இதை வாங்கு."

"இதை எப்படி குக் பண்றதுன்னு தெரியாதே..."

"எனக்குத் தெரியும். நீ வாங்கு..."

மனைவி சொல்லி எதையும் வாங்காமல் இருந்ததேயில்லை ஸ்டீஃபன்.

டல்லாஸ் நகரத்தில்

# மாம், ஃப்ரம் இண்டியா

MOM from INDIA



புடலங்காய் - அதுவும் நீசாசாசாசாளப் புடலங்காய் கிடைப்பதே அபூர்வம். அதை வாங்கி, ஒரு கையில் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையால் தன் கர்ப்பிணி மனைவியை அணைத்துக் கொண்டு, அவன் நடந்த அழகைப் பார்த்த இந்தியப் பெண்கள் எல்லாரும் விஷமமாய்ப் புன்னகை செய்தார்கள்.

"ஜேன்... இதை எப்படி சமைக்கறதுன்னு உனக்குத் தெரியுமா?"

"எஸ்... ஐ நோ..."

இப்படி பிரமாதமாய் தலையாட்டியவள், வீட்டுக்கு வந்து, ப்ரியம்வதாவிடமிருந்து வாங்கிய புடலங்காய் பொரித்த குழம்பு ரெசிபியை டைரியெல்லாம் குடாய்ந்து தேடியதுதான் மிச்சம்.

"பேசாம அவகிட்டயே கேட்கலாமே..."

ஸ்டீஃபன் ஃப்ரியம்வதாவுக்கு ஃபோன் மேல் ஃபோன் செய்தான். எதிர்முனையில் அவளது மாமியார் ராஷ்மி தான் எடுத்தாள்.

ப்ரியம்வதா, தியாகராஜ ஆராதனைக்காக 'க்ளீவ் லேண்ட்' போயிருந்தாள்.

கடைசியில் ஜேனட், பொரிச்ச குழம்பின் சுவை பற்றி ஒரு குட்டி லெக்சரே அடிக்க...

ஸ்டீஃபன்தான் சமைத்தான்.

'ரெஸிபி டைரியைத் தேடியதில் ஜேனட் இடுப்பைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள்...

"ஸ்நேக் கார்டை ஸ்மால் ஸ்மால் பீஸஸ்ஸா கட் பண்ணு..."

பண்ணினான்.

"எதிர்பாராத விதமா வெளியூர்லே இருந்து சொந்தக்காரங்க வந்துட்டாங்க... இன்னிக்கு ராத்திரி தங்கறதுக்கு மட்டும் உன் கல்லறைல கொஞ்சம் இடம் கிடைக்குமா?..."

- கே.ஆனந்தன்



"அதுல கொஞ்சம் பெப்பர் ஸ்மெல் வந்தது. அப்புறம் கிரேவியா இருந்தது... அப்புறம்..."

"ஓ.கே... ஓ.கே... நான் செஞ்சு கொண்டு வர்றேன் பார்..."

ஸ்டீஃபன் மிகுந்த கவனமெடுத்துக் கொண்டு, சிரமேற்கொண்டு, சுமார் ஒரு மணி நேரம் மைக்ரோ ஓவனுடன் மல்லுக்கு நின்று - கடைசியில் பெரிய பீங்கான் தட்டு நிறைய புடலங்காயை சமைத்துக் கொண்டு வந்து நின்றானே...

ஆனால், ஜேனட்டுக்குத்தான் அது என்னவென்றே புரியவில்லை.

"என்ன ஸ்டீஃபன் இது?"

'தெரியலே... பொழிச்ச குழம்பு... மவுத் வாட்டரிங் டிஷ்..."

"ஹவ் நைஸ்... எனக்காக என்னவெல்லாம் செய்யறே..."

"அதை விடு. பொழிச்ச குழம்பு... எப்படி?"

"இது... அது இல்லே. ஆனா இதுவும் ரொம்ப நல்லாயிருக்கு..."

ஜேனட், குழந்தை போல அவன் மடியில் படுத்துக் கொண்டே சாப்பிட்டாள்.

ஸ்டீஃபனுக்குத்தான் ஆதங்கம். அவள் கேட்ட பொரிச்ச குழம்பை செய்து தரவில்லையே என்று...

"ப்ரியா கிட்ட அந்த ரெஸிபியைக் கேளேன்..."

"நோ யா... நீ செஞ்சதும் எனக்கு ரொம்பப் பிடிச்சிருந்தது... மேட் வித் லவ்..."

மறுபடியும் கண்கலங்க, உதடு துடிக்க...

ஸ்டீஃபனுக்கு, ஜேனட்டின் இந்தப் பாசம்தான் பெரிய பொக்கிஷம்...

அமெரிக்காவில் எங்கே காண முடியும் இப்படி?

முடிந்தால் குழந்தையையும் தன் வயிற்றில் வைத்து சுமக்கத் தயார்தான்...

என்ன செய்வது... என்னென்னவோ விஞ்ஞான விந்தைகளை எல்லாம் செய்யும் அமெரிக்க விஞ்ஞானிகள் - இதை மட்டும் 'நம்மாலே முடியாதுபா' என்று 'ஜூட்'விட்டு விட்டார்களே...

ஜேனட்டுக்கு கருவுற்றதிலிருந்து இந்திய 'சமையலும், இந்தியக் கலாசாரமும் ரொம்பவும் பிடித்துப் போய்

விட்டது...

கர்ப்பிணி மனைவியின் மசக்கைக்காக, ஸ்டீஃபன் அவளை 'இன்டியன் ரெஸ்டாரண்ட்டுக்கும், 'மெட்ராஸ் பெவிலிய'னுக்கும் அழைத்துப் போனான்.

இந்தியாவுக்குப் போன தனது நண்பனிடம் சொல்லி, புடைவையும், ரெடிமேட் ரவிக்கையும், ஸ்டிக்கர் பொட்டும் கூட வாங்கித் தந்து, மனைவியை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினான்.

ஆனால் அவள் இப்பொழுது கேட்கும் வஸ்து... அவனால் வாங்கித் தர முடியாததாக இருக்கிறதே...

அம்மா வேண்டும் என்கிறாளே...

"நான் கூப்பிட்டுக் கூப்பிட்டு அலுத்துட்டேன் ஸ்டீஃபன். நீ எங்கம்மாவை நேரே போய் பார்த்து கூப்பிட்டுப் பாரேன்..."

ஜேனட்டின் வார்த்தையைத் தட்டாது அவன் டலாஸ்ஸிலிருந்து நியூயார்க் போய் வந்ததுதான் மிச்சம்.

வரவேற்பில் குறைச்சலில்லை.

ஆனால் –

அவளும் ஏழுமாத கர்ப்பமாக இருந்தாள்!

"ஹேய்... உன் ஒய்ஃபுக்கு இது எத்தனை மாசம்...?"

ஸ்டீஃபனிடம் கேட்ட, அவளது மாமியாரின் கணவன், மேற்கொண்டு அவனைப் பேசவிடாமல், தனது மனைவியின் பேறுகாலத்துக்கான ஏற்பாடுகளையும், பயிற்சிகளையும் சொல்லிக் கொண்டே போனான்.

"ஹேய்... ஹனிமூன் ஆல்பம் ரெடியா எடுத்து வச்சுக்க. அப்பத்தான் லேபர் பெயின் சமயத்துல ஆல்பத்தைக் காட்டி ஒய்ஃபை ரிலாக்ஸ் பண்ணலாம்."

"அவளுக்கு நாப்பத்தி மூணு வயசுதான் ஆறது. இதுக்கே ரொம்ப நாள் கழிச்சு கன்ஸீவ் ஆகியிருக்கறதா கவலைப்படறா... நீ சொல்லிட்டுப் போ... அமெரிக்கர்களுக்கு ஐம்பது வயசுக்கு மேலதான் லைஃபே ஸ்டார்ட் ஆறதுன்னு..."

அவன் தன் மாமியாரைப் பார்த்தான். அவளோ வெட்கத்தில் கன்னம் சிவக்க, ஸ்வெட்டர் பின்னிக் கொண்டிருந்தாள்.

இவளிடம் போய், 'பெண்ணின் பிரசவத்துக்கு வாயேன்' என்று எப்படிக் கூப்பிடுவது?



"டைரக்டர் ரொம்பக் கோபமா இருக்காரே, ஏன்?"

"இதுவரை இருபது மெகா சீரியல்கள் எடுத்ததுக்காக அவருக்கு 'வாழ்நாள் வேதனையாளர் விருது' வழங்குவதாக அறிவிச்சிருக்காங்களாம்!

– கேஜிஎஸ். கோவிந்தன்

**மௌ**னமாய்த் திரும்பி வந்த கணவனை, ஏமாற்றத்துடன் பார்த்தாள் ஜேனட்.

"மாம் என்ன சொன்னா...?"

"உம்... உனக்குத் தங்கை வேணுமா, தம்பி வேணுமான்னு கேட்கச் சொன்னாங்க..."

"ஓ மை காட்..."

ஜேனட், தன் நெஞ்சில் கை வைத்தபடி அழத் தொடங்கினாள்.

ஸ்டீஃபன் அவளைத் தேற்றும் வகை தெரியாமல் கூறினான்.

"ஜேனட்... என் அன்பே...உனக்காக ஒரு அம்மாவை எத்தனை ஆயிரம் டாலர்கள் செலவழித்தாவது வாடகைக்கு எடுக்கிறேன்... இல்லையின்னா விலை கொடுத்தே வாங்கிடலாம்..."

"அதெல்லாம் நடக்கற காரியமில்லே... வாடகைக்கோ, விலைக்கோ கார் வேணா கிடைக்கும். அம்மா கிடைக்க மாட்டா..."

ஜேனட் விம்மினாள்...

"கவலையை விடு. நான் கடத்திட்டாவது வருவேன். சரி, சிரியேன்..."

ஸ்டீஃபன் தனது பச்சைக் கண்கள் பளபளக்க - இச்சைக்குரியவளை ஆசையாய்ப் பார்த்தான்.

"ஓ மை டியர்..."

- அவள் இரவுப் பொழுதுக்கான ஆலாபனையைத் தொடங்கினாள்...

(தொடரும்)

# தலை அலங்காரம் புறப்பட்டதே...

## (அம்பிகாபதி மன்னிக்க...)







"எப்பப் பார்த்தாலும் எதிர்காத்துல சைக்கிளை வேகமா மிதிச்சுக்கிட்டு வந்த மாதிரியே தலை கலைஞ்சிருக்கணும். மாட்டுப் பொங்கலுக்கு மாட்டுக் கொம்புக்கு அடிச்சு மிச்சமிருக்கிற பெயிண்டை வழிச்சு, தலைக்கு அடிச்ச மாதிரி கலர்கலரா தெரியணும். இப்ப இதுதான் வெளிநாட்டுல எல்லாம் லேட்டஸ்ட் ஹேர் ஸ்டைல்! நம்ம ஊர்ல எப்படி?" என்று முன்னணி ஹேர் ஸ்டைலிஸ்ட்டும் கலரிஸ்ட்டுமான கே. கிஷணிடம் பின்னல் போட்டோம்.

சென்னை, அபிராமபுரம் மூன்றாவது தெருவில் உள்ள 'ப்ளூ ஃபிளேம்ஸ்' யூனிசெக்ஸ் ஹேர் ஸ்டுடியோவின் நிர்வாக இயக்குநரான இவர், ஐரோப்பாவின் மிகப் பிரபலமான சிகை அழகு சாதன நிறுவனமான 'வெல்லா'வில் பயிற்சி பெற்றவரும்கூட! (நாம் சென்றிருந்த அன்று, நடிகை கௌதமி, சுபா பூஞ்சா, கராத்தே ஹூசைனி போன்றவர்களுக்கு தலைக்கு மேல் வேலை பார்த்திருந்தார்)





படம் : ஸ்ரீஹரி

• கே.கிஷண்

"இன்றைய தேதிக்கு, ஹேர் ஸ்ட்ரெயிட்டனிங்கும், ரீ பாண்டிங்கும்தான் இளசுகளிடம் மிகப் பிரபலமாக உள்ளன. நெளி நெளியான கூந்தல் உடையவர்கள், இரண்டரை மணி நேரம் பொறுமை காத்தால், பட்டு இழை போன்ற, நேராக்கப்பட்ட முடியுடன் திரும்பிச் செல்லலாம். முதலில் கூந்தலில்

வெல்லா ஸ்ட்ரெயிட் க்ரீம் போட்டு ஊற வைப்போம். கழுவிய பிறகு, நியூட்ரலைஸர் உபயோகிப்போம். கடைசியா, அயர்ன் செய்து விட்டால், சுருள் எல்லாம் மறைந்து, முடி நேராகி விடும். இதற்கு எழுநூற்று ஐம்பதிலிருந்து மூவாயிரம் ரூபாய் வரை செலவாகும். ஆனால் மினுமினுப்பான, துள்ளும் கூந்தலழகு இலவசம்!

"இன்னிக்கு எங்கக்கிட்டே வர்ற இளைஞர்கள், நூற்றுக்கு நூறு பேர், ரீ பாண்டிங் கேட்டுதான் வர்றாங்க. இதுவும் கூந்தலை நேராக்கும் முறைதான். ஆனால் இது ரொம்பவே அட்வான்ஸ்ட் டெக்னிக். அதிக பளபளப்பு, அதிக வால்யூம் என அசத்திவிடும். கூந்தலின் இழைகள் ஈரத் தன்மையுடன் வரிவரியாக டாலடிக்கும்.








"ஆசை ஆசையா இதையெல்லாம் செஞ்சுட்டு, கலரிங் செய்யாமல் விட்டா எப்படி? பிளாக், ப்ரவுன், பிளான்ட், ரெட், பர்கண்டி என ஏகப்பட்ட நிறங்கள் இருக்கு. வாடிக்கையாளரின் வயது, தோற்றம், சரும இயல்பு, வேலை போன்றவற்றைக் கொண்டு, நிறத்தைத் தேர்வு செய்வோம். கலரிங் என்றதும் 'டை' பூசுவது என்று நினைக்காதீங்க. ஹேர் கலரிங் என்பது தனிக் கலை. ஹைட்ரஜன் ஃபெராக்ஸைட் ரசாயனத்தை மிக கவனத்துடன் கையாள வேண்டும். ஒரே ஒரு கற்றை முடிக்கு மட்டும், முன் உச்சிக்கு மட்டும், ஓரங்களில் இலேசாக என பல வண்ணங்களை மிகுந்த தேர்ச்சியுடன் பூச வேண்டியிருக்கும்" என்கிறார்.

"இப்ப, லேட்டஸ்ட் ஹேர் கிரேஸ் என்ன?"

"லேயர் கட், ஸ்டெப்கட், ரேஸர் கட் போன்றவை இளம் பெண்களிடமும், ஸ்பைக், அர்பன், ஃபங்க், ஃப்ரீக் போன்றவை வாலிபர்களிடமும் பிரபலமாக உள்ளன" என்கிறார் கிரியேடிவ் ஹெட் காயத்ரி கிஷன்.

"ஃபேஷன் மோகத்தில் இப்படியெல்லாம் புரட்டி எடுத்தால், தலை முடி பாழாகாதா?"


"தகுந்த முறையில் பராமரித்தால், முடி பாழாகாது. இல்லாவிட்டால், ஆஷ் பிளாண்டில் ஐஸ்வர்யா ராயும், கோல்டன் பிரவுனில் கரீனா கபூரும் ஹேர் கலரிங் செய்து கொள்வார்களா?"

பாயிண்டு டோய்!

- ஐஸ்




# புக் பேங்க்













### குறுந்தொகை - (4-தொகுப்புகள்) பிரபாகர பாபு

**கா**லத்தின் கோலம் என்றாலும், கட்டாயம் என்றாலும், நம் பழைமை கூறும் பண்பாட்டையும், கலாசாரத்தையும் மறவாதிருக்க, தமிழைத் தமிழிலேயே மொழிபெயர்த்துத் தருவது நிகழ வேண்டியிருக்கிறது. காதலில் களவு காண்பதும், களவு காண்பதும் நம் இலக்கிய மரபு. நம் வாழ்வியலே வீரமும் காதலும்தான் என்பதைக் கூறும் சங்க இலக்கியப் பொக்கிஷத்தைத் திறந்து, பொருளெடுத்து ஒவ்வொன்றாய்க் காட்டி தமிழுக்குச் செய்திருக்கும் சேவை இந்நூல். அதையும் மரபுக் கவிதையில் விளக்கியிருப்பது இன்னும் சிறப்பு.

**- தமிழ்க்கவி பதிப்பகம், 3/1, சோலைத்தெரு, அயன்புரம், சென்னை - 23. விலை ரூ.280/-**

### பங்குச் சந்தையில் பணம் சம்பாதிப்பது எப்படி - வாதூலன்

'**ப**ங்கு மார்க்கெட்டா? அது பணம் படைத்தவர்கள் விளையாட்டுங்க, குளமா, குட்டையான்னு ஆழம் தெரியாம இறங்கினா, சுனாமி வந்து சுத்தமா துடைச்சுடும்' என்று பயந்தோடிப்போய் ஒதுங்குபவர்களுக்குத் தெம்பூட்டி, இதில் ஜெயிப்பதும், சம்பாதிப்பதும் ஒன்றும் பிரும்ம வித்தையில்லை என்று புரிய வைக்கும் நூல். ஷேர் சர்ட்டிபிகேட் எப்படிப் பெறலாம், என்னென்ன செய்யலாம், டி - மாட் கணக்கை எப்படித் துவங்கலாம், வேறு பெயருக்கு எப்படி மாற்றலாம் என்று பல சந்தேகங்களைத் தீர்க்கும் நூல்.

**- CBH பப்ளிஷர்ஸ், 20, விஜயலட்சுமி தெரு, மகாலிங்கபுரம், நுங்கம்பாக்கம், சென்னை - 34. விலை ரூ. 49/-**

### யாராவது வருகிறார்கள் - க.அம்சப்ரியா

**க**விதைகளை வரைய வைக்கும் நிகழ்வுகளும், மனிதர்களும் மனதில் காலத்துக்கும் அழியாத கற்சிலையாய், கல்வெட்டாய் அமர்ந்து கொள்வதும், அதைச் சொல்லில் வடிப்பதும் கவிஞருக்குத் தனி அனுபவம்தான். வாசிப்பவரையும் வந்து ரசிக்கச் சொல்கின்றன இந்தக் கவிதைகள். 'வண்ணத்துப்பூச்சி வரைய வற்புறுத்தியத்தில் உதிர்ந்த சிறகுகள்' என்று நொந்துபோன பிஞ்சு மனதையும், 'சாய்வு நாற்காலி அதட்டலும், ஆட்டமும் அற்று, அப்பா போய்விட்டதை'க் கூறும் சோகமும், 'விதைத்தது முளைக்காமல் சுவரில் முளைத்துச் சிரிக்கும் செடி' தரும் வியப்பையும், புரிகிற தமிழில் புனையப்பட்ட உரைக் கவிதைகள். காதல், சோகம், மரணம், அழுகை, கோபம், என மனதின் பல திசைகளையும தேடி அலையும் பறவைக் கூட்டம். உடன் நம்மையும் அழைத்துச் செல்லும் கவித் தொகுப்பு.

**- புன்னகை, 68, பொள்ளாச்சி சாலை, ஆனைமலை - 642 104. விலை 35/-**


**- விஷ்வக்**



சாதனை
சானியா!



செரீனா - போஸ்டர்



பனிப் பாலைவனம்

# அதிக மார்க் வாங்குவது எப்படி?

- ரமேஷ் பிரபா டிப்ஸ்

+

கதைகள்,
படக்கதைகள், ஜோக்ஸ்,
போட்டி, அனுபவங்கள்
இன்னும் பல...

மார்ச் 2005

ரூ.6/- மட்டுமே

# கோகுலம்

சிறுவர் மாத இதழ்

47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை-6000 32

# நாகேஷ் போட்ட

'அன்னை' நூறாவது நாள் விழாவுக்கு வர ஒப்புக் கொண்ட ஜெமினி வாசன் போட்ட நிபந்தனை என்ன தெரியுமா? "நான் வர்றேன். ஆனா ஒரு கண்டிஷன். அழைப்பிதழ் கொடுக்க நீங்க நேரில் வரக்கூடாது. வேண்டுமானால் உங்கள் மகன்களில் யாரையாவது அனுப்புங்கள்" என்றார் வாசன்.



* எம்.ஆர்.ராதா - நாகேஷ் (நானும் ஒரு பெண்)

அப்பச்சி மீது அவர் கொண்டிருந்த மதிப்புக்கும், மரியாதைக்கும் அது ஓர் உதாரணம்.

அழைப்பிதழ் தயாரானதும் 'அதை நான் கொண்டு போய் வாசனை நேரில் பார்த்துத் தர வேண்டும்' என்று அப்பச்சி முடிவு செய்தார்.

அப்போதெல்லாம் நானே காரை ஓட்டிக் கொண்டு போவேன். ஒரு ஃபியட் கார் வைத்திருந்தேன்.

வாசனைச் சந்திக்க நான் கிளம்பும் முன்பு, அப்பச்சி என்னை அழைத்தார்.

"இதோ பாரப்பா... நீ பாட்டுக்குக் காரை ஓட்டிக் கொண்டு போய் உள்ளே அவர் வீட்டு போர்டிகோவில் நிறுத்தாதே. உள்ளே நுழைந்ததும் வலது புறம் ஒரு வேப்ப மரம் இருக்கும். அதற்குக் கீழே நிறுத்தி விட்டுதான் போகணும்" என்று சொல்லி, மேலும் நான் அவரிடம் அழைப்பிதழைக் கொடுக்கும்போது என்ன சொல்ல வேண்டும், எப்படிச் சொல்ல வேண்டும் என்பதையெல்லாம் மிகத் துல்லியமாக எனக்குப் போதித் தனுப்பினார்.

வாசன் அவர்கள் மீது என் தந்தை கொண்டிருந்த மதிப்புக்கும் மரியாதைக்கும் இது ஓர் உதாரணம்.

அப்பச்சி சொல்லித் தந்தது மாதிரியே கொடுத்து விட்டு வந்தேன்.

வாசன் 'அன்னை' படத்தைப் பார்த்தார். பின்னர் விழாவில் பேசியபோது, படத்தின் சிறப்புகளை மிக அருமையாகப் பட்டியலிட்டார். "இது உண்மையில் வெள்ளிவிழா கொண்டாடவேண்டிய படம். நூறு நாட்கள் மட்டும் போனது ஏனென்று தெரியவில்லை" என்றார்.



* 'கண்ணா... கருமை நிற கண்ணா..' - விஜயகுமா

# சவால்!


அந்த நாள் ஞாபகம் – கதை

## திரையுலக நினைவுகள்

கலைஞர்களின் நடிப்பையும், படத் தயாரிப்பையும் மிகவும் பாராட்டிப் பேசினார். ஒரே தொழிலில் இருந்தாலும், அடுத்தவர் நல்ல படம் எடுத்து அது வெற்றிகரமாக ஓடினால், அது கண்டு மகிழும் கண்ணியமும், பரந்த மனதும் ஜெமினி அதிபருக்கு இருந்தது.

பின்னாளில் என் தந்தை உடல் நலம் குன்றி மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டிருந்தபோது, ஒரு நாள் சென்னைத் தொலைக்காட்சியில் 'அன்னை' படம் போட்டார்கள்.

மருத்துவமனை படுக்கையில் இருந்த படியே அந்தப் படத்தைப் பார்த்த



அப்பச்சி என்னிடம், "இப்படி கதையில் மட்டும் நம்பிக்கை வைத்து இப்போ இதுமாதிரி ஒரு படம் எடுக்க முடியு மாப்பா?" என்று மிகவும் ஆதங்கத்தோடு கேட்டார்.

'அன்னை'யை ஹிந்தியில் எடுக்க வேண்டும் என்று விரும்பினோம். பானுமதியைப் போல 'பர்ஃபார்ம்' பண்ணக்கூடிய நடிகையைப் போட வேண்டும். வித்தியாசமான ஒரு மதர் ரோலைச் செய்யக்கூடிய ஆற்றல் மிக்க நடிகை, ஹிந்தியில் யார் இருக்கிறார்கள் என்று ஆலோசித்தபோது, நர்கீஸ்தான் சரியாக இருக்கும் என்று பட்டது. ஏற்கெனவே எங்களுக்காக ராஜ்கபூருடன் 'சோரி...சோரி' படத்தில் நர்கீஸ் நடித் திருந்தார். எங்கள் நிறுவனத்தின் மீதும், அப்பச்சியின் மீதும் நர்கீஸுக்கு மிப் பெரிய மரியாதை இருந்தது. எங்களோடு அவருக்குப் பரிச்சயம் இருந்ததால், நர்கீஸை நேரில் சந்தித்து ஹிந்தி 'அன்னை'யில் நடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காக, நான் பம்பாய்க்குச் சென்று சுனில்தத்தைப் பார்த்தேன்.



**ஏவி.எம். சரவணன்**

பகலுணவு முடிந்தபின், 'அன்னை' ஹிந்தியில் நர்கீஸ் நடிப்பது பற்றி பேச் சைத் தொடங்கினேன்.

''அதெல்லாம் நீங்க நர்கீஸ்கிட்ட பேசுங்க... எனக்குக்



• 'சோரி... சோரி' - நர்கீஸ்

கொஞ்சம் வேலையிருக்கு'' என்று சொல்லிவிட்டு சுனில்தத் கிளம்பி விட்டார்.

நான் படத்தில் அந்த ரோலின் தன்மையையும், தமிழில் அந்தக் கேரக்டர் ரசிகர்களால் பெரிதும் பாராட்டிப் பேசப்பட்டதையும் விளக்கிச் சொல்லி, 'நீங்கதான் இந்த ரோல்ல நடிக்கணும். அப்பதான் பொருத்தமா இருக்கும்' என்று கேட்டுக் கொண்டேன்.

நான் சொன்னதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு நர்கீஸ் சொன்னார்:

"நான் இப்ப என் குடும்பத்தில் முழுக்க முழுக்க ஈடுபாடு கொண்டிருக்கிறேன். ஒரு ஹவுஸ்வொய்ஃபா இருக்கவே ஆசைப் படறேன். நீங்க இவ்வளவு தூரம் வந்து என்னைப் பார்த்ததுக்கு ரொம்ப நன்றி. என்னைக் கட்டாயப்படுத்தாதீங்க 'ப்ளீஸ்'' என்று கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக் கொண்டார். அவரைத் தவிர வேறு யாரும் அவ்வளவு கனமான ரோலைக் கம்பீரமாகச் செய்ய முடியாது என்றே எங்களுக்குத் தோன்றியது.

"சரிம்மா, நடிக்க வேண்ணாம். ஆனா அட்லீஸ்ட் படத்தை ஒரு தரம் பாருங்க. வேறு யாரை அந்த ரோலுக்குப் போட லாம்னு ஐடியா சொல்லுங்க" என்று நான் சற்று உரிமையுடன் கேட்டுக் கொண் டேன்.

"வேண்டாம் ஸார். நீங்க அந்தக் கேரக்டர் பற்றிச் சொன்னது நல்லா மனசில பதிஞ்சிருக்கு. நான் படத்தைப் பார்த்தா, ஒரு வேளை நடிக்கிறேன்னு சொன்னாலும் சொல்லக் கூடும். ஃபேமிலியில சீரியஸா இருக்கிற என்னு டைய மனநிலை மாறிப் போகக் கூடிய சூழ்நிலையை, நான் தவிர்க்கவே ஆசைப் படறேன். ஸாரி" என்று மிகவும் அன்பாக மறுத்தார். அப்படி அவர் மறுத்த விதம் நர்கீஸ் மீது நான் கொண்டிருந்த மதிப்பை மேலும் பல மடங்கு உயர்த்தியது.

நர்கீஸ் நடிக்கமாட்டார் என்பது உறுதியானதும், நாங்கள் நிருபாராய் என்ற நடிகையை பானுமதி ரோலில் நடிக்க வைத்து, ஹிந்தியில் 'அன்னை' படத்தை எடுத்தோம். 'லாட்லா' என்பது படத்தின் பெயர். என்ன இருந்தாலும் பானு மதியைப் போல் நிருபாராயால் நடிக்க முடியவில்லை என்ற உண்மை நிரூபண மாயிற்று.

ஒரு படத்தின் வெற்றிக்கு casting எனப்படும் நடிக நடிகையர் தேர்வு, எந்த அளவுக்கு முக்கியம் என்பதற்கும், சரி யான தேர்வு வெற்றியைத் தரும், இல்லா விடில் தோல்விதான் என்பதற்கும் தமிழ் 'அன்னை'யும் ஹிந்தி 'அன்னை'யும் (லாட்லா) சிறப்பான உதாரணங்களாக அமைந்தன.

## நானும் ஒரு பெண்

**வ**ங்காள மொழியில் 'பொது பெயரில் ஒரு நாடகம் சக்கைப் போடு போட்டு வந்தது. அது திரைப்படமாகவும் வந்தது. அந்தக் கதைதான் 'நானும் ஒரு பெண்'. அந்தக் கதையைப் படமாக எடுக்க அனுமதி வாங்கி வருவதற்காக நானும் ஏ.ஸி.திருலோகச்சந்தரும் கல்கத் தாவுக்குப் போனோம். அங்கே எங்கள் டிஸ்ட்ரிப்யூஷன் கம்பெனி பங்குதாரர் வி.ஏ.பி.ஐய்யர் எங்கள் நண்பராகவும் இருந்தார்.

நாங்கள் அங்கே சென்று பல இடங்


களைச் சுற்றிப்பார்த்தோம். ஒரு வீட்டை எனக்குச் சுட்டிக்காட்டி "இதுதான் முதலமைச்சர்' பி.ஸி.ராயின் வீடு" என்றார் வி.ஏ.பி.ஐய்யர். "முதலமைச்சராகவும் இருக்கிறார். அதே சமயம் தனது டாக்டர் தொழிலையும் பிராக்டிஸ் பண்ணுகிறார்" என்ற தகவலையும் தந்தார்.

'ஒரு முதலமைச்சரால் எப்படி இப்படி இரண்டு குதிரைகளின் மீது சவாரி செய்ய முடிகிறது' என்று வியந்து நாங்கள் பேசிக் கொண்டோம்.



• 'லாட்லா' - நிருபாராய்

காளிகோயிலுக்குச் சென்று பார்த்து விட்டு சற்று நேரம் முன்பு பார்த்து விட்டுப் போன அதே முதல்வர் இல்லம் வழியே திரும்பியபோது, மக்கள் அங்கே கூட்டமாகக் கூடியிருந்தார்கள். "முதலமைச்சர் பி.ஸி. ராய் குளியலறையில் வழுக்கி விழுந்து பலமாகக் காயம்பட்டு மரணமடைந்தார்" என்ற அதிர்ச்சியான செய்தி கிடைத்தது. நகரமே ஸ்தம்பித்துப் போனது. கடைகள், தியேட்டர்கள் எல்லாம் இரண்டு நாட்களுக்கு மூடப்



• ரங்காராவ் - விஜயகுமாரி

பட்டன. எனவே எங்களால் அந்தப் படத்தை உடனே பார்க்க முடியாமல், நிலைமை சகஜமாகும் வரை காத்திருந்தோம். பின்னர் படம் பார்த்து கதையை வாங்க ஒப்பந்தம் செய்து கொண்டு திரும்பினோம்.

மூலக்கதையில் எடுத்தவுடனே கதாநாயகன் கறுப்புப் பெண்ணோடு வாழ்ந்து வருவதுபோல் இருந்தது. அதில் சற்று மாற்றங்களைச் செய்தோம்.

நாகேஷ் பற்றி இந்த இடத்தில் நான் குறிப்பிட்டாக வேண்டும். எங்களது 'வீரத்திருமகன்' படத்திலேயே அவர் நடித்திருக்க வேண்டும். நல்ல ரோல் கொடுத்திருந்தோம். ஆனால் அப்போது பார்த்து அவர் ஒரு கார் விபத்தில் சிக்கி, முகமெல்லாம் காயம் பட்டு வீங்கிப் போய் விட்டது. வேறு வழியில்லாமல் அந்தக் கேரக்டரைச் சிறியதாக்கி வேறு ஒரு நடிகரை வைத்து முடித்தோம்.

'நானும் ஒரு பெண்' படத்தில் நடிக்க வேண்டும் என்று கேட்டபோது, சம்பளம் பத்தாயிரம் ரூபாய் வேண்டுமென்று கேட்டார் நாகேஷ்.

நான் ஐயாயிரம் ரூபாய் தரலாம் என்று முடிவு செய்திருந்தேன். அவர் பத்தாயிரத்திலிருந்து இலேசில் இறங்கி வரவில்லை. ரொம்ப நேரம் வாதாடி, கடைசியில் ஆறாயிரம் ரூபாய்க்கு ஒப்புக் கொள்ளச் செய்தேன்.

அப்போது நாகேஷ் ஒரு சவால் விட்டார்!

(தொடரும்)

# "நான் லேஸி

அடுத்த வாரம் கிரேஸி ஸ்பெஷல் என்று முடிவானவுடனே, ஆசிரியர் குழுவில் அனைவரின் ஒருமித்த கருத்தாக இருந்தது, கிரேஸி மோகனைப் பற்றிய ஒரு 'கலகல' கலந்துரையாடலுக்குத்தான்.



இயக்குனர் சரணின் அடுத்த பட டிஸ்கஷனில் மும்முரமாக இருந்தாலும் இதற்கு உடனே ஒப்புக் கொண்ட கிரேஸிமோகன், "அரசியல் கூடாது, மிக முக்கியமாக சங்கராச்சாரியார் பற்றி கேட்கவே கூடாது" என்பது போன்ற சிறு கண்டிஷன்களை வைத்தாலும், மந்தைவெளியில் புதிதாகக் கட்டிய அவரது வீட்டில், கல்லூரி மாணவர்களான ஸ்டாலின், கென்னடி, மைதிலி, சுமனா ஆகியோரைச் சந்தித்தபோது கலகலப்புக்குச் சிறிதும் பஞ்சம் வைக்காமல் உரையாடினார்.

**கென்னடி:** *(சற்றே அப்பாவியாக)* ஏன் சார், நீங்க பிறக்கும்போதே உங்களுக்கு 'கிரேஸி'மோகன்னு பேர் வைச்சுட்டாங்களா?

**கிரேஸி:** என்னப்பா இது, யாராவது பிறக்கும் போதே பேர் வைச்சு நெல்லுல 'கிரேஸி மோகன்'னு எழுதி விழாவெல்லாம் எடுப்பாங்களா? ஆக்சுவலி, நான் லேஸி மோகன். இன்னும் சொல்லப் போனா ஓஸி மோகன்! எனக்கு எல்லாம் கடவுள் கொடுத்ததுதான். Take things easy, Life is crazy- இதுதான் என்னோட பாலிஸி.

**மைதிலி:** வாவ்! ஆமா, கமலோட 'மும்பை எக்ஸ்பிரஸ்'ல ஏன் உங்களுக்கு ஆர்.ஏ.சி. வெயிட்டிங் லிஸ்ட்ல கூட சீட் கிடைக்கலை?

**கிரேஸி:** நீங்க வேற. 'மும்பை எக்ஸ்பிரஸ்'ல ஃபர்ஸ்ட் க்ளாஸ் ஏ.சியிலேயே டிக்கெட் கிடைச்சு டிஸ்கஷன்ல கூட கலந்துக்கிட்டேன். ஆனா, யு.எஸ். டூர் போன சமயம்



# மோகன்!..

படம் ஆரம்பிச்சதால, என்னால அதுக்கு வசனம் எழுத முடியாமப் போச்சு. அதனாலென்ன, அடுத்ததா கமல்-சரண் இணையற படத்துக்கான கன்ஃபார்ம் டிக்கெட்தான் இப்பவே வாங்கியாச்சே.



**ஸ்டாலின்:** வசனமே இல்லாத சினிமாவுக்கு உங்களை வசனம் எழுதக் கூப்பிட்டா என்ன பண்ணுவீங்க?

**கிரேஸி:** (அலறுகிறார்) ஏம்பா, அதெப்படி முடியும்? ஒரு டான்ஸரை ரேடியோவுல பரத நாட்டியம் ஆடக் கூப்பிட்டாங்களாம், அதுமாதிரி இருக்கு நீங்க சொல்றது. (தலையை சிலுப்பிக் கொள்கிறார்.)

**சுமனா:** சார், டுபாக்கூர் கம்பெனி தயாரிக்கிற படத்துக்கு நீங்கதான் ஹீரோ. ஹீரோயின் மட்டும் உங்க சாய்ஸ்!


**கிரேஸி:** ஏம்மா, நானெல்லாம் டுபாக்கூர் கம்பெனியில நடிச்சாத்தான் உண்டுங்கிறே. ம்... சரி. ஆமா, உங்களுக்குப் பிடிச்ச ஹீரோயின் யார்னு நேரடியாவே கேட்டுடலாமே. ஆனா உங்களால அவங்களைத் திருப்பிக்கொண்டுவர முடியாது. அவர்தான் சாவித்திரி. இப்போ கேட்டீங்கன்னா, ஒரு ஃபர்ஸ்ட் க்ளாஸ் ஹீரோயின் இருக்காங்க. அவங்களும் ஒத்துப்பாங்க. (எல்லாரும் ஆவலுடன் எதிர்பார்க்க...) வேற யாரு, அவ்வை சண்முகிதான். கமல்கிட்ட கெஞ்சிக் கூத்தாடி அவங்க கால் ஷீட்டை வாங்கிட மாட்டேன்!

**ஸ்டாலின்:** உங்களுக்கும் 'ரேகிங்' அனுபவங்கள் உண்டு தானே?

**கிரேஸி:** ம்... ஜோரா. நான் அண்ணா யுனிவர் சி ட் டி யி ல



— கிரேஸியுடன் கலாட்டா




ஃபர்ஸ்ட் இயர் படிக்கும்போது, ரேகிங்கிற பேர்ல தரையில நீச்சலடிக்கச் சொன்னாங்க. தண்ணியில நீச்சலடிக்கிறதைவிட இது ரொம்ப ஃசேபர்னு சந்தோஷமா செஞ்சேன். நான் ஃபைனல் இயர் வந்தபோது ஒரு பையனைக் கூப்பிட்டு "காதைப் பிடிச்சிட்டு எண்ணாம இருபது முறை தோப்புக் கரணம் போடு"ன்னு சொன்னேன். அவன் இருபது முறை போட்டு முடிச்சிட்டு, 'முடிஞ்சது'ன்னான். "எண்ணாம இருபதுன்னு எப்படித் தெரியும்? திரும்பப் போடு"ன்னு ஜாலியா டார்ச்சர் பண்ணினேன்.

**மைதிலி:** அழகிகள் மாதிரி உங்களால் கேட்வாக் பண்ண முடியுமா?

**கிரேஸி:** நடக்கிறதே கஷ்டம்ங்கிறேன். இதுல கேட் வாக் வேற. அப்படி யாராவது சொன்னா நைஸா பூனை மாதிரி சத்தமில்லாம நடந்து ஒதுங்கிடுவேன்.

**சுமனா:** சார், உங்க ஆட்டோகிராஃப் காதலிகள் உங்க மனைவிக்குத் தெரியும்தானே?

**கிரேஸி:** பதிமூனு வயசு வரைக்கும் பசங்களோடயே பழகிட்டு வந்த நான், எட்டாவது படிக்கும்போது முதன்முதலா 'ஜானகி'ங்கிற பொண்ணைப் பார்த்தேன். அதனால்தான் என்னவோ, என்னோட கதாநாயகிகளோடப் பெயரெல்லாம் 'ஜானகி'ன்னு வர அதுவும் ஒரு காரணமாயிருச்சு. நான் கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவன். இன்னைக்கெல்லாம் கணவனும் மனைவியும் ஒண்ணா இருக்கிறதே கூட்டுக் குடும்பம்ங்கிறாங்க. என் பாட்டி, அம்மா, மனைவி மாதிரி வேற எந்தப் பெண்களும் என்னை பாதித்தது கிடையாது. மத்தபடி காதல்ல எனக்கு சுத்தமா நம்பிக்கை கிடையாது. (அனைவரிடமும் மௌனம்) ஐய்யய்யோ! ஸாரி. என்ன தப்பா பேசிட்டேனா? ஆக்சுவலி, காதல், கல்யாணத்துல முடிஞ்சதுன்னா, காதல் செத்துருச்சுன்னு அர்த்தம். காதல் செத்துருச்சுன்னா கல்யாணம்



ஆயிடுச்சுன்னு அர்த்தம்.

**மைதிலி:** ஏதாவதொரு பெண்ணிடம் தனியா மாட்டிய அனுபவம்?

**கிரேஸி:** ஏன் இல்லை? இருபத்தஞ்சு வருஷமா என் மனைவிகிட்டே மாட்டிண்டு முழிச்சுட்டிருக்கேனே... இது போறாதா?

**கென்னடி:** கனாமியால மீன் இல்லாதபோது உங்களுக்குத் தானே பெரும் நஷ்டம்? I mean what you mean!

**கிரேஸி:** (ரசித்துச் சிரிக்

கிறார்) இதெல்லாம் தான் வார்த்தை ஜாலம். ஒருமுறை கவிமணி தேசிய விநாயகம் பிள்ளைகிட்ட போய், 'தமிழ்ல இப்படி ஆங்கில வார்த்தைகள் கலக்கறதே...'ன்னு கேட்டதுக்கு அவர், ''ஆபத்துக்குப் பாவ மில்லை. அவசரத்துக்கு தோஷ மில்லை. இது நாலும் தமிழு மில்லை''ன்னு சொன்னாராம். சமீபத்துல லேனா தமிழ்வாணன் சொல்லி நான் படிச்சது.

**ஸ்டாலின்:** டக் டக் டக்... உங்க எதிர்ல ஐஸ்வர்யா ராய் நடந்து வர்றாங்க. விஸ்க்... அடுத்த காட்சி... நீங்களும் அவங்களும் தனியா லிப்ட்ல மாட்டிக்கிறீங்க?!

**இரேஸி:** (அதிர்ச்சியாகிறார்) என்னது, ஐஸ்வர்யா ராய் நடந்து வர்றாங்களா? ஏம்பா, உங்க கற்பனைக்கு அளவே இல்லையா? அப்புறம், ஐஸ்வர்யாராயோடு எங்க மாட்டிக்கிட்டாலும், உடனே உங்களையும் பத்திரமா காப்பாத்திருவாங்க. பின்னே, ஐஸ்வர்யாராயைக் காப்பாத்தினதுக்கு சாட்சி வேண்டாமா?



**சுமனா:** சார், சினிமா இண்டஸ்ட்ரியில இருக்கீங்க. சூடா ஒரு கிசுகிசு சொல்லுங்களேன்.

**இரேஸி:** கிசுகிசு என்ன, பகிரங்கமாவே சொல்றேன். எனக்கும் எங்க காலனியில இருக்கிற பொண்ணுக்கும் பழக்கம் இருக்கு. (நால்வரின் கண்களும் விரிகின்றன!) அந்தப் பொண்ணுக்கும் என்னைப் பிடிச்சிருக்கு. என்னோட நெருக்கமா பழகும்போது அந்தப் பொண்ணோட கன்னம் சிவக்கறதால, அந்த பொண்ணோட அப்பா அம்மாவுக்கு இந்தப் பழக்கம் பிடிக்கறதில்லை. அதைவிட, சமீபத்திய விஷயம் என்னன்னா, இப்போ... அந்த பொண்ணுக்கு ஆறு மாசம்!

**ஸ்டாலின்:** (அதிர்ந்து) என்ன சார், யார் சார் அவங்க?

**இரேஸி:** (நமுட்டுச் சிரிப்புடன்) அந்த பொண்ணு ஒரு குழந்தை. நான் சொன்ன ஆறு மாசம், அதோட வயசு. அதோட கன்னம் சிவக்கறதுக்குக் காரணம், வெட்கத்தால அல்ல, நான் போடற வெத்தலை சிவலோட சிவப்புச் சாறு அதோட கன்னத்துல படறதுனால, குழந்தையோட அப்பா அம்மாவுக்கு இதெல்லாம் தான் பிடிக்கறதில்லை. நீங்க என்கிட்ட கேட்டது கிசுகிசு ஹா...ஹா..ஹா... நான் சொன்னது சிசுகிசு!

**- ச.ந. கண்ணன்**

படங்கள்: **ஸ்ரீஹரி**



## விஷ்வக்ஸேனன்

## ௩௦. காத்திருந்த வழக்கு

பூவும் பொழுதும், கானும் காற்றும், ஊரும் வழியும், மொழியும் விழியும், அனைத்தும் ஆழ்ந்து உறங்கத் தொடங்கி விட்ட அந்த முற்றிய இரவுப் பொழுதில், உறக்கம் வராமல் வான்வெளியில் நடை பயின்று கொண்டிருந்தது வெண்ணிலவு. மாளிகையின் உப்பரிகையில் விழித்துக் கொண்டிருந்த துருவனுக்கும் விழிகள் உறங்க மறுத்ததால், நிலவை வெறித்தபடி நடைபயின்று கொண்டிருந்தான். கால்கள் களைத்ததால் மீண்டும் அறைக்குள் நுழைந்தவன், நின்று அறையின் நிலையைக் கவனித்தான். அந்த சயன அறையில் உறக்கத்துக்கு வேண்டிய சாதனங்கள் நிரம்பியே கிடந்தன. சுவையான உணவும், கனி வகையும், உயர்ந்த வகை மதுவும், சுகமான பஞ்சணையும் அவனால் தீண்டப்படாமல் காத்துக் கிடந்தன.

பணிவிடை செய்யக் காத்துக்கிடந்து அவன் மஞ்சத்தையே நெருங்காமல் உலவிக் கொண்டிருந்ததால் சலித்து, மஞ்சத்தின் பக்கங்களில் சாய்ந்து அமர்ந்தபடியே உறங்கிக் கொண்டிருந்தனர் அந்த யவன மங்கையர். அவர்கள் நிலையைக் கண்ட துருவனின் மனத்தில், இரக்கம் பிறந்ததால், தோள்களைப் பற்றி அவர்களை எழுப்பி மஞ்சத்தில் கிடத்தினான். இருக்கையொன்றை நகர்த்தி உப்பரிகையி விட்டவன், அதில் சாய்ந்து விழிகளை மூடினான். அவன் மனக்கண்ணில் ராஷ்டிர கூடத்தின் நிலையும், தான் சிறைப்பட்டதை அறிந்தால் மீண்டும் எழக் கூடிய புரட்சியும் எழுந்தன. தப்பித்து விரைவில் பாண்டியர் எல்லையில் காத்து நிற்கும் உதவிப்படையை அடைய வேண்டிய அவசியத்தையும், தான் தப்பித்ததை அறிந்ததும், பின் தொடர்ந்து வரக் கூடிய காஞ்சியின் ராஷ்டிரகூட வீரர்களை எதிர்கொள்ள என்ன திட்டம் வகுக்கப் பட்டிருக்கும் என்ற கேள்வியும் எழுந்தன அவன் சித்தத்தில். இத்தனையையும் செயல்படுத்த, தன்னை அங்கிருந்து தப்பிக்க வைக்க வரப்போவதாக மன்னன் கூறிய பராந்தகனைப் பற்றிய நினைவும் எழுந்தது அவனுக்கு.

சிந்தனை வசப்பட்டு மூடிக்கிடந்த அவன் விழிகளை, நித்திராதேவி மெல்ல வசப்படுத்தத் தொடங்கினாள்.

சரியாக மூன்றாவது ஜாமம் தொடங்கியதும், யவன மங்கையரில் ஒருத்தி, யாரோ உலுக்கி எழுப்பியதுபோல் சட்டென்று



### 'சந்திரமுகி' படத்தின் டூயட் காட்சி செட்டிங்கோ?





# மகுட வைரம்

விழித்து எழுந்தாள். தரையில் அமர்ந்தபடி மஞ்சத்தின் மீது சாய்ந்து உறங்கிவிட்ட தாங்கள் இருவரும், மஞ்சத்தில் கிடப் பதையும், ராஷ்டிரகூட இளவல் உப்பரி கையில் இருக்கையில் அமர்ந்தபடி உறங்கு வதையும் கண்டவள் முகத்தில், இலேசான வியப் பும், பச்சாதாபமும் தோன்றின. அடுத்தவளையும் உலுக்கி எழுப்பியவள் அவளிடம் ஏதோ ரகசியம் கூறிவிட்டு, மேன்மாடத்தின் நடுப்பகுதியை நோக்கிச் சென்றாள். அறையின் நடுவில் மேற் கூரையைத் தாங்கிநின்ற இரு சிற்பத் தூண்களில் ஒன்றை நெருங்கியவள், தூணின் மேற்புறத்தில் நான்கு திசை களையும் பார்த்த யாளிகளில் ஒன்றை

மேற்புறமாக அழுத்தி, மெல்லத் திருப்பினான். அவள் நின்ற இடத்துக்கு நேர் எதிரேயிருந்த சுவர், ஓசையின்றி நகர்ந்து ஒருவர் மட்டுமே நுழையக் கூடிய வாயில் தோன்றியது. அந்த வாயிலின் வழியே பந்தமொன்றுடன் நுழைந்த யவன மங்கை, உள்ளே சுழன்று சுழன்று இறங்கிய படிகளில் வேகமாக இறங்க ஆரம்பித்தாள்.

இரு நாழிகைகள் கழித்து மீண்டும் அந்தப் படிகளில் ஏறி வந்து, அறைக்குள் நுழைந்த யவன மங்கையைத் தொடர்ந்து, பகதத்தன் வந்தான். அறைக்குள் வந்து பெரிதாக மூச்சு விட்டவன் சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டபடி, திரும்பி அந்த வழியைப் பார்த்து, "பராந்தகா, அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? மேலே வா" என்றும் குரல் கொடுத்தான்.

சற்றுக் கழித்து அறைக்குள் நுழைந்த பராந்தகன், "நாம் வந்த பாதையிலிருந்து இன்னும் இரு வழிகள் தெரிகின்றன பகதத்தா. அவை செல்லும் திசையை வைத்து எங்கே செல்லக் கூடும் என்று யோசித்தேன்" என்றான்.

"அரக்கு மாளிகையிலிருந்து பாண்டவர்கள் தப்பித்த சுரங்கவழி கூட இத்தனை நீளமிருக்காது பராந்தகா." என்று பெருமூச்சொன்றை வெளியிட்ட பகதத்தன், யவன மங்கையை நோக்கி "இளவல் எங்கே?" என்றான்.

உப்பரிகையில் இருக்கையில் அமர்ந்தபடியே உறங்கி விட்ட துருவன், பேச்சுக் குரல்கள் ஒலித்ததாலும், சுரங்க வழி திறந்து முடியதால் ஏற்பட்ட இலேசான சலனத்தாலும் உறக்கம் கலைந்து விழித்து, தானிருந்த நிலையை உணர்ந்து, சட்டென்று எழுந்து கூடத்தில் நுழைந்தான்.

உள்ளே யவனமங்கையர் நிற்பதையும், பின்னால் புதிதாக இருவர் வந்திருப்பதையும், சுவரில் தெரிந்த வழியையும் கவனித்தவன் முகத்தில் வியப்பு படர்ந்தது.

பார்த்தவுடன் யாரென்பது புரிந்த பராந்தகன், "ராஷ்டிரகூட இளவலுக்கு வணக்கம், நான் பராந்தகன்" என்றான்.

துருவனின் விழிகள் பராந்தகனை ஏற இறங்கப் பார்த்தன. அகன்ற நெற்றியும், கூரிய நாசியும், பெருவிழிகளும் பல்லவ வம்சத்தின் சாயலைப் பிரதிபலித்தாலும், விஷமத்தைக் காட்டிய முறுவலுடன் தெரிந்த இதழ்களும், விழிகளின் கூர்மையும், சோழ மண்ணின் இயற்கைக் குணத்தைக் கலந்து தோன்றுவதையும் கண்டான் துருவன்.

"பராந்தகா, உன்னைப் பற்றி பல்லவ மன்னர் கூறியிருக்கிறார்" என்றவன் பகதத்தனைப் பார்த்து, "இவர்தான் உங்கள் தோழர் பகதத்தனாக இருக்க வேண்டும்" என்றான் துருவன்.

பகதத்தனின் உருண்ட முகத்தில் விழிகள் ஒருமுறை உருண்டு மகிழ்ச்சியைக் காட்டின. "ஆகா, என் பிரபாவம் ராஷ்டிரகூடம் வரை பரவி, ராஷ்டிரகூட இளவலும் என்னைப் பற்றி அறிந்திருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது" என்றான் அவன்.

"சரி, தாமதமின்றி நாம் உடனே புறப்பட வேண்டும்" என்றான் பராந்தகன்.

பகதத்தன் அந்த மங்கையரிடம் ஏதோ சைகை செய்ய, அவர்கள் உள்ளே சென்று நீண்ட கயிறுகளைக் கொண்டு வந்தனர். கயிறுகளைக் கொண்டு ஒருத்தியைத் தூணிலும், மற்றொருத்தியை மஞ்சத்திலும் வைத்துக் கட்டிய பகதத்தன் சலித்துக் கொண்டான். "இந்தக் கயிறுகளைப் போல் இந்த மங்கையருக்கும் எனக்கும் ஏதோ உறுதியான பூர்வ ஜென்ம பந்தம் இருக்கிறது. இவர்களைக் காணும் போதெல்லாம் கட்டிப் போடும் பணியே எனக்குக் கிடைக்கிறது. அடுத்த முறையாவது உங்களைக் கட்டாமலிருக்க முயற்சி செய்கிறேன்" என்றவன், இருவர் வாயிலும் துணிப்பந்தையும் அடைத்து கன்னத்தில் தட்டி "வருகிறேன்" என்று விடை பெற்றுக் கொண்டான்.

அந்த மங்கையரை நெருங்கிய துருவன், "யவன மங்கையரே, என் வாழ்வின் முக்கியக் கட்டத்தில் உதவிய உங்களை நான் என்றும் மறக்கமாட்டேன்

"சத்தியமா நான் ஒரு எழுத்தாளன் சார். பத்திரிகை ஆசிரியர்கிட்ட 'கதைய முடிச்சுட்டேன், பணத்தை சீக்கிரம் செட்டில் பண்ணிடுங்க'ன்னு செல்லுல பேசிட்டு இருந்ததை இவர் தப்பா புரிஞ்சுக்கிட்டு....

– ஸ்ரீகாந்த்



முதலில் உங்களிடம் கடுமையாகப் பேசியதற்கு என்னை மன்னித்து விடுங்கள். மீண்டும் வந்து உங்களைச் சந்திப்பேன், ராஷ்டிர கூடத்தின் மன்னனாக'' என்றான்.

''இனி நாம் செல்லலாம்'' என்ற துருவனை அழைத்துக் கொண்டு சுரங்க வாயிலை அடைந்து, உட்புறமிருந்த விசையொன்றைத் திருகி வாயிலை அடைத்த பராந்தகன், பந்தத்தைப் பிடித்தபடி படிகளில் இறங்கினான். பகதத்தன் தன் புராணக்கதைகளைத் தொடங்க, படிகளில் இறங்கியதும் தெரிந்த பாதை வளைந்து வளைந்து நீண்டு கொண்டேயிருந்தது. வழியில் பல கிளைப்பாதைகளும் பிரதானபாதையில் வந்து கலந்தன.

இரு நாழிகைகள் கழிந்து பாதை பெரும் பாறையொன்றில் முடிவடைந்தது. பாறையின் இரு புறங்களிலும் இரு பாவைகள் நின்றன. மெல்லிய காற்று பாறையின் இடுக்குகள் வழியே குளிர்ந்து வீசியது. இடது புறத்துப் பாவையினருகே சென்ற பராந்தகன், அதன் கரமொன்றைப் பிடித்துத் திருக, எதிரிலிருந்த பாறை கரகர வென்ற ஒலியுடன் உருண்டு விலகியது. பாறை விலகிய இடத்தில் வட்டமான ஆழப்பள்ளமொன்றும், கீழே பளபளத்த நீர்ப்பரப்பும் தெரிந்து, அது ஒரு பெரும் கிணறு என்பதைப் புரிய வைத்தன. பக்கங்களில் நீட்டிக் கொண்டிருந்த கருங்கற்படிக்கட்டில் ஏறி மேற்பரப்புக்கு வந்த துருவன், தான் கோட்டைச் சுவரையும், அகழியையும் கடந்து, அரைக் காத தூரத்திலிருப்பதையும், சுற்றிலும் அடர்ந்த மரங்கள் தென்படுவதையும் கவனித்தான்.

மூவரும் மேலேறி வந்த கணத்தில் சுற்றிலுமிருந்த மரங்களின் மறைவுகளிலிருந்து பலர் வெளியே வந்தனர். பார்வைக்குச் சாதாரணக் குடிகள் போல உடைகள் அணிந்திருந்தாலும், அவர்களது நடையும், திடமான தேகங்களும், இடையிலிருந்து நீண்டு கிடந்த வாட்களும் அவர்கள் சாதாரணக் குடிகளல்ல என்பதை அறிவித்தன.

ஒன்றாகக் கூடி மூவரின் முன்பாக வந்து நின்றவர்களில், முதலில் இருந்தவன் பராந்தகனை நோக்கித் தலை வணங்கினான்.

''பிரபு, தங்களுடன் வந்து எல்லையில் அணி வகுத்திருக்கும் நம் வீரர்கள் தாங்கள் கூறியபடியே வியூகம் வகுத்து நிற்கின்றனர். நம் படைத் தலைவர் விக்கிரமவரையரும் வந்து காத்திருக்கிறார். பாண்டியர் படைப் பிரிவும் வந்திருக்கிறது.''

''படைத்தலைவர் எனக்கு என்ன உத்தரவிட்டிருக்கிறார்?''

''தங்களை குடந்தையில் சென்று இரு தினங்கள் காத்திருக்குமாறும், ராஷ்டிரகூட இளவலைத் தொடர்ந்து வருபவர்களை கவனித்துவிட்டு, தாமும் பிறகு அங்கு வந்து சேர்ந்து கொள்வதாகவும் கூறச் சொன்னார்.''

துருவனை நோக்கித் திரும்பிய பராந்தகன், ''இளவரசே, இவர்கள் சோழ வீரர்கள். தங்களை எமது படைத்தலைவர் விக்கிரமவரையரிடம் அழைத்துச் செல்வார்கள். தாமதிக்காமல் புறப்படுங்கள்'' என்றான்.

துருவன் பராந்தகனை நெருங்கி அவன் கரங்களைப் பிடித்தபடி, விழிகள் மின்ன ஒருமுறை ஏற இறங்க நோக்கினான். அடுத்து ஒலித்த அவன் குரலில் உணர்ச்சிகள் பொங்கி வழிந்தன. ''பராந்தகா, நம் இருவருக்கும் எதிரில் போர் காத்திருக்கிறது. போரின் முடிவில் நீ எளிய வாழ்வைத் தேடிச் செல்லப் போவதாக மன்னர் தெரிவித்தார். நான் அரியணையை நாடிச் செல்கிறேன். நீ எங்கேயிருந்தாலும், எந்த நிலையிலிருந்தாலும் என் மனதில் என்றும் உனக்கு ஓர் இடம் நிரந்தரமாக இருக்கும்'' என்ற துருவன் விடைபெற்றுக் கொண்டான்.

உடன் நின்ற சோழ வீரன் சற்றே தயங்கினான். ''பிரபு, குடந்தையிலும், நம்






சோழ நாட்டின் மற்ற ஊர்களிலும் இருக்கும் ராஷ்டிரகூட வீரர்கள், இன்னும் முழுமையாக வெளியேறிவிடவில்லை. எனவே தங்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு படைத்தலைவர் தெரிவிக்கச் சொன்னார்."

பகதத்தன் குறுக்கிட்டான். "வீரனே, நீ கவலைப்பட வேண்டாம். நான் கவனித்துக் கொள்கிறேன். நீ இளவலை அழைத்துக் கொண்டு புறப்படு."

சோழ வீரர்கள் அளித்த புரவிகளில் ஏறிய பராந்தகனும் பகதத்தனும் சற்று நேரம் சோழ வீரர்களுடன் சென்ற துருவனைப் பார்த்தபடி நின்று விட்டு, குடந்தையை நோக்கி பயணத்தைத் தொடங்கினர்.

**பி**ன்னிரவின் நிலவொளியில் குறுக்கிட்ட சிற்றாறுகளும், ஓடைகளும், உருக்கிய வெள்ளிப்பாளங்களாக ஓடின. இருளடித்துக் கிடந்த மரக்கூட்டங்கள் நிழலுருவங்களாகத் தெரிந்து, ஏதேதோ ரகசியங்களை மறைத்து வைத்திருப்பதாகத் தோற்றமளித்தன. தொண்டை மண்டலம் முடிந்து சோழ மண்ணின் மணம் வீசத் தொடங்கிய நேரத்தில், காலைப் பனித்துளிகளும், அவற்றை மகுடங்களாக அணிந்த கதிர்களை அசைத்து வரவேற்ற வயல் வெளிகளும், கதிரவனின் ஒளி பரவத் தொடங்கும் முன்பே குரல் கொடுக்கத் தொடங்கி விட்ட பட்சி ஜாலங்களும், பராந்தகனையும், பகதத்தனையும் வெகு ஆனந்தமாக வரவேற்றன.

எதிர்ப்பட்ட சோழ நாட்டு ஊர்களிலும், சிறு கிராமங்களிலும் பராந்தகனுக்கும் பகதத்தனுக்கும் கிடைத்த வரவேற்பு அபரிமிதமாயிருந்தது. பராந்தகன் குடந்தையை அடையச் செல்லக் கூடிய பாதையை யூகித்து, சோழர் படைத்தலைவர் ஏற்கெனவே செய்தியனுப்பியிருந்ததால், மக்கள் பராந்தகனது வருகையை ஆவலுடனேயே எதிர்பார்த்துக்கிடந்தார்கள். குறுக்கிட்ட ராஷ்டிரகூட வீரர் பிரிவுகளைத் தவிர்க்கவும், சோழ நாட்டு கிராம மக்களின் அன்பை ஏற்கவும் தாமதித்துத் தாமதித்தே பயணத்தைத் தொடர்ந்த பராந்தகனும் பகதத்தனும், அன்றைய பகற்பொழுது முழுவதுமாக முடிந்து, இரவின் இரண்டாவது ஜாமத்தின் தொடக்கத்திலேயே குடந்தையை நெருங்கினார்கள்.

அந்த இரவில், குடந்தை நகரை நெருங்கிக் கொண்டிருந்த பராந்தகனுக்கு, அங்கு நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமலிருந்த வழக்கு ஒன்றும் காத்துக் கொண்டிருந்தது.

(தொடரும்)

## 'மழை'யில் நடித்தால் திருமணம்

ஏற்கெனவே சாகித்ய அகடமி விருது பெற்ற இந்திரா பார்த்தசாரதிக்கு, இந்த ஆண்டு சங்கீத நாடக அகடமி விருதும் கிடைத்திருக்கிறது.

ஒரு தமிழ்ப் படைப்பாளிக்கு இரண்டு விருதுகளும் கிடைத்திருப்பது இதுவே முதல் முறை. வடக்கே இ.பா.வுக்குக் கிடைத்திருக்கும் நாடகாசிரியர் என்ற அங்கீகாரம்தான் இதற்குக் காரணம். மழை, போர்வை போர்த்திய உடல்கள், கொங்கைத் தீ, அவுரங்கசீப், கால இயந்திரங்கள், நந்தன் கதை, இராமானுஜர், பசி, கோயில் என்று மேடை நாடகங்களுக்கு ஒரு புதிய பரிமாணம் தந்திருக்கிறார் இ.பா.

"நந்தன் கதை முதலில் தமிழில் எழுதப் பட்டாலும், அதன் இந்தி வடிவம்தான் முதலில் மேடை ஏறியது. 1986ல் உ.பி. மாநில நாடக விழாவில் 'கதா நந்தன் கி' என்று திரிபுராரி சர்மா இயக்கி, நடிக்கப்பட்டது" என்கிறார் இ.பா.

இந்திரா பார்த்தசாரதியின் இந்த நாடகங்கள் எல்லாமே ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு, பிறகு இந்தி, மராத்தி மொழிகளில் பெயர்க்கப்பட்டிருக்கின்றன. 'மழை' மராத்தியில் வெளியானபோது, அதற்கு முன்னுரை எழுதியவர் விஜய் டெண்டுல்கர். 'போர்வை போர்த்திய உடல்கள்' என்.எஸ். ஜகன்னாதனின் மொழி பெயர்ப்பிலும், 'அவுரங்கசீப்' கே.வி. ராமனாதனின் மொழிபெயர்ப்பிலும், 'கோயில்' அசோகமித்திரனின் மொழிபெயர்ப்பிலும் ENACT ஆங்கில இதழில் வெளியாயின. பிறகே இந்தியில் மொழியாக்கம் பெற்றன.

"பசி நாடகத்தை மட்டும் நானே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தேன். 'நந்தன் கதை'யை சி.டி. இந்திரா ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, ஆக்ஸ்ஃபோர்டு யுனிவர்சிடி பிரஸ் வெளியிட்டிருக்கிறார்கள்."

நந்தன் கதை மட்டும் கிட்டத்தட்ட ஐம்பது தடவைகள் தமிழ்நாட்டில் மேடை ஏற்றப்பட்டிருக்கிறது. 'போர்வை போர்த்திய உடல்கள்' நாடகத்தை முதன் முதலில் இங்கே போட்டவர் ஞாநி.

"அவுரங்கசீப் நாடகம் இந்தியில் நடிக்கப்பட்டபோது, ராஜ் பாப்பர்தான் அந்தப் பாத்திரத்தில் நடித்தார். தமிழில் அதைச் செய்தவர் நாசர்!"

'மழை'யை முதலில் நாவலாகத்தான் எழுத நினைத்தாராம். பிறகுதான் நாடகமாகவே எழுதிவிடுவது என்று முடிவை மாற்றிக் கொண்டாராம். 'மழை' நாடகம் தில்லியில் நடிக்கப்பட்டபோது, க.நா.சு.வின் மாப்பிள்ளை, மணி அதில் நடித்திருந்தார். 'மழை' நாடகத்துக்குப் பிறகு, அதில் நடித்த பலருக்கும் திருமணம் நடந்ததாம். "அதனால் 'மழை'யில் நடித்தால் திருமணம் நிச்சயம் என்பது போல் ஆகிவிட்டது!" என்று சிரிக்கிறார் இ.பா.

- சாருகேசி



# இயற்கைக்கு




நடிகை ஸ்ரீதேவி மூக்கை அறுவை சிகிச்சை மூலம் சரி செய்து கொண்டது உலகறிந்த உண்மை! ஆனால் இவை போன்றவை இப்போதெல்லாம் செய்திகளே அல்ல. சீமான்கள் தங்கள் தலையின் வழுக்கைப் பகுதியில் உரோமங்களைப் பயிரிடவும், சீமாட்டிகள் சிலிக்கான் பைகளின் உதவியுடன் தங்கள் மார்பகங்களைப் பெரிது படுத்திக் கொள்ளவும், எந்தவித அறுவை சிகிச்சைக்கும் தயாராகி விட்டார்கள். கன்னத்தில் இந்த இடத்தில் குழி இருக்க வேண்டாமே, கண்ணுக்குக் கீழே உள்ள சுருக்கத்தை நீக்கிவிடலாமே எனும் ஆசைகளைச் செயல்படுத்த ப்ளாஸ்டிக் சர்ஜன்கள் தயார். இயற்கையோடு இப்படிப் போராடுவதும், மாற்றியமைப்பதும் ஆரோக்கியமான போக்குதானா என்ற கேள்வியுடன் நாம் அணுகியவுடன், சீனியர் மருத்துவரான ரங்கபாஷ்யம் பொரிந்து தள்ளிவிட்டார்.

"இயற்கையை மனிதன் எப்போது மதிக்கத் தவறினானோ, அப்போதிலிருந்தே அழிவுகாலம் தொடங்கிவிட்டது. ஆதிசங்கரர் போன்ற மகான்கள் அவதரித்த பூமி இது. அவர்கள் அளித்த உபதேசங்களைப் பின்பற்றாமல் பாதை மாறிப் போய்க்கொண்டிருக்கிறோம். அடிப்படையில் மனிதனின் உடலமைப்பு சைவ உணவு சாப்பிடுவதற்கேற்பத்தான் படைக்கப்பட்டிருக்கிறது. பிற உயிரினங்களைச் சாப்பிட நாம் ஒன்றும் சிங்கமோ புலியோ அல்ல. அகிம்சை என்ற கோணத்தில் மட்டுமல்ல, மருத்துவக் கோணத்திலும்தான் இதைச் சொல்கிறேன்.

அமைதியாக இருப்பவர்களின் ரத்த அழுத்தமும் கட்டுக்குள் இருக்கும். சைவ உணவை மட்டுமே சாப்பிடுபவர்களில் பலரும் அமைதியானவர்களாக இருப்பார்கள். இரத்தக் கொதிப்பு, நீரிழிவுநோய், புற்றுநோய், மனநோய் போன்றவை கூட, பெரும்பாலும் தவறான உணவுப்பழக்கங்களால்தான் ஏற்படுகின்றன.

• ரங்கபாஷ்யம்



சில வருடங்களுக்கு முன் யானைகள் குறித்த ஓர் ஆராய்ச்சியைச் செய்தார்கள். காட்டில் இருக்கும் யானைகள் தினமும் அரை டன் இலைகளைச் சாப்பிடும், நூறு கிலோமீட்டர் நடக்கும். தவிர குடும்ப அமைப்பிலும் யானைக்குப் பற்று உண்டு. ஆனால் கோவில் யானைகள் இந்த இயல்பான சூழலிலிருந்து பிரிக்கப்படுவதினாலேயே அவற்றின் ஆயுள் சீக்கிரம் முடிந்து விடுகிறது. இயற்கையை மீறும் மனிதர்களுக்கும் இது பொருந்தும். ஃபாஸ்ட் ஃபுட் என்று இப்போது கண்டதையும் விழுங்குகிறோம். இது நம் உடலின் இயல்புக்கு மாறாக இருப்பதால், பலவித நோய்கள் உண்டாகின்றன.

எல்லாவித உடல் அசௌகரியங்களுக்கும் மருந்து சாப்



# இடைஞ்சல் செய்யலாமா?

பிடுவது என்பதே கூட அவசியமில்லாத ஒன்றுதான். "மருத்துவர் உதவியுடன் ஜலதோஷத்தை ஒரே வாரத்தில் நீக்கி விடலாம். தானாக சரியாக வேண்டு மென்றால் ஏழு நாட்கள் தேவை" என் பார்கள். இது பெரும்பாலும் உண்மை தான். தவிர, சீக்கிரம் குணமாக வேண்டுமென்று பலவித ஆன்டி பயாட்டிக் உட்கொள்வதால், பக்க விளைவுகள் உண்டாகும்.

முறையான உடற்பயிற்சி, தியானம் போன்ற மனப்பயிற்சி, சத்தான உணவு இவற்றின் மூலமே பல நோய்களை குணப் படுத்திவிடலாம். இப்படி குணமாக்கும் நோய்களை, மருந்தின் மூலம் குணப் படுத்த எண்ணுவதே கூட ஒரு விதத்தில் இயற்கை மீறல்தான்.

மாற்று உறுப்புகளைப் பொறுத்திக் கொள்வது என்பதில் பொதுவாக எனக்கு உடன்பாடு இல்லை. இதயமாகட்டும், சிறுநீரகமாகட்டும், மாற்று உறுப்புக்களைப் பொருத்திக் கொண்டவர்களில் பெரும்பாலானோர், பல வருடங்கள் உயிரோடு இருந்ததாகத் தெரிய வில்லை. பணம் இருக்கிறது என் பதற்காக இது போன்ற முயற்சிகளில் ஈடுபடுவது சரியல்ல. இளம் வயதைச் சேர்ந்தவர்க்கு இப்படிப்பட்ட சிகிச்சை அளிக்கப்பட்டால், அதை ஏற்றுக் கொள்ளலாம் என்பது வேறு விஷயம்.

தவிர ஒருவருக்கு மாற்று உறுப்பு பொருத்துவதற்கு ஆகும் செலவில், ஒரு சிறிய கிராமத்துக்கே அடிப்படை சுகா தார வசதிகளை அளிக்க முடியும். அசுத்த மான சூழல் காரணமாக பலவித நோய் கள் பரவுகின்றன. இதற்கெல்லாம் முன்னுரிமை கொடுக்க வேண்டியது மிகவும் முக்கியம்.

இரட்டை முகவாயை சீரமைத்துக் கொள்ளுதல், வயிற்றைச் சுற்றி சேர்ந்து விட்ட கொழுப்பை லிபோஸக்ஷன் மூலம் நீக்கிக் கொள்ளுதல் என்று பலவித அழகு அறுவை சிகிச்சைகளுக்கு ஒப்புக் கொள் பவர்கள் மீது எனக்குப் பரிதாபம்தான் ஏற்படுகிறது. இயற்கையை ஏற்றுக் கொள்ளுங்கள். மாற்றங்கள் தேவை யென்றால், இயற்கையான முறையினால் அதைச் சாதியுங்கள்.

வயதானால் தலை நரைக்கத்தான் செய்யும். முகத்தில் சுருக்கங்கள் விழத் தான் செய்யும். இதையெல்லாம் மாற்றி யமைக்க வேண்டும் என்று புறப்பட்டால், பிரச்னைகள்தான் அதிகமாகும்.

இயற்கைக்கு எதிராக செயற்கை அழகுகளை, - அதுவும் அறுவை சிகிச் சைகள் மூலம் செய்து கொண்டே போனால், அது உடலை வேறு விதங் களில் பாதிக்கவே செய்யும்.

அழகு என்பது உள்ளத்தைப் பொருத் தது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்."

- ஜி.எஸ்.எஸ்

# குறையொன்றுமில்லை


## முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

**நா**ற்பத்து மூன்று லட்சத்து இருபத்திரண்டாயிரம் வருஷங்கள் உருண்டோடினால் கிருத யுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என்ற நான்கு யுகங்கள் முடிகின்றன. - சதுர் யுகம் என்பது இது தான்.

இந்த மாதிரி ஆயிரம் சதுர் யுகங்கள் கொண்டது பிரும்மாவுக்கு ஒரு பகல்! இன்னொரு ஆயிரம் சதுர்யுகங்கள் கொண்டது பிரும்மாவுக்கு ஓர் இரவு! ஆகையினாலே, இரண்டாயிரம் சதுர்யுகங்கள் அவருக்கு ஒரு நாள்! அந்த மாதிரி ஏழு நாட்கள் ஒரு வாரம்; பதினைந்து நாட்கள் ஒரு பக்ஷம், முப்பது நாட்கள் ஒரு மாதம், ஆறு மாதங்கள் ஓர் அயனம், இரண்டு அயனங்கள் ஒரு சம்வத்ஸரம். இந்த மாதிரி நூறு வயது இருக்கிறார் பிரும்மா. பிரும்மாவினுடைய ஆயுளுக்கு வேதத்தில் ஒரு பெயர் வைத்திருக்கிறது - பரம் என்று பெயர்.

பரம் என்பதற்குப் பல பொருள் உண்டு. பரம் என்றால் பரப்பிரும்மம். பிரும்மாவுடைய ஆயுளும் 'பரம்' என்று குறிப்பிடப்படுகிறது. பெரிய கால அளவு அது. இந்தக் கால அளவை இரண்டாக விவரிக்கிறது வேதம்.

பிரும்மாவின் ஒரு பகல் பொழுது இருக்கிறது பாருங்கள்... அந்தப் பகல்






பொழுதில் 14 மனுக்கள் பதவியேற்று அவர்கள் பரிபாலனம் பண்ணுகிறார்கள். ஒவ்வொரு மனுவினுடைய ஆட்சிக் காலமும் 76 சதுர்யுகங்கள். அந்த மாதிரி சுவாயம்புவ மனுவிலிருந்து ஆறு மந்வந்த்ரங்கள் முடிந்து, இப்போது ஏழாவது மந்வந்த்ரம் - வைவஸ்வத மந்வந்த்ரமானது நடந்து கொண்டிருக்கிறது. இந்த வைவஸ்வத மந்வந்த்ரத்தில் 28 கிருத யுகங்கள் முடிந்துபோய்விட்டன; 28 திரேதா யுகங்கள் முடிந்துவிட்டன, 28 துவாபர யுகங்கள் முடிந்து போய்விட்டன. 28வது கலியுகத்தில், நான்கு லட்சத்து முப்பத்திரண்டாயிரம் வருடங்களுள், ஐயாயிரம் வருடங்களைக் கடந்து இன்றைய தினம் நாம் இருக்கிறோம்!

காலத்தில் நாம் எவ்வளவு கடந்து இருக்கிறோம் என்பதை, இந்தக் கால அட்டவணையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

பிரும்மாவினுடைய ஆயுளைப் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக இதைச் சொன்னேன்.

பிரும்மாவினுடைய ஒன்றாவது வயதிலிருந்து ஐம்பதாவது வயது வரையில், பரார்த்தம் என்று பெயர். ஐம்பத்தொன்றிலிருந்து நூறு வயது வரைக்கும் பரார்த்தம்! அதையும் பரார்த்தம், இதையும் பரார்த்தம் என்று சொன்னால் நமக்குப் புரியவேண்டுமல்லவா? ஒன்றிலிருந்து ஐம்பது வயது வரைக்கும் பிரதம பரார்த்தம். ஐம்பத்தோராவது வயதிலிருந்து நூறாவது வயது வரையில் த்விதிய பரார்த்தம்.

இப்போது நாம் பூஜையில் சங்கல்பம் பண்ணிக் கொள்கிறோம் அல்லவா...? நித்யம் என்ன சொல்கிறோம்...?

"த்விதிய பரார்த்தே, சுவேத வராஹ கல்பே, வைவஸ்தர மந்வந்த்ரே, கலியுகே பிரதமே பாதே" என்று சொல்கிறோம்.

ஆகையினால், த்விதிய பரார்த்தே என்பதனால் இப்போது பிரும்மாவினுடைய வயது ஐம்பத்தொரு வயதுக்கு மேல் ஆகிறது. அவருடைய பகல் பொழுது இது. பகல் பொழுதில்தான் சிருஷ்டி நடக்கிறது. ராத்திரியில் சிருஷ்டி நடப்பதில்லை. ராத்திரியில் நாமமெல்லாம் எப்படி உறங்குகிறோமோ, அப்படியே அவரும் கண்ணை மூடிக் கொண்டு, சிருஷ்டியை நடத்தாமல் இருந்து கொண்டிருக்கிறார். இப்போது, நம் காலத்தில் பகல் பொழுதானது நடந்து கொண்டிருக்கிறது.

இப்பேர்ப்பட்ட பிரும்மாயுத்தாயம் எவ்வளவு பெரியது? இதையெல்லாம் பகவான் தாங்கிக் கொண்டிருக்கிறான். ஆகையினால் இவற்றுக்கெல்லாம் பிரபுவாக அவன் இருக்கிறான்.

கடந்த காலம், நிகழ் காலம், வருங்காலம் எல்லாவற்றுக்கும் அவன் காலரூபியாய் இருந்து, காலத்துக்குப் பிரபுவாக இருக்கிறான் என்பதை உணர வேண்டும்.

பிரும்மாவுடைய ஆயுட்காலம், எல்லா ஆயுட்காலங்களைக் காட்டிலும் பெரிதானதாலே, அதை மஹரிஷிகள் எடுத்துக் காட்டி, 'காலோஹி பரமாத்மன: - காலரூபியாக பகவான் இருந்து எல்லாவற்றையும் பரிபாலனம் பண்ணுகிறான்' என்று சொல்கிறார்கள்.

அதனையே இங்கே, **பூத பவ்ய பவத் பிரபு:** என்று சஹஸ்ரநாமம் சொல்கிறது. பூத காலமாகவும், வர்தமான காலமாகவும், வருங்காலமாகவும் இருந்து, எக்காலத்திலும் விளங்கக் கூடியவனாக பரமாத்மா இருக்கிறான் என்பதை நாம் நன்கு உணரவேண்டும்.



அந்த எம்பெருமான்தான் எல்லாவற்றையும் நடத்துகிறான் என்று, நரசிம்ஹ தாபனீய உபநிஷத் மந்திரம் சொல்கிறது. இதையே தைத்ரீய உபநிஷத்தும் சொல்கிறது.

பஞ்ச பூதங்களும் பகவானின் ஆக்ஞையினாலே இயங்குகின்றன என்று சொல்ல வந்து, நரசிம்ஹ தாபனீய உபநிஷத் பஞ்சம: என்று முடிகிறது. தைத்ரியோபநிஷத், பஞ்சமயிதி என்று முடிகிறது.

பகவானிடத்திலே கொண்ட பயத்தினாலே, அந்த எம்பெருமானிடத்திலே இருக்கிற பயத்தினாலே, காற்றானது வீசுகிறது. சூரியன் அந்தக் காலத்தே உதித்து, அஸ்தமிக்கிறான்.

சூரியன் என்றைக்காவது காலத்தைத் தவற விடுகிறானா...? காலத்தே வருகிறான் என்றால், அதுவும் அந்த எம்பெருமானிடத்திலே அவன் கொண்டிருக்கக் கூடிய பயத்தினால்தான்.

திக்பாலகர்களாக விளங்கக் கூடிய அக்னி, இந்திராதி தேவர்களெல்லாம் பகவானிடத்தில் கொண்ட பயத்தினால் தங்கள் கடமையைச் செய்கிறார்கள். தேவதைகள் அத்தனைபேரும் அந்த எம்பெருமானுடைய ஆக்ஞையைச் சிரஸிலே வைத்து, அந்தந்தக் காலத்திலே தங்கள் தங்கள் கடமையைச் செய்கிறார்கள் என்று சொன்னால், செய்யாதவன் ஒருவன் உள்ளானா என்று கேள்வி கேட்டால்...

சென்றவாரம் என்னுடைய செல்போனை சர்வீஸ் செய்ய சர்வீஸ் சென்டருக்கு எடுத்துச் சென்றேன். அப்பொழுது அங்கு எழுதியிருந்த ஒரு 'கிறள்' என்னை மிகவும் கவர்ந்தது.

'செல்'லின்றி அமையாது உலகு
எனின் யார் யார்க்கும்
'நெட்வொர்க்'கின்றி அமையாது
லைன்.

- நாமக்கல் சந்துரு

(இன்றைய யுகத்துக்கு ஏற்ப உங்களுக்கு இந்த மாதிரி, கிறள் ஏதும் தோன்றினால் எழுதி அனுப்பலாமே!

- ஆர்)

அப்படிச் செய்யாதவன் யார் என்று கேட்டால்... நாம்தான் செய்யாதவர்கள். மனுஷ்யன்தான் செய்வதில்லை! பகவானுடைய ஆக்ஞையை மீறி அவன் வாழ்கிறான். அந்த மாதிரி ஒரு கெட்ட புத்தியானது நமது! சக்தியை பகவான் கொடுத்தால், அதை விபரீதமாகப் பயன்படுத்திக் கொண்டு, அவனையே மறந்து எதிர்க்கும்படியான துராலோசனை ஏற்படுகிறது மனுஷனுக்கு.

இப்படிப்பட்ட சக்தி படைத்த தேவதைகளெல்லாமே நடுநடுங்கிக் கொண்டு, அந்த எம்பெருமானின் ஆக்ஞைக்கு உட்பட்டு, அந்தந்தக் காலத்தில் கடமையைச் செய்கிறார்கள். ஆகவே, நாமும் அந்தந்தக் காலத்திலே கடமையைச் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது உபநிஷத்.

காலத்திலே செய்யாதது பலனைக் கொடுக்காது. கால ரூபியாய் இருந்து பரமாத்மா பலனைக் கொடுப்பதனாலே, அந்தந்தக் கர்மாவுக்கும் காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது ஒரு சிராத்தம் செய்வதென்றால், அதற்கு ஒரு காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

சிராத்தத்திலே (பித்ரு காரியம்) மூன்று விஷயங்கள் பவித்ரமானவை.

மாதாமகர் - தாத்தாவுடைய (அதாவது அம்மாவைப் பெற்ற தாத்தாவுடைய சிராத்தத்திலே யார் ரொம்ப முக்கியமென்றால், தௌஹித்ரன்தான் ரொம்ப முக்கியம். தௌஹித்ரன் என்றால் பெண்ணுக்குப் பிறந்த பிள்ளை (பேரன்). அவனை அந்த பித்ரு ஸ்தானத்தில் வைத்தால், அந்த சிராத்தம் பவித்ரமாகிறது. அந்த பித்ரு தேவதைகள் பரம சந்தோஷம் அடைகிறார்கள்.

அதே மாதிரி குதம காலம். மத்தியானம் ஒரு மணிக்கு மேல் மூன்று மணிக்குள்ளாக இருக்கும்படியான காலம், குதம காலம் என்று பெயர்.

பத்து மணிக்கே, "ஆகச்சந்து மஹாபாகா" என்று பித்ருக்களை அழைத்தால், வரமாட்டார்கள் யாரும்!

அதனால், காலத்தில் அவர்களைக் கூப்பிட வேண்டும்.

நமக்கு உபன்யாஸ காலம் சாயங்காலம் ஏழிலிருந்து ஒன்பது என்று போட்டிருக்கிறோமல்லவா... அப்படியிருக்கிறபோது, பிராதஹ் காலம் ஆறு மணிக்கு வந்து, யாராவது உபன்யாஸம் கேட்க உட்காருவார்களா? கால நிர்ணயம் பண்ணியிருப்பதாலே அந்தக் காலத்தில் வந்து நாம் கூடுகிறோம். அந்த மாதிரி, பித்ரு தேவதைகளை அழைப்பதற்குக் கால நிர்ணயம் இருக்கிறது. அந்தக் காலத்தில் அவர்களை அழைத்தால்தான் வருவார்கள். மீதிக் காலத்திலே வர மாட்டார்கள்.

எல்லா தேவதைகளையுமே அழைப்பதற்குக் கால நிர்ணயம் உண்டு. பிராதஹ் காலத்தில் இந்திராதி தேவதைகளை அழைக்க வேண்டும். இரவு என்பது அசுரர்களுடைய காலம். அந்தக் காலத்தில் கூப்பிட்டால்தான் அவர்கள் வருவார்கள்.

இவ்வாறு காலத்தை உணர்ந்து தெய்வ காரியங்களை நாம் பண்ணினால்தான், விசேஷ பலனை அவை கொடுக்கும். நாம் அவ்வாறு காலத்தே செய்கிறபோது, கால ரூபியாக பகவானே இருந்து - ஒவ்வொரு கர்மாவிலும் இருந்து - பலனைக் கொடுக்கிறான். பூதமாகவும் பவ்யமாகவும் பவிஷ்யத்தாகவும் இருந்து பலன் அளிக்கிறான்.

'பூதம் பவ்யம் பவிஷ்யத் வஷட் ஸ்வாஹா...' என்று தொடங்கி, வேதத்தில் இதே சப்தம் வருகிறது. அசுவமேத மஹா யக்ஞத்தில் அமைந்திருக்கிறது.

ஆகையினாலே, அசுவமேத யக்ஞம் பண்ணிய பலனை நாம் அடைந்து விடுகிறோம். அப்படி விசேஷமாக, கால ரூபியாக இருந்து தாங்குகிறான் பரமாத்மா.


(வளரும்)

"மாண்புமிகு கல்கி வாசக மகா ஜனங்களே! வணக்கம்! நான்தான் வீரப்பன் ஆவி பேசறேன். தமிழ்நாட்டுலே ஒரு சில பிரபலங்க வீரப்பன்கிற பேர்லே இருக்கிறதாலே, நான் சந்தனக் கட்டை வீரப்பன்கிறதை தெளிவுபடுத்த விரும்பறேன். நான் இப்போ சொர்க்கத்துலேர்ந்து பேசறேனா, இல்லை நரகத்துலேர்ந்து பேசறேனாங்கறதை கடைசியில் சொல்றேன். அதுக்கு முன்னாடி நான் உங்ககிட்ட பேசியே தீர வேண்டிய அவசியத்தை,



கோடம்பாக்கத்து ஆளுங்க உண்டாக்கிப் போட்டாங்க.

நான் இருநூறு ஆனைகளையும், ஒரு நூறு ஆளுகளையும் குருவி



# பதவி படுத்தும் பாடு!

சுடுற மாதிரி சுட்டவன்கிறது எல்லா பேத்துக்கும் தெரியும். அதுமட்டுமில்லே, ஆள் கடத்துற ஜோலியிலே நம்மள அடிச்சுக்க ஆள்கிடையாது. கன்னட சூப்பர் ஸ்டார் ராஜ்குமாரை கடத்திக்கிட்டு வந்து காட்டுக்குள்ளே வச்சதும் தான் தெரிஞ்சது, அவரு சரியான டுப்பார் ஸ்டாருன்னு. அப்பாலிக்கா நம்ம நெடுமாறன் அய்யா வந்து சொன்னப்புறம்தான், அந்த ஆளை போனாப் போவுதுன்னு வுட்டேன். "காட்டுக்குள்ளே கெடந்து கஷ்டப்படுறதைவிட, நாட்டுக்குள்ளே வந்தின்னா, எலெக்ஷன்லே ஜெயிச்சு மந்திரியாயிடலாம்'ன்னு எல்லாரும் சொன்னாங்க.

கழுதை, கட்டை கெடத்தி அலுத்துப்போன எனக்கு, அரசியல்லே வந்து கொட்டைப் போடலாம்ன்னு ஆசை வந்துடுச்சு. ஏற்கெனவே நம்ம தங்கச்சி பூலான்தேவி எம்.பியாயி, அசம்ப்ளியைக் கலக்கி இருக்கும் போது கவலை இல்லாம கட்சி ஆரம்பிக்கலாம்ன்னு காட்டுக்குள்ள கொடி ஏத்துனேன். ஆனால் அரசியல்லே பதவி கிடைக்கிறதுக்கு முன்னாடி எமலோகப் பதவி வாங்கிக் கொடுத்திட்டாங்கோ நம்ம அதிரடிப்படை.

இந்தப் பதவியாவது கிடைச்சுதேன்னு நான் மேலே வந்து அல்லாடிக்கிட்டு இருக்கும்போது, இந்த கோடம்பாக்கத்துக்காரங்க நம்மளே வுடமாட்டாங்க போல கீது. அதாகப்பட்டது, எங்கிட்டே ஒரு

வார்த்தை கேட்காம, எம்மனைவி முத்துலெட்சுமிக்கு ராயல்டி கொடுக்காம, நம்ம கதைய 'பதவி படுத்தும் பாடு'ங்கிற தலைப்புலே சினிமாவா எடுத்து முடிச்சுட்டாங்களாம்! நம்ம வேஷத்தைக் கட்டியிருக்கிறவர் ரஞ்சித். நம்ம ஸ்டைல் எல்லாத்தையும் அப்படியே ஃபாலோ பண்ணியிருக்காரு. பேரு மாரப்பன். இதெல்லாம் இருக்கட்டுமுங்க. நான் கடத்துன ராஜ்குமார்



வேஷத்தை பழம்பெரும் நடிகர் ரவிச்சந்திரன் கட்டியிருக்காரு. நெடுமாறன் அய்யா வேஷத்துலே நம்ம ராஜேஷ். எவ்வளவு கச்சிதமா ஆளுங்களைப் பொறுக்கிப் போட்டிருக்காரு பாருங்க. அப்பாலிக்க, நம்ம தம்பிங்க, சேத்துக்குளி கோவிந்தன், அர்ஜுனன் அத்தனை பேரும் உண்டு.

நம்ம அரசியல் கனவை இந்தப் படத்துலேதான் நிறைவேத்தியிருக்காங்க. அதாவது, நான் நாட்டுக்குள்ளே வந்து எலக்ஷன்லே நின்னு எம்.எல்.ஏவா ஆயிடறேன். தொடர்ந்து அரசியல்லே இருக்கேனா இல்லை, நாட்டைவிட காடு பெட்டருன்னு மூட்டை கட்டிகிட்டு ஓடிப்பூட்டனான்னு டைரக்டரு க்ளைமாக்ஸ் வெச்சிருக்காரு.

ஆவியான எனக்கே என்ன க்ளைமேக்ஸ் எடுத்துருக்காங்கன்னு தெரியலேன்னா, இந்த கோடம்பாக்கத்து ஆளுங்க எத்தனை மொள்ளமாறிங்கன்னு பார்த்துக்கிடுங்க. சரி போவுது! பதவி படுத்துற பாட்டுலே நம்ம கேரக்டர் டூயட்டெல்லாம் பாடுறதுக்கு வாய்ப்பு



கொடுத்திருக்கிறது ரொம்ப கௌரதியா இருக்குப்பா. கண்ணுல தண்ணீர் முட்டுது. இந்தப் படம் வெளியான பொறவு, தமிழ்நாட்டுலே ஒரு குட்டியூண்டு பூகம்பம் வெடிச்சா ஆச்சரியமில்லே... என்னது! பொறவு நான் நரகத்துலே, இருக்கேனா, சொர்க்கத்துலே இருக்கேனான்னு சொல்லணுமில்லே. இன்னாப்பா, நான்தான் பாவு நாலு வுடுறமாதிரி இடையிலே எமலோகப் பதவின்னு சொன்னேனே புரிஞ்சுக்கலியா?"

- ஜோஸ்வா பாரதி

# ஹாஸ்ய விபத்துகள்!



அமரர் கல்கி

தெ ன்னாலிராமனுக்கு ஜலதோஷம் பிடித்திருந்தது. அதைப் பற்றி இப்போதென்னவென்று கேட்டால், சிலருடைய பாக்கியம் அத்தகையது. மக்டனால்டுக்காவது, சர்ச்சிலுக்காவது, ஹரல்டு லாயிடுக்காவது, டக்லஸ் பெயர் பாங்ஸுக்காவது ஜலதோஷம் பிடித்தால், இவ்வுலகிலுள்ள ஐம்பதினாயிரம் தினசரிப் பத்திரிகைகளிலும் அது மறுநாளே வெளியாகவில்லையா? தென்னாலிராமன், இவர்களையெல்லாம் விடப் பெரியவன். ஆகவே அவனுக்கு எப்போதோ பிடித்த ஜலதோஷத்தைப் பற்றி, இப்போது நாம் படிக்க வேண்டியிருக்கிறது.

தென்னாலிராமன் சிவபெருமானோடு தான் இரண்டறக் கலந்துவிட்டதாக எண்ணலானான். சிரசிலுள்ள கங்கா நதியானது மண்டை ஓட்டில் தொளை போட்டுக் கொண்டு, மூக்கு வழியாகப் பிரவாஹிக்க ஆரம்பித்துவிட்டதென்று கருதினான். மனிதப் பிறவியில் ஜலதோஷத்தைவிடக் கொடிய துன்பம் ஒன்றுமில்லையென்று முடிவு செய்தான். தற்கொலை செய்து கொள்ளலாமா என்றுகூட அந்த வேளை நினைத்தான்.

புவன மாதாவாகிய காளிதேவியைக் குறித்துத் தென்னாலிராமன் கடுந்தவம் புரிந்து கொண்டிருந்தான். கடைசியில் மாதா கருணை கூர்ந்தாள். தனது ஆயிரம் சிரங்களுடனும், ஈராயிரம் கரங்களுடனும் பிரசன்னமானாள். அத்தோற்றத்தைக் கண்டதும் தென்னாலிராமன் முகத்தில் புன்னகை உண்டாயிற்று. புன்னகை விரைவில் பெருநகையாயிற்று. ஆனமட்டும் அடக்கிப் பார்த்தும் முடியவில்லை. குப்பென்று சிரிப்புப் பீரிக்கொண்டு வந்தது. கலகலவென்று சிரித்தான்.

மாதா கோபங்கொண்டாள். தன் வடிவத்தைக் கண்டதும் தென்னாலிராமன் பயபக்தியுடன் பேசவும் நாவெழாமல் திகைத்து நிற்பான் என்றுதான் எண்ணியிருந்தாள். "அடா! ஏன் சிரிக்கிறாய்? உடனே சொல்!" என்று கேட்டாள்.

"அம்மா, மன்னிக்க வேண்டும். ஒரே மூக்குடன் கூடிய எனக்கு ஜலதோஷம் வந்தபோது, நான் பட்டபாடு சொல்லத்தரமன்று, உயிரை விட்டுவிடலாமா என்று நினைத்தேன். ஆயிரம் மூக்குள்ள உனக்கு ஜலதோஷம் வந்தால் என்ன செய்வாய் என்று நினைத்தபோது, எனக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது. நீ உயிரைக் கூட விடமுடியாதே?" என்றான் தென்னாலிராமன்.

காளி மாதா கோபங்கொண்டாள். 'பார்த்தாயா, இவன் நம்மைப் பரிகாசம் செய்தான்' என்று நினைத்தாள். "நீ விகடகவியாகப் போகக் கடவது" என்று சாபங் கொடுத்தாள்.

தென்னாலிராமன் மறுபடியும் சிரித்தான். தேவி மீண்டும் சிரிப்புக்குக் காரணங் கேட்டாள்.

"அம்மா! நீ கொடுத்த வரத்தை நினைத்துச் சிரித்தேன். இடம் வலமாகப் படித்தாலும் விகடகவி; வலம்

இடமாகப் படித்தாலும் விகடகவி'' என்றான்.

மாதா மகிழ்ச்சி கொண்டாள். "நீ அரண்மனை விகடகவியாகக் கடவாய்" என்று வரங் கொடுத்து அந்தர்த்தான மானாள்.

ஹாஸ்யம். தாய் அதைக் கொண்டு மகிழ்ந்து வரம் அளிக்கிறாள். ஜகன் மாதாவின் சங்கதியே இப்படியானால், கேவலம் நம் போன்ற மானிடர்களைப் பற்றிக் கேட்பானேன்?

ஹாஸ்யத்திலுள்ள விபத்துக்களை இந்தக் கதையிலிருந்து நன்கு அறிந்து கொள்கிறோமல்லவா? தென்னாலி ராமன்



மேற்படி கதையில் ஒரு சிறு மாறுதல் செய்தோமானால், 'ஜகன் மாதாவுக்கு நகைச்சுவை உணர்வு இல்லை' என்னும் அபகீர்த்தி ஏற்படாமல் தடுக்கலாம். முதலில் கொடுத்ததை வரம் என்றும், பின்னால் அளித்ததைச் சாபம் என்றும் மாற்றிவிடுங்கள். தென்னாலிராமனின் முதல் பதிலில் இருந்த ஹாஸ்யரஸத்தை அநுபவித்து மகிழ்ந்த அன்னை, 'நீ விகடகவியாயிருந்து எல்லா மக்களையும் மகிழச் செய்வாய்' என்று ஆசிர்வதிக்கிறாள். ஆனால் அடுத்தாற்போல் அவன் ஒரு கீழ்த்தர விகடம் செய்யவே, 'அரண்மனை விகடகவியாகி, நகைச்சுவை இல்லாத இராஜாவுக்கும் பிரபுக்களுக்கும் மத்தியிலிருந்து அவஸ்தைப்படக் கடவாய்!' என்று சபிக்கிறாள்.

காளியின் ஆயிரம் மூக்குகளைக் குறிப்பிட்டது, ஓர் உயர்தர ஹாஸ்யமென்று பலர் கருதுவார்கள். தேவி அதை அறிந்து அநுபவித்து மகிழாமல் சாபம் கொடுக்கிறாள். பின்னால் 'விகடகவி' யைப் பற்றிக் கூறியது ஒரு கீழ்த்தர

- **'அதிர்ஷ்ட கவசம்' நூலிலிருந்து**
**வானதி பதிப்பகம்**

# ஈஸ்வர்குமார்

விடியற்காலை நாலரை மணி. பாகீரதி தட்டுத் தடுமாறி எழுந்தாள். எப்படியோ சிரமப்பட்டு ஓர் உத்தேசமான இடத்துக்குப் போய் விசையைத் தட்டினாள். இலேசாக வெளிச்சம் வந்தது.

தகுந்த குருவை நாடினால் பூரணமான அறிவு கை கூடுகிற மாதிரி, அந்தச் சிறிய ஒளியே, பழைய வீட்டில் விடிந்தும் விடியாமலுமிருக்கிற சமயத்தில், பூஜை அறைக்குப் போக வழி காட்டியது.

எண்பது வயசு பாகீரதி, கூனிக் குறுகி கேள்விக் குறி போல் மாறிவிட்ட உடம்பை அகட்டி அகட்டி, முன்னே நடந்தாள். சோபா இடறியது. சின்னத் திரை ஸ்டாண்ட் தடுக்கியது. என்ன காரணத்துக்காகவோ போடப்பட்ட நாற்காலி, குறுக்கே புகுந்தது. ஆடிய நாற்காலியை ஓசைப்படாது வைத்துவிட்டு முன்னேறினாள்.

இந்த ஸ்டிக் எங்கே? சாட்சிக் கூண்டு போல ஓர் இரண்டுங்கெட்டான். வீசி எறியவும் முடியவில்லை. தொந்தரவு ஆகவும் இருக்கிறதே! மூலையில் இருந்த அதை மெள்ளப் பிடித்துக் கொண்டு (எவ்வளவோ சாமான் இந்த கூடுவாஞ்சேரி வீட்டில். சாட்சிக் கூண்டும் இருந்து விட்டுப் போகட்டுமே!' மருமகளிடம் பிள்ளையின் கரிசனம்!)



தத்தை... தத்தை... தத்தை கடலத்தை பெற்ற நத்தை!

தொகுப்பு : சாஃப்ட்வியூ விஷுவல் கம்யூனிகேஷன்



பூஜை அறையை அடைந்தாள். அலமாரியைத் திறந்தாள். நிறையப் படங்கள். அந்தக் காலத்து ராமர் பட்டாபிஷேகப் படம். மருத மலை முருகர், பிள்ளையார் பட்டி விநாயகர், அன்னபூரணி, லக்ஷ்மி நரசிம்மர், தட்சிணாமூர்த்தி...

இரண்டாவது தட்டில் கை கூப்பி நிற்கும் ஆஞ்சநேயர்... அருகில் விளக்கு... பார்த்தாள்.

குனிந்து, வலியை ஒரு கணம் மறந்து, கீழே விழுந்து நமஸ்காரம் செய்தாள். 'பரவாயில்லை... இன்றைக்கு வேண்டாம். ஆஞ்சநேயரே... இன்றைக்கு அருள் புரிந்தாய்!'

திரும்பி நடந்தாள். கொஞ்சம் அதிக உற்சாகத்தாலோ... கவனக் குறைவாலோ, சமையல் உள்ளில் ஏதோ பாத்திரம் தடுக்கி சாய்ந்து ஓசை ஏற்படுத்தியது.

"கிழம் என்ன செய்கிறது!" - தூக்கம் கலைந்து போன மருமகளின் எரிச்சல்.

"என்ன அம்மா இது! ஒரு நாளைப் போல சீக்கிரம் எழுந்து- அந்த ஹனுமார் ஓடிப் போய் விடப் போகிறாரா... சட்... காலங் கார்த்தாலே உன்னோட பெரிய பாடு!" - இது பிள்ளை.

பாகீரதி எதுவும் சொல்ல

வில்லை. அமைதியாகத் தன் இருக்கைக் குச் சென்று ருத்திராட்ச மாலையை உருட்டினாள், புன்னகை செய்து கொண்டாள்... எண்ணெய் கசிந்திருக் கும் வெள்ளைத் திரி.. அனுமார் வாலில் உள்ள பழுப்பு சந்தனப் பொட்டு... சிவப்பு நிறக் குங்குமம்.

எல்லாம் பளீரென்று தெரிகின்றன. இருக்கிற ஒரு கண்ணுக்கு ஆபத்து இல்லை.

அதற்குப் பழுது ஏதாவது நேர்ந்தால்... இங்கிருந்து ஆழ்வார்ப்பேட்டை வரை போய் நிபுணரைப் பார்க்க வேண்டும், மருமகள் முனகுவாள்... பிள்ளைக்கு எரிச்சலும் கோபமும் வரும்.. தன் கரு



# கிரேஸி பாட்டி

விழிப் பார்வை சரியாக இருக்கிறதென் பதை ஊர்ஜிதம் செய்து கொள்ள, வீட்டிலேயே ஓர் எளிய சோதனை - பூஜை அறையில் உள்ள பல நிறங்கள் தெரிந்தால் - பார்வை பழுதடையவில்லை என புரிந்து கொள்வாள்.

அப்போதுதான் விழித்த பேரன் பாகீரதியைக் கட்டிக் கொண்டான். "ஏன் பாட்டி சீக்கிரம் எழுந்து அப்பாகிட்டே திட்டு வாங்கறே?"

"சுவாமி படத்துல கண் முழிச்சா, புண்ணியம்டா கண்ணு! போ.. பல் தேய்ச்சுட்டு வா... சுலோகம் சொல்லித் தரேன்!" என்றது காதில் விழ...

"கிரேஸி உமன்" என்று எரிச்சலுடன் முணுமுணுத்தாள் மருமகள். ●

# இன்னா மனுசனுங்கோ!

**கின்னஸ் பொஸ்தகத்தை பொரட்டினா, படா பேஜாரா பூட்சுப்பா! ஜனங்க 'ஓலக சாதனை' பண்ணனும்னு, இன்னாவெல்லாம் பண்றாங்க தெரீமா? படா கிரேஸி ஜனங்க! உதாரணத்துக்கு கொஞ்சம் எடுத்து உடறேன் படீங்க.**

**ந**ம் ஊரு டீ.வி.ல சவால்னு ஒரு புரோகிராம் காட் றாங்கல்ல. அது மாதிரி பிபிசில ஒரு புரோ கிராம் உண்டாம். அதுல, ஸ்காட்டேன்னு ஒருத்தர் கலந்துகிட்டு, ஒரு காசை சுண்டி விட்டாராம் பாரு! அதுபாட்டுக்கு கீழே உயாம சுத்திகினே இருந்திச்சாம். எம்மா நேரம் தெரீமா? 20 செகண்டு.



**பா**ம்புங்க விஷயத்துல படா கில்லாடியாம் அமெரிக்கா காரரான கார்டன் கேட்ஸ். அயகான பொண்ணுங்க கணக்கா பாம்புக்கு கிஸ் குடுப்பாராம். மனுசன் அதுல ஒரு சாதனை பண்ணி கிறாருப்பா. ஒரே தபால, அடுத் தடுத்து நல்ல பாம்பு, ராஜ நாகம்னு பதி னோரு பாம்புகளுக்கு கிஸ் அடிச்சிருக் காரு இவரு. நல்ல காலம், பாம்புங்க இவரை பதிலுக்கு பல்லால கிஸ் அடிக்கலை.

**ந**ம் ஊர் புள்ளிங்கல்லாம் முதுகுல பொஸ்தகப் பையை சொமந்துகினு ஸ்கூல் போவறாப்பல, தலையில புஸ்தகத்தை கீய உயாம பேலன்ஸ் பண்ணிகினு நடக்கற துல ஒரு சாதனை பண்ணிகிறாங்கப்பா. ஜான் ஈவான்ஸ்ங்கிறவரு ஆறடி உயரத் துக்கு ஒண்ணுமேல ஒண்ணா நாலு கிலோ புஸ்தகத்தை தலமேல அடுக்கிக் கினு, ஒரு புக்கும் கீய உயாம நடந்து காட்டினாராம். எப்டி சாதனை பண்ணீங் கன்னு பேப்பர்காரங்க கேட்டப்போ, ஜானு, "நான் பதினெட்டு வயசுலருந்து, தலைல செங்கல் தூக்கி பொழப்பு நடத் தறவன். புக் தூக்கி சாதனை பண்ணறதுல இன்னா கஸ்டம்?"ன்னு சொன்னாராம்.



**நா**ம சலூனுக்கு போய் குந்தினா, பார்பர் ஒத்தைக் கையில சிம்பும் இன் னொரு கைல கத்திரியும் புடிச்சுதானே முடி வெட்டறாங்க. ஆனா அமெரிக்கா காரன் புருக, எட்டு கத்திரியை ஒத்தைக் கைலே புட்சிகினு, கத்தியாலயும் மாத்தி மாத்தி தலைமுடி வெட்டி அசத்திட்டா ராம். ஒரு கிடார் வாசிக்கிறவரு, ரெண்டு




கிடாரை மாட்டிக்கினு, ரெண்டையும் மாத்தி மாத்தி வாசிச்சதை கண்டுகினு, "நாம பத்து வருசமா முடிவெட்டிகினு கிறோமே, நாமளும் ரெட்டை கத்திரி புட்சி வெட்டிப்பாக்கலாமேன்னு ஆரம் பிச்சு, பிராக்டீஸ் பண்ணி எட்டு கத்தி புட்சி முடிவெட்டினாராம்.

**வெ**ரலை கண்டி சொடக்குப் போட்டா இங்க சில சோமாறிங்க தப்பா எடுத்திறாங்கல்ல. ஆனா, கலிபோர்னியா வுல இருக்கிற பாப்ஹாசங்கிறவரு சொடக்கு போட்றதுலகூட சாதனை பண்ணிகிறாராம். அவரு போட்ட சொடக்கு 108 டெசிபல் சவுண்டுக்கு கணீர்னு கேட்டிச்சாம்.



**டா**ஸ்மாக் போயி தண்ணி அடிச் சிட்டு நானு வந்துகினே இருப்பேன். ஆனா அமெரிக்காக்காரன் அஸ்ரீடா பிரிமன் பீர் அடிக்கிற கிளாஸை எடுத்து, தன் மொவாக்கட்டையில ஒண்ணுமேல ஒண்ணு அடுக்கிகினே போனாராம். 75 கிளாஸை பத்து செகண்டு மொவா கட்டையில நிக்க வெச்சது இவ ரோட சாதனை!



**ப**சிச்சா சோறு துன்ன வேண்டியது தானே! இங்கிலீசு பொம்பளை சுமி என் னாத்த சாப்பிடுது தெரீமா? 'கத்தி'பா! பிரான்ஸ்காரரு மைக் கேல் லோடிடோஸ்கிறவரு துன்றது இன்னா தெரீமா! காயலாங் கடை சமா சாரம், கிளாஸு...

- பொரசவாக்கம் பக்கிரி கூற

**மானஸா**



# தெம்புக்குப் படிங்க–16

## தென்கச்சி சுவாமிநாதன்

# உண்மை என்றால் என்ன?

அது காமராஜர் காலம்.

அப்போது காங்கிரசில் ஒரு விதி முறை இருந்தது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் உறுப்பினர்களாக இருப்பவர்கள், மது அருந்துபவர்களாக இருக்கக் கூடாது.

இந்தச் சமயத்தில் கவிஞர் கண்ணதாசன் காங்கிரஸ் கமிட்டியில் உறுப்பினர் ஆனார். அதைத் தொடர்ந்து அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், காங்கிரஸ் கமிட்டியின் சட்டதிட்டங்களைக் குறிப்பிட்டுவிட்டு, ''ஆகவே... தங்கள் மது பர்மிட்டை திருப்பிக் கொடுத்து விடுங்கள் - அதாவது 'சரண்டர்' செய்து விடுங்கள்' என்று எழுதியிருந்தார்கள்.

இந்தச் சூழ்நிலையில், தலைவர் காமராஜர் டெல்லியிலிருந்து சென்னைக்கு வந்தார்.

கவிஞரை அழைத்தார்.

தலைவர் முன்னால் போய் நின்றார் கவியரசர்.

அவர் கேட்டார்.

''அந்தக் கடுதாசிக்கு என்ன பதில் போட்டே?''

என்ன கேட்கிறார் தலைவர் என்பதைக் கவிஞர் புரிந்து கொண்டார்.

உடனே பளிச்சென்று பதில் சொன்னார்:

"சரண்டர் பண்ணப் போகிறேன்!"

"எதை?"

''அதைத்தான்... அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் கார்டை!''

அதுதான் கவிஞர் கண்ணதாசன்.

அவர் மனசுக்குத் திரைபோடத் தெரியாதவர். அப்படிப்பட்டவருக்கு அரசியல் உலகம் சரிப்பட்டு வராது! கவிதை உலகம் கைகோத்து வரும்!

உண்மை என்பது என்ன என்று ஒரு பெரியவரைக் கேட்டார்கள். அவர் சொன்னார்:


''உண்மை என்பது சூது இல்லாமையும், வாக்கிலும் மனதிலும் காயத்திலும் கபடமில்லாமையும் ஆகும்.''

நம் பக்கம் உண்மை இருப்பது வேறு; நாம் உண்மையின் பக்கம் இருக்க விரும்புவது வேறு என்பார்கள்.

நண்பர்களே!

நமக்குப் பக்கத்தில் உண்மை நின்று கொண்டிருக்கிறதா என்று கவலைப்பட வேண்டாம்!

நாம் உண்மையின் பக்கத்தில் இருக்கிறோமா என்று பாருங்கள். அதுபோதும்!



(தொடரும்)



இலங்கை கிரிக்கெட் நட்சத்திரம் முரளி முத்தையாவை மணக்கவிருக்கும் மதி மலருக்கு (விருச்சிகம்) மகிழ்ச்சியான வாரம்!

# நடக்குமென்பார்; நடக்கும்!


## பிப்ரவரி 16 முதல் 22 வரை



**மேஷம் :** காலம்பற நரி முகத்தில விழிக்கறதும் நானே என்னை கண்ணாடியில பாத்துக்கறதும் ஒண்ணுதான்னு சில பேர் இருக்காங்களே, அதே மாதிரி சூரியனும் புதனும் உங்களைப் பார்க்கிறதால, வார ஆரம்பத்திலேலிருந்தே எல்லாக் காரியமும் வெற்றிதான். உற்சாகம் உல்லாசம்னு தூள் கிளப்புவீங்க. தேவைக்கேற்ற பண வசதி வேற கூடிடும். ஜமாய்ங்க. ஆபீஸ்ல புதிய திருப்பம் ஒண்ணு காத்திருக்கு. பதவி உயர்வும், விரும்பிய இடமாற்றமும் சிலருக்குக் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில கொடுக்கல், வாங்கல் கை கொடுக்கும். குடும்பத்தில சொத்து விவகாரங்கள் சுமுகமா முடிஞ்சு சந்தோஷம் கூடும்.



**ரிஷபம் :** யார் உங்களைப் பார்க்கணும்ங்கறதுக்காக பத்துத் தடவை குறுக்கும் நெடுக்குமா போய் வந்திங்களோ, அவங்க உங்க பக்கத்திலேயே வந்து உக்காந்து பேசினா என்ன ஆவீங்க? அப்படியொரு தலைகால் புரியாத குஷியான வாரம்க இது. உங்க திறமையும் அறிவும் கொட்டிக் குவிச்சு காரியங்களை வெற்றிகரமா முடிப்பீங்க. அப்பப்போ கொஞ்சம் தடங்கல்கள் வரும், தளர்ந்துடாதீங்க. எல்லாம் வந்தவழியே போயிடும். ஆபீஸ்ல முன்னேற்றமான நேரம்தான். தொழில், வியாபாரத்தில லாபம் கூடி, புதிய தொழில் முயற்சியும் வெற்றியாகும்.



**மிதுனம் :** கேக்கறதுக்கு ஆள் கிடைச்சா, சில பெரிசுகளுக்கு பழங்கதையைக் கொட்டித் தீர்க்கணும்னு ஒரு வேகம் வருமே, அந்த மாதிரி உங்க பேச்சுத் திறமை கூடி எல்லாச் சிக்கல்களையும் சுலபமா தீர்க்கும். வி.ஐ.பி.க்கள் ஆதரவும், பயணங்கள்ல அனுகூலமும் கூடும். ஆபீஸ்லயும் ஒரு அதிர்ஷ்டம் காத்திருக்கு. அளவாய்ப் பேசி அழகா கையாண்டிங்கன்னா, எல்லாம் சாதகமா நடக்கும். தொழில், வியாபாரத்தில எதிர்பார்த்த உதவிகள் கிட்டும். குடும்பத்தில இதுவரை இருந்த குழப்பங்கள் மறைஞ்சு நிம்மதியான சூழ்நிலை நிலவும்.



**கடகம் :** பழைய பாடல்கள்னா பைத்தியமா அலையறவருக்கு பக்கத்து வீட்டுக்கே அபிமான பாடகர் வந்து சேர்ந்த மாதிரி ஒரு சந்தோஷம் கிடைச்சுடும். புதுசா சில சுவாரசியமான அறிமுகங்கள் கிடைக்கும். ஆரோக்கிய மேன்மையும், வெளிநாட்டுத் தொடர்பால அனுகூலமும் கிட்டும். ஆபீஸ்ல இதுவரை தாமதமான உங்க கோரிக்கைகள் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில பழைய கடன்கள் தீர்ந்து புதுத் திருப்பம் ஏற்படும்.


## அக்னிசர்மா பக்கம்




**சிம்மம்** : 'பைத்தியத்துக்கு வைத்தியம் பார்க்கிற டாக்டர்', விசு கிட்ட மாட்டினா, என்ன ஆவாருங்க? அதே கதிதான் உங்களை எதிர்க்கிறவங்களுக்கு. உங்க திறமை, அறிவாற்றல், பேச்சாற்றல் கூடி காரியங்களை சாதிக்கும். மதிப்பும் அந்தஸ்தும் உயரும். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். ஆபீஸ்ல முன்னேற்றமான நேரம். நிர்வாகத் துறையில இருக்கிறவங்க மேன்மை பெறுவாங்க. தொழில், வியாபாரத்தில லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில குதூகலம் கூடும். சுப மங்கள காரியங்கள் கூடி வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு பக்தி, வேதாந்தம்னு ஆன்மிக ஈடுபாடு கூடும். தெளிவு பிறக்கும். பெண்களுக்கு சிறு பிரச்னைகள் ஏற்பட்டு மறையும்.



**கன்னி** : இலவசமா கொடுக்கறாங்கன்னு சொன்னா, நம்ம மக்கள் எங்கே, எங்கேன்னு ஓடி வருவாங்களே, அந்த மாதிரி உங்களுக்கு வரவேண்டிய பணம், ஆதரவு, தெய்வபலம் எல்லாம் தேடி வந்துடும். இதுவரை வேண்டாத விருந்தாளியா இருந்த பண நெருக்கடி மறைஞ்சுடும். எதிர்பாரா பயணம் ஒண்ணு காத்திருக்கு. ஆபீஸ்ல கொஞ்சம் கடுமையா உழைக்க வேண்டி வரும். அதுக்காக தளராதீங்க. உழைப்புக்கு ஏற்ற பலன் நிச்சயம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில கொஞ்சம் நெருக்கடிகள் காத்திருக்கு. எச்சரிக்கையா இருந்தா சமாளிச்சுடலாம், குடும்பத்தில உற்சாகமான நேரம். திருமண முயற்சிகள் கூடி வரும்.



**துலாம்** : பஸ்லேயே காலேஜுக்குப் போய் வந்தவனுக்கு பைக் கிடைச்ச மாதிரி, உங்க வேகம் கூடிப் போய் இதுவரை தாமதமான வேலையெல்லாம் பட்பட்டுன்னு முடிஞ்சுடும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடி எதிர்ப்புகளை அடக்கிடும். புதியவர்கள் அறிமுகம் சிலது கிடைக்கும். ஆபீஸ்ல அனுகூலங்கள் சிலது கிடைக்கும். தொழில், வியாபாரத்தில பண நெருக்கடிகள் விலகி நிம்மதி கிடைக்கும். ஏற்றுமதி - இறக்குமதி தொழில்ல நல்ல லாபம் கிட்டும். குடும்பத்தில ஒற்றுமையும், பொருளாதார அபிவிருத்தியும் கூடும். மக்களால் மன நிறைவும் மகிழ்ச்சியும் உண்டாகும். பெண்களுக்கு சுபச் செலவுகள் ஏற்படும்.



**விருச்சிகம்** : சீக்கிரமா வேலையை முடிச்சு, சாப்பிட்டாத்தானே சீரியல் பார்க்க முடியும்னு சிலர் அவசரமா எல்லாத்தையும் செய்வாங்க. இடையில ஏடாகூடமா முக்கியமானதை விட்டுட்டு கஷ்டப்படுவாங்க. அந்த மாதிரி சின்னச் சின்ன பிரச்னைகள் அப்பப்போ வந்து போகும்னாலும் மொத்தத்தில பண வரவு, நண்பர், உறவினர் ஆதரவு, எல்லாம் சேர்ந்து மகிழ்ச்சியான வாரம். ஆபீஸ்ல உங்க உழைப்புக்கும் திறமைக்கும் உரிய அங்கீகாரம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில நெருக்கடிகள் குறையும். கூட்டுத் தொழில்ல அனுகூலமான பலன்கள் கிடைக்கும்.




**தனுசு** : 'குத்து' பாடல் பாக்கறதுக்காகவே விஜய் படத்துக்கு கும்பல் சேர்ற மாதிரி, உங்க வசீகரம் கூடி, உங்க வட்டத்தில உங்களுக்குப் பெருமை சேர்க்கும். நண்பர் உறவினர் ஆதரவு கூடும். குதூகலமான வாரம். பொருளாதார வசதிகளும் கூடும். ஆபீஸ்ல கொஞ்சம் வேலைச்சுமை கூடினாலும், உயர் அதிகாரிகளோட பாராட்டையும், ஆதரவையும் தேடித்தரும். தொழில், வியாபாரத்தில கொடுக்கல் - வாங்கல், ஜாமீன் கையெழுத்து, இதிலெல்லாம் எச்சரிக்கை அவசியம். குடும்பத்தில மகிழ்ச்சி நிலவும். கணவன் - மனைவி உறவில சிறு ஊடல்கள் வரும்.



**மகரம் :** கேக்கறவங்களோட சங்கடத்தைப் புரிஞ்சுக்காம சிலர் தன்னோட பிரதாபங்களையே பெரிசா பேசிக்கிட்டே யிருப்பாங்க. நீங்க பேசாம இருந்தாலே உங்க மதிப்பும், அந்தஸ்தும் உயர்ந்து பெருமை தர்ற வாரங்க இது. எதிர்ப்புகள் மறைஞ்சு வெற்றித் தேவதைக்கு உங்க மேல ஒரு கிரேஸ் வந்துடும். ஆபீஸ்ல இதுவரை தாமதமான, தடைப்பட்ட உங்க கோரிக்கைகள் எல்லாம் கடகடன்னு நிறைவேறிடும். சிலருக்கு பதவி உயர்வு, இடமாற்றம் கிடைக்கலாம். தொழில், வியாபாரம்னு இருக்கிறவங்களுக்கு பொருளாதார முன்னேற்றம் கூடும். குடும்பத்தில குருபலன் நிறைஞ்சிருக்கறதால சுப பலன்கள் கூடி குதூகலம் நிறையும். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.




**கும்பம் :** எத்தனை வசதியிருந்தாலும் சிலருக்கு மத்தவங்க கிட்ட யிருந்து பேனா மாதிரி சின்னப் பொருள்களைச் சுடறது ஒரு கிரேஸ். ஆனா தங்களோட பெரிய பொருள்களைக் கோட்டை விட்டுடுவாங்க. நீங்க சின்னதும், பெரிசும் எதையும் கோட்டை விடாம எல்லாத் திட்டங்களையும் திறமையா நிறைவேற்றுகிற நேரம் இது. தேவையான பண வசதியும், பயணங்கள்ல அனுகூலமும் உண்டாகும். ஆபீஸ்ல புதிய பொறுப்புகள் கூடும். உத்தியோக விஷயமான பயணங்கள் நேரும். தொழில், வியாபாரத்தில கண்ணை மூடிக்கிட்டு எதையும் பண்ணாம கவனமா ஈடுபடுங்க. குடும்பத்தில நிம்மதி நிலவும். உடன்பிறந்தவங்களால சில அனுகூலங்கள் கிட்டும். பெண்களுக்கு பொன், பொருள் சேர்க்கை மகிழ்ச்சி தரும். உற்சாகமான வாரம்.



**மீனம் :** ரூபா நோட்டில சிலர் பேரெழுதி திரும்ப அது அவங்ககிட்ட வருதான்னு பாத்துக்கிட்டே இருப்பாங்க. நீங்க ருவா நோட்டை வாங்கி அப்படியே அடுக்கி அழகு பார்ப்பீங்க. அதனாலயே உங்க பொருளாதார நிலை இந்த வாரம் உயர்ந் துடும். புது அறிமுகங்கள் சிலதும் பயணங்களால அனுகூலமும் நேரிடும். ஆபீஸ்ல சுமுகமான சூழ்நிலை நிலவும் - புதிய முயற்சிகள் வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில ஏற்படுற முன்னேற்றம் புதிய தொழில் தொடங்கலாமான்னு யோசிக்க வைக்கும். குடும்பத்தில இதுவரை ஆளுங்கட்சி, எதிர்கட்சியா இருந்தவங்க கூட்டணி அமைச்சிடுவாங்க. சுப காரியங்கள் மளமளன்னு நிறைவேற ஆரம்பிக்கும். பெண்களுக்கு ஆரோக்கிய மேன்மையும், எண்ணம் போல நிறைவேறுதலும் மகிழ்ச்சி கிட்டும்.

## பரிகாரம் :



குடும்பத்திலேயோ, தொழில்லயோ சிக்கல்கள் வந்து 'இனி ஏதாவது உலகமகா அதிசயம் நடந்தாத்தான் இது சரியாகும்'னு கவலைப்படறீங்களா? கவலையை விடுங்க. 'அதிசயம் ஆயிரம் உற்றமலை'யான இந்தப் பழனிக்கு வாங்க. 'ஆமாம். அவரே ஒண்ணுமில்லாத ஆண்டி. என்னத்தைத் தீர்க்கப் போறார் அவர்'னு நினைச்சா, அது தப்பு. அப்படி அவர் நிக்கறதோட தாத்பர்யமே உங்களையும் ஒண்ணுமில்லாதவரா, கஷ்டம் ஒண்ணுமில்லாதவரா, கவலை ஒண்ணுமில்லாதவரா, நோய்நொடி ஒண்ணுமில்லாதவரா ஆக்கிடறதுதான். இந்தப் பழனியோட அடியார்களான பல சித்தர்கள் இங்க அருவமாவும், உருவமாவும் இன்னும் வாழ்ந்து அதிசயம் செய்து, உங்க சிக்கல்களைப் போக்க உலா விட்டிருக்காங்க. வாங்க, உங்க சிக்கல்கள் நீங்கி சந்தோஷமா இருங்க.

**- வி**

 நீங்கள் கேட்டவை-தராசு நீங்கள்

● இரா. சக்கரபாணி,
மதுரை - 7

***? 'அம்மா' என்ற சொல் உலகிலுள்ள ஆறாயிரம் மொழிகளுக்கு மூலச் சொல்லாக இருக்கிறது என்று சபாநாயகர் காளிமுத்து கூறியுள்ளாரே?***

! உண்மைதான், ஆனால், இவர் நினைக்கிற அம்மாவை அந்த ஆறாயிரம் 'அம்மா' வார்த்தைகள் குறிப்பிடாது.

● பி. ஜெயப்பிரகாஷ்,
சர்க்கார்பதி

***? ''ஊழலுக்கு முற்றுப் புள்ளி வைக்க, சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்த, வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சமாளிக்க, கல்வியை மேம்படுத்த, விவசாயிகள் நலன்பெற, அனைத்துத் துறைகளும் மேம்பட... காங்கிரஸுக்கு வோட்டுப் போடுங்கள்'' என்று பிரதமர் சொல்வது...?***

! சுதந்திரத்துக்குப் பிறகு மத்தியிலும் சரி, மாநிலங்களிலும் சரி... பெரும்பாலான ஆண்டுகளில் காங்கிரஸ் ஆட்சிதான். அவர்களால் ஏற்பட்ட கோளாறுகளை அவர்களே சரி செய்ய வாய்ப்புக் கேட்கிறார்!

● எம். எழில்மலை, குடியாத்தம்

***? தேசிய கீதம் பாடும்போது நேராக நிற்க கட்டாயமில்லை என ம.பி. மாஜிஸ்டிரேட் நீதிமன்றத் தீர்ப்பு கூறியுள்ளதே?***

! மாஜிஸ்டிரேட் தீர்ப்புக்கு எதிராக அரசு மேல்முறையீடு செய்வது அவசியம். அவர் சட்டப் பாயின்டின் அடிப்படையில் தீர்ப்பு வழங்கியிருந்தால், சட்டத் திருத்தமும் அவசியம்.

● எல். இரவி, செ.புதூர்

***? மனித உரிமை கமிஷன் என ஒன்று செயல்படுகிறதாமே?***

! மனித உரிமை என்ன... மிருக உரிமைகளைக் காக்கவும் அமைப்புகள் உள்ளன. ஆனாலும் என்ன, மனித, மிருக உரிமைகள் மீறப்பட்டுத்தான் வருகின்றன. விஜயேந்திரர் கைது செய்யப்பட்ட விதம் ஓர் உதாரணம். மற்றொன்று: திருவனந்தபுரம் உயிரியல் பூங்காவில் மான்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த அவற்றுக்கு கு.க. அறுவை சிகிச்சை செய்யப் போக, நான்கு மான்கள் இறந்து விட்டன! என்ன கொடூரம்!



• வருத்த விமர்சனம்!



• டபுள் வெற்றி!

**விஜயகாந்த் ஜெயித்து**

● ஜி.பி.அஷ்வின்குமார்,
சென்னை - 73

***? பப்பு யாதவ் - லாலு மோதலால் பீஹாரில் பாதிப்பு யாருக்கு...?***



! பீஹாருக்குத்தான்.

● வே. சித்ரா,
கும்மிடிப்பூண்டி

? *'ஆடம்பரமாக நடத்தப்படும் திருமணங்களுக்கு அதிக வரி விதிக்க வேண்டும்' என்று இடது சாரிக் கட்சிகள் கூறுவது வரவேற்கத்தக்கதா...?*

! இது தவறான கண்ணோட்டம். ஆடம்பரத் திருமணங்களால் பணக்காரர்களின் பணம் கரைகிறது. அது பலரிடம் பரவலாகச் சென்றடைகிறது. வரி விதித்தால், செலவைக் குறைத்து, பணத்தை சம்பந்திமார்கள் தங்களுக்குள் பரிமாறிக் கொள்வார்கள். வசதியற்றவர்கள். சக்திக்கு மீறி கல்யாணச் செலவு செய்வதற்குத்தான் எதிர்ப்புப் பிரசாரம் தேவை.



• சீர்திருத்த ஆசை!



• பட்ஜெட் பராக்!

● கார்த்திக் அமர்த்யா, மயிலாடுதுறை. ❒

? *ஈராக்கில் நடந்த தேர்தலைவிட நமது நாட்டில் சில மாநிலங்களில் நடந்த தேர்தல்களில் வன்முறை அதிகமாகத் தெரிவது வேதனைதானே?*

! ஈராக் வன்முறையை நாம் ஏற்கா விட்டாலும் புரிந்து கொள்ள முடிகிறது. இங்கே 57 ஆண்டுகளாக சுதந்திரம்; 54 ஆண்டுகளாகக் குடியரசு நிலவுகிறது... ஆனாலும் பீஹாரில் 660 வாக்குச் சாவடிகளில் மறுதேர்தல் அறிவிக்க வேண்டிய நிலைமை. ஜனநாயகம் என்ற போர்வையில் நடக்கும் குண்டர் ராஜ்ஜியத்தை எப்படி ஏற்பது!

● டி.ஜே. ரகுராமன், ராஜகீழ்ப்பாக்கம். •

? *கர்நாடக அரசு, ஜெ. வழக்கில் வாதாட வேண்டிய வழக்குரைஞரை இன்னமும் நியமிக்காமல் இருப்பது குறித்து...?*

# விட்டாரே..?

! 1. சீக்கிரம் நியமித்தால், நியமித்த நாளிலிருந்தே சம்பளம் தர வேண்டி வரும். இன்னும் மொழிபெயர்ப்புப் பணியே முடியவில்லை. 2. வழக்குக்கு ஆகும் செலவை யார் ஏற்பது என்ற பிரச்னை எழுந்துள்ளது. கர்நாடக அரசு, தனக்குச் சம்பந்தமில்லாத வழக்கின் செலவை ஏற்கத் தயாராயில்லை. எதிர்கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன.



• நினையாத அம்மா!


● ஜி.குப்புசாமி,
சங்கராபுரம்

? *சானியா மிர்ஸாவிடம் தராசுக்குப் பிடித்தது ஆட்டமா? அழகா!*

! முதல் மார்க் ஆட்டத்துக்குத்தான். ஆட்டத்திறன் இல்லாவிட்டால் அழகு கவனிக்கப் படாமலே போயிருக்குமே!

● பி. கார்த்திகேயன்,
சென்னை - 15

? *கலைஞருக்குப் போட்டி ஜெயலலிதா, சன் டீ.விக்குப் போட்டி ஜெயா டீ.வி., 'முரசொலி'க்குப் போட்டி 'நமது எம்.ஜி.ஆர்.'...*



• ஆட்டத்தின் அழகு!

குங்குமத்துக்குப் போட்டி...?

! இலவசம்!

● எம். சம்பத்,
வேலாயுதம்பாளையம்

? "நீதிபதிகள் என்ன வேண்டுமானாலும் பேசலாம்; அது பற்றி நாம் விமர்சித்துப் பேசினால், நீதிமன்ற அவமதிப்பு என்கிறார்கள்..." என ஜெயலலிதா வருத்தப்படுவது சரியா...?

! சட்டசபை உறுப்பினர்கள் எது வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், அதனை பத்திரிகைகள் விமர்சித்தால் அவதூறு. அல்லது உரிமை மீறல்!

● வே. நா. கதிர்வேல், வேலூர்

? சுற்றுச் சூழல் பாதுகாப்பில் மிக மோசமான நாடுகள் வரிசையில் நம் நாடும் இருக்கிறதாமே...?

! இதற்குச் சர்வதேச ஆய்வு தேவையே இல்லை. மக்கள் கூடுகின்ற பூங்காக்கள், ரயில் நிலையங்கள், கோடை வாசஸ் தலங்கள், போன்ற இடங்களில் குவிந்து கிடக்கும் பிளாஸ்டிக் பொருள்களைப் பார்த்தாலே போதும். தோல் பொருள் தயாரிக்கும் நாடுகள், தோல் பதனிடும் பணியை மட்டும் மூன்றாவது உலக நாடுகளிடம் விட்டுவிடுகின்றன. மாசு இங்கே, காசு அங்கே! இவை போல் நிறைய உதாரணங்கள் உண்டு.

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்

? ஜோதிபாசு பிரதமர் ஆகும் வாய்ப்பு காங்கிரஸால் கை நழுவியது என ஜெ. கூறியுள்ளாரே?

! இதைத்தான் 'பசித்தவன் பழங் கணக்குப் பார்த்த கதை' என்பது.

● லெ.நா.சிவகுமார்,
சென்னை - 33

? மீண்டும் நடிகர் சங்கத் தலைவராக ஜெயித்து விட்டாரே விஜய்காந்த்!

! முறைப்படி தேர்தல் நடத்தி ஜெயித்ததால், அவர் பேரில் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளும் தோற்றுவிட்டன.

● சு. செந்தில்வேலன், திண்டிவனம்

? 'இந்த முறையும் ஆளுனர் உரை தமிழில் வாசிக்கப்படமாட்டாது' என்கிறாரே காளிமுத்து?

! அம்மாவைப் போலவே தாமும் முன் வைத்த காலைப் பின் வைப்பதில் சமர்த்தர் என்று நிரூபித்துவிட்டாரே!

● நெ.பிரஜோற்பத்தி கலை,
புவனகிரி

? விகடனில், குழந்தை பெறுவதற்கு வயது தடையல்ல என்றும், குங்குமத்தில் முப்பது வயதுக்கு மேல் குழந்தை பெறுவது அபாயம் என்றும் கட்டுரை பிரசுரம் ஆகியுள்ளதே, எது சாலச் சிறந்தது...?

! இன்றைக்கு உள்ள மருத்துவத்துறை முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டால், 'அபாயம்' என்ற சொல் பரபரப்புக்காகப் பயன்படுத்தப்பட்டிருப்பது புரியும். நிற்க, முப்பது வயதுக்குள் குழந்தை பெற்றால், உங்கள் ஐம்பதாவது வயதுக்குள் குழந்தைக்கு இருபது வயதாகிவிடும் என்பதால் இது சாலச் சிறந்தது.

● பி.பி.சந்திரசேகரன், கரூர்

? "இந்தியா ஏழை நாடு அல்ல ஏழைகள் வாழும் நாடு" என்று ப. சிதம்பரம் கூறியுள்ளாரே?

! ரொம்ப சரி...! பட்ஜெட் தயாரிக்கும்போது ஞாபகமிருந்தால் ரொம்ப ரொம்பச் சரி!

❒ ரூ. 100/- பரிசு பெறுபவர்:

கார்த்திக் அமர்த்தியா,
38/28, செட்டித் தெரு,
மயிலாடுதுறை - 609 001

* ரூ. 50/- பரிசு பெறுபவர்:

டி.ஜே. ரகுராமன்,
5, குருநாதன் தெரு,
வசந்தா பிளாட்ஸ்,
ராஜகீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 073

ESTD : 1959 ஸ்ரீ குரு ராகவேந்திராய நமஹ Phone : 28444538

**புனித யாத்திரை** **46 வருட அனுபவமுள்ள ஸ்தாபனம்** 28442850

ஸ்தாபகர் : வி. சுப்பாராவ் உரிமையாளர் : எஸ்.பத்ரி. செல் : 9444019151

**18.02.05** : 4 நாட்கள் கொண்ட நெல்லூர், ஸ்ரீசைலம், மந்திராலயம், மகாநந்தி, அஹோபிலம் ஆகியன.
**25.03.05** கட்டணம் ரூ.**1,650/-** (2 - 2) பஸ் வசதி
**23.02.05** : 13 நாட்கள் கொண்ட மஹாராஷ்டிரா யாத்திரை நாசிக், திரியம்பகேஸ்வர், ஷிர்டி, குருஷ்னேஸ்வரம்.
**03.03.05** : 12 நாட்கள் கொண்ட காசி யாத்திரை பூரி, புவனேஸ்வர், கோனார்க், காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, நைமிசாரண்யம் ஆகியன. கட்டணம் ரூ.**5,700/-**
**07.03.05** : 8 நாட்கள் கொண்ட காசி யாத்திரை. காசி, கயா, அலகாபாத் ஆகியன. கட்டணம் ரூ.**4,000/-**
**20.03.05** எல்லோரா, சனிசிங்கணாப்பூர், நாகநாதம், பரலிவைத்தியநாதம், பண்டரிபூர், பீமாசங்கர், மகாகாளேஸ்வர், ஓங்காரேஸ்வர் ஆகியவை கட்டணம் ரூ.**6,700/-**
**26.03.05** : 14 நாட்கள் கொண்ட பஞ்சதுவாரகை யாத்திரை. அகமதாபாத் டாக்கூர் துவாரகை, பேட்டதுவாரகை, நாகேஷ்வரம், ஹரிசித்திமாதா, போர்பந்தர், புஷ்கர், பாலக், வீர்பூர், மாத்ருகயா, அம்பாஜி, மவுண்ட் அபு, ஸ்ரீநாத்துவாரகை, காங்ரோலி, துவாரகை, கோமதிதுவாரகை ஆகியன. கட்டணம் ரூ.**6,700/-**
**17.04.05** : 15 நாட்கள் கொண்ட சுற்றுலா. சிம்லா, குளு, மணாலி, மணிக்கர், டெல்லி, ஆக்ரா, மதுரா. அமிர்சர், ஜெய்பூர், வைஷ்ணவதேவி ஆகியன. கட்டணம் ரூ.**7,500/-**
**17.04.05** : 15 நாட்கள் முக்திநாத் யாத்திரை. காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, நைமிசாரண்யம், சித்ரகூடம், பொக்ரா, முக்திநாத் ஆகியன. கட்டணம் ரூ.**8,000/-**
**06.05.05** : 12 & 22 நாட்கள் கொண்ட பூரி, புவனேஸ்வர், கோனார்க், காசி கயா, அலகாபாத், அயோத்தியா நைமிசாரண்யம் (22 நாட்கள்)
**16.05.05** : 14 நாட்கள் கொண்ட பத்ரி, கேதார், டெல்லி, ஆக்ரா, மதுரா, ஹரித்துவார், ரிஷிகேஷ் ஆகியன. கட்டணம் ரூ.**5,700/-**
**06.06.05** ஹரித்துவார் ரிஷிகேஷ் பத்ரிநாத், கேதார்நாத், டெல்லி, ஆக்ரா, மதுரா ஆகியன 12 நாட்கள் ரூ.**5,700/-** 22 நாட்கள் கட்டணம் ரூ.**8,400/-**
**30.07.05** : 7 நாட்கள் கொண்ட நவகிரக நவதிருப்பதி, இராமேஸ்வரம் - ஆடி அமாவாசை அன்று பாபநாசத்தில் உள்ள பாண தீர்த்தத்தில் அருவியில் ஸ்நானம் கட்டணம் ரூ.**3,300/-** மட்டும்

60 நாட்கள் முன்பு ரயில்வே டிக்கெட் ரிசர்வேஷன் செய்ய இருப்பதால் 2 மாதங்களுக்கு முன்பு பெயர், வயது, விபரங்களுடன் அட்வான்ஸ் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும்.

குறிப்பு : காலை காபி, டிபன், 2 வேளை சாப்பாடு அங்கு தங்கும் இடவசதி, ஊர் சுற்றிப் பார்க்கும் செலவு அனைத்தும் கம்பெனியாருக்கு உட்பட்டது.

மேலும் விவரங்களுக்கு: **ஸ்ரீ விஜயா டிராவல் சர்வீஸ்**

Old No.29, New No.18, ஆரிமுத்து ஆசாரி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. ✆ : 28444538, 28442850 Cell : 9444019151

# Vivekananda Vidya Kala Ashram

**"M.S. Jain Gyana Vihar" Puliyur Village, Sivanvoil P.O,**
**Thiruvallur District, Tamilnadu. Pin : 602 024**
**Phone : 954116 - 224650 & 224673**
**Mobile No. 94440 - 33934/94440 - 33935**
**email: vvka@vesonline.org**

## An ideal residential school for Boys Near Chennai

*Located in a 25 acre farm in serene rural surroundings. Pollution free air and plenty of water.*

*Experienced and dedicated teachers residing in the campus impart value - oriented education, rooted in Bharatiya tradition and culture. Instructional programme includes prayer, yoga, drill, games, karathe, instrumental music, swimming and vedic recitation, agnihotram besides academic classes aligned to CBSE with choice of Hindi/Tamil as second language.*

*Fully equipped dormitory type hostel accommodation with wholesome vegetarian food and fresh milk from Goshala in the campus.*

*School is promoted by **Vivekananda Educational Society** which has over 30 years of experience in establishing and running many reputed schools in and around Chennai city.*

*Admission open to classes VI, VII, VIII and IX for the session commencing from June 2005. Applications should be made before 30th April 2005. Prospectus and application forms may be obtained on payment of Rs.100/-= by M.O. or D.D. Payable to **"Vivekananda Educational Society"**, addressed to The Secretary, Vivekananda Educational Society, "Sri Paduka" Krishna Apartments. H-Block, 1053 Poonamallee High Road, Chennai 600 084. Phone (44) 23452120 & 23452121.*







# லவ் டேட்டாபேஸ்

**இந்த வாலண்டைன்ஸ் டே அன்னிக்கு யார் யார் எப்படியெல்லாம் ப்ரோபோஸ் பண்ணாங்கன்னு தெரிஞ்சுக்கணுமா? இதோ சுடச்சுட புள்ளி விவரங்கள். என்ஜாய்.**

● *9.17%* பசங்க கவிதை எழுதறேன் பேர்வழின்னு சொல்லிட்டு நளவெண்பா, நான்மணிக்கடிகை ரேஞ்சுக்கு ஐ லவ் யூவை டெவலப் பண்ணி எழுதிக் கொடுத்திருக்காங்க. (இதுல அடிக்குறிப்பு கள் வேற) அதைப் படிச்சுப் பார்த்த பொண்ணுங்க 'சரியான பித்துக்குளி'ன்னு சொல்லி, அந்தக் கவிதையை எடுத்துட்டுப் போய் வெள்ளீர் அடுப்புல போட்டுட்டாங்களாம். மாரல் ஆப் த ஸ்டோரி: சிம்பிள் மேட்டரை சிம்பிளா சொல்லணும்.

● *12.23%* கைஸ் டைரக்ட்டா அப்ரோச் பண்ணியிருக்காங்க. ஆனா, பேய் அடிச்சுப் போட்டா மாதிரி மிலிட்டரி ஸ்டைல்ல நடந்து போய், ஜனாதிபதி கிட்ட பரம் வீர் சக்ரா வாங்கின சோல்ஜர் மாதிரி, அவங்க ஆளுகிட்டப் போய், சல்யூட் அடிச்சுட்டு, "ஐ லவ் யூ" சொல்லியிருக்காங்க. ஆல் ரிஜெக்டட்!

● *21.98%* பசங்க இன்டர்நெட்ல இருந்து லவ் லெட்டரை அப்படியே டவுன்லோட் பண்ணி, ஈயடிச்சான் காபி அடிச்சுக் கொடுத்திருக்காங்க. அதுல *10.23%* லெட்டர்ஸ் ஸ்பானிஷ் மொழில இருந்திருக்கு. *23.10%* லவ் லெட்டரே கிடையாது. உருகுவே நாட்டுல ப்ரிப்போர் பண்ணின ஜப்தி நோட்டிஸ்!

● *71.04%* பசங்க போன் நம்பர் மாத்தி டயல் பண்ணி பரொபோஸ் பண்ணியிருக்காங்க. அதுல *68.23%* பேருக்கு 'ஓகே' ரெஸ்பான்ஸ் வந்ததால, 'சரி போனாப் போகட்டும், இவங்களே பரவாயில்லை'ன்னு லவ்வை கன்டின்யூ பண்றாங்களாம்.

● *45.02%* பொண்ணுங்க 'ஐ லவ் யூ'ன்னு சொன்னவுடனேயே ஆம்புலன்ஸ் சைரன் மாதிரி 'ஓ'ன்னு அழ ஆரம்பிச்சுட்டாங்களாம். அப்புறம் பசங்க பல்லிமிட்டாய், பிட்ஸா, மசால் தோசை, எலந்தைப்பழம் எல்லாம் வாங்கிக் கொடுத்து சமாதானப்படுத்தியிருக்காங்க. எல்லாத்தையும் சாப்பிட்டு முடிச்சவுடனே ''ரொம்ப தேங்க்ஸ் அண்ணா''ன்னு லைலா மாதிரி சிரிச்சுக்கிட்டே சொல்லிட்டு, டாட்டா காட்டிட்டாங்களாம்.

● *31.98%* பசங்க லவ் லெட்டரோட சேர்த்து, க்ரெடிட் கார்ட் ஸ்டேட்மெண்ட், மொபைல் பில், கம்பெனி ஐடி கார்டு, பால் கார்டு, பர்த் செர்டிபிகேட், பாஸ்போர்ட் எல்லாத்தையும் என்க்ளோஸ் பண்ணி அனுப்பியிருக்காங்களாம். அதுல *1.23%* ஆளுங்க தாசில்தார்கிட்ட மெனக்கெட்டு 'நோ-அப்ஜெக்ஷன்' சர்டிபிகேட் வாங்கி அட்டாச் பண்ணியிருக்காங்களாம். ரெஸ்பான்ஸ் இன்னும் தெரியலை.

**- லவ்(வ்)ஜ்ஜாவதி**




பரத்துக்கு என்ன அதிர்ஷ்டமோ. தொடர்ந்து மலையாள ஹீரோயின்களுடனே டூயட் பாட சந்தர்ப்பங்கள் வழிவகுக்கின்றன. புது இயக்குனர் ஹோசிமின் இயக்கத்தில் தொடங்கியுள்ள 'பிப்ரவரி 14' படத்திலும், பரத்தின் ஜோடி கேரளக் கிளியான ரேணுகா மேனன் தான். ''மலையாளத்திலிருந்து நடிகைகள் இங்கு வருவது சகஜம். ஆனால் தமிழில் அறிமுகமாகி, மலையாளத்திற்குள் நுழைந்து 'லஜ்ஜாவதி' பாடிய அதே வேகத்தில், மீண்டும் தொடங்கிய இடத்துக்கே திரும்பிய தமிழ் நடிகன் நான் ஒருவன்தான். 'காதல்' வெற்றிக்குப் பிறகு இரண்டு வருடங்களுக்கு ஜாலியாக படங்களில் ஹீரோயின்களைக் காதலிக்கலாம் என்றிருக்கிறேன்'' என்று சிரித்தபடி பரத் 'பிப்ரவரி 14' பட ஸ்டில்களைக் காண்பித்தார். காதல் போல அத்தனையும் அழகாக, கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருந்தன.

**- ச.ந.**

# கிரேஸி போலீஸ்

ஜாலி

***காவல்துறை என்றாலே சீரியஸ் தானா? அவர்கள் பணியிலும் ஜாலிக்கும் குஷிக்கும் இடமுண்டு என்பதை சென்னை பழவந்தாங்கல் காவல் துறை அதிகாரி ஜெகதீசன், சிரிக்கச் சிரிக்க நம்மிடம் பகிர்ந்து கொண்டார்...***

"பாண்டிச்சேரி அருகிலுள்ள கண்டமங்கலம் காவல் நிலையத்தின் எஸ்.ஐ.ஆக, பணிபுரிந்தபோது சமுத்திரம் கிராமத்திலுள்ள பாபு என்கிறவன் கள்ளச் சாராயம் காய்ச்சி வருவதாகத் தகவலறிந்து லுங்கி, பனியன், தலைப்பாக்கட்டு என்ற கெட்-அப்பில் அப்பாவியாக அக்கிராமத்தினுள் நுழைந்தேன்.

அங்கே ஒருவன் மரத்தினருகே ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தான். நான் அவனிடம் சென்று பேச்சுக் கொடுத்தபோது, "நான் சும்மா சாவுக்கு சாராயம் வாங்க வந்தேங்க. இந்த ஊர்ல ஜெகதீசன்ங்கிற எஸ்.ஐ. வந்தாலும் வந்தான். எல்லோரையும் ஓடவிட்டு அவன் நிம்மதியா உட்கார்ந்திருக்கான். என் கண்ணுல சிக்கினா அந்த எஸ்.ஐ. இனைக்கு உயிரோடவே இருக்க மாட்டான்"ன்னு கூலா சொன்னான். பேச்சுக் கொடுத்திட்டிருந்த போதுதான் தெரிஞ்சது என்கூட பேசிக் கொண்டிருப்பது வேறு யாருமல்ல, நாங்கள் தேடும் பாபுதானென்று. அப்படியே மெயின் ரோட்டுக்கு நைஸா கூட்டி வந்து, "நானும் போலீஸ்தான். ஆனா எனக்கும் அந்த எஸ்.ஐயைப் பிடிக்காது. நீ பணம் கொடுத்தா போதும், நான் விட்டுடறேன். ஆனா ஒருமுறை ஸ்டேஷனுக்கு வரணும்"னு சொன்னதுதான் தாமதம், ரொம்ப குஷியாயிட்டான். அப்படியே ஸ்டேஷன் வரைக்கும் கூட்டிட்டுப் போய், நான் பாட்டுக்கு சாதாரணமா என் சீட்ல போய் உட்கார்ந்தவுடனே வெலவெலத்துப் போயிட்டான். அதுக்கப்புறம் பாபுமேல கேஸ் புக் பண்ணி, ஒரு வருட சிறையில் தள்ளினேன். அன்றைக்கு நான் பொறி வைத்துப் பிடித்தவன் இன்றைக்கு திருந்தி அவன் ஊரில் பொரி விற்றுக் கொண்டிருக்கிறான்."

திடீரென்று ஒரு நாள் பதைபதைப்புடன்



என் ஸ்டேஷனுக்கு வந்த ஒருவர் "என் மனைவி டார்ச்சர் தாங்கல. எப்படியாவது டிவோர்ஸ் வாங்கிக் கொடுங்க" என்றார். அவரை சமாதானப் படுத்தி அனுப்பினால், அடுத்த நாள் அவர் மனைவி இதே போலொரு புகாரை வந்து என்னிடம் கூறினார். அப்போது இவர்களது பிரச்னையின் காரணம் ஈகோ மட்டும்தான் என்று அறிந்த நான், அடுத்த நாள் இருவரையும் ஒன்றாக வரச் சொன்னேன். ஆனால் தனித்தனியாக ஆட்டோவில் வந்து இறங்கினார்கள். இருவரிடமும் பேச்சுக் கொடுத்த படியே திடீரென்று கணவனை என் லட்டியால் சரமாரியாக அடிக்க ஆரம்பித்தேன். இதைப் பார்த்து அலறிய அப்பெண், "சார், விட்டுடுங்க, ப்ளீஸ் ப்ளீஸ்" என்று முதலில் கெஞ்சினார். "இரும்மா, உன்னை எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தியிருக்கான்" என்றபடி மேலும் விளாச ஆரம்பித்தபோது, தமிழ்ப் பெண்களுக்கேயுரிய கணவன் பாசத்தில் வெகுண்டெழுந்து விட்டாள்.

"யோவ், இவரு என் புருஷன்! என்னை எப்படி வேண்டுமானாலும் அடிப்பாரு, கொல்லுவாரு, உங்களுக்கென்ன?"ன்னு 'காச்மூச்'னு என்னைத் திட்டி, தன் கணவனை எங்கிட்டயிருந்து காப்பாத்தி கைத்தாங்கலா அழைச்சிட்டுப் போனாங்க.

"வரும்போது தனித்தனியா வந்தவங்க, என் ட்ராமாவினால போகும் போது ஒண்ணா போனதைப் பார்த்து ஸ்டேஷன்ல எல்லோரும் ரசித்ததோடு, நெகிழ்ந்தும் போயிட்டோம்."

**- செந்தில்**

---

அரசியல்

# "காதலில் உடன்பாடு இல்லை!"

**தமிழகத்தின் துடிப்புமிக்க இளம் எம்.எல்.ஏக்களுள் ஒருவர் - புதுக்கோட்டை அ.தி.மு.க. எம்.எல்.ஏ, டாக்டர் விஜயபாஸ்கர். அவருடன் வித்தியாசமான நேர்காணல் :**



**ஏன் அரசியல்?**

மாணவப்பருவம் முதலே பொதுச் சேவையில் அதீத ஆர்வம் உண்டு. எங்கள் குடும்பமும் அரசியல் பாரம்பர்யம் கொண்டது. மக்கள் சேவை செய்ய எனது மருத்துவத் துறையைவிட, அரசியலில் வாய்ப்புகள் அதிகம். ஆகவே டாக்டர் தொழிலைக் கைவிட்டு, தீவிர அரசியலுக்கு வந்துவிட்டேன்.

**சாதனை...?**

இரயில்களில் ஏழை - எளியவர்க்கான முன்பதிவு செய்யப்படாத பெட்டிகளின் எண்ணிக்கையை உயர்த்தித்தர வேண்டும் என்பதை வலியுறுத்தி, நின்று கொண்டே 'உண்ணாவிரதப் போராட்டம்' செய்து, அதனைப் பெற்றுத் தந்தேன். மக்கள் பிரச்னை தொடர்பாக சட்டமன்றத்தில் மிக அதிகமாகக் கேள்வி கேட்ட எம்.எல்.ஏக்களில் நானும் ஒருவன். நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, எனது தொகுதிக்கு ஏராளமான பள்ளிக்கூடங்களைக் கொண்டு வந்தேன்.

**இளைஞரணி...?**

இளைஞர்களால் நடத்தப்படுவதுதான் இளைஞரணி. எங்கள் கட்சியில் அப்படித்தான். ஆனால் சில கட்சிகளில் பேரன் - பேத்தி எடுத்தவர்களால் தான் 'இளைஞரணி' வழிநடத்தப்படுகிறது... என்ன செய்வது?




**க**டலால் நடந்த வேதனைகள் பற்றி பேசியது போதும். கடலில் நடந்த சாதனை பற்றிப் பேசுவோமா.. எலென் மெக் ஆர்தர். வயது 28. பிரிட்டிஷ் மக்கள் எல்லோரும் கொண்டாடும் சாதனைப்பெண். 71 நாட்கள், 14 மணி நேரம், பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்தைப் பிரிக்கும் கடல் பகுதியில் தம் பயணத்தை தனியாக ஆரம்பித்த இவர், 26,000 மைல்கள் உலகை வலம் வந்து, ஆரம்பித்த புள்ளியிலேயே முடித்து சாதனை புரிந்திருக்கிறார்.

"இதுவரை வாழ்க்கையில் அனுபவிக்காத எத்தனையோ கஷ்டங்கள், திகிலான நாட்களைக் கடந்து மீண்டும் நிலத்தில் கால்பதித்து சுவாசிக்கிறேன். இன்னும் கடல் எனக்கான சாதனைகளை மிச்சம் வைத்திருக்கிறது. அதுவரை என் படகு நிற்காது" என்கிறார் நம்பிக்கையுடன் எலென். ஸாரி... எலென் தி கிரேட்!




— ஷிவ்

**காதல்...!**

எனக்கு உடன்பாடு இல்லாத விஷயம் காதல்... அந்த நேரத்தை சமுதாயப்பணிக்குப் பயன்படுத்தலாம் என்பது என் எண்ணம். நான் அப்படித்தான் செய்தேன்.

**கனவு...?**

மாணவ சமுதாயத்துக்கு ஆக்கப்பூர்வமாக ஏதாவது ஒன்று செய்து கொண்டே இருக்க வேண்டும்... அதற்கு மக்கள் மனத்தில் நீங்காத, நிரந்தர இடம் பெற வேண்டும். வேகமும், விவேகமும் கொண்ட இளைஞர்கள் வெறும் புத்தகப்புழுவாக இருந்து விடாமல், தங்களுடைய ஆற்றலை நாட்டு முன்னேற்றத்துக்குப் பயன்படுத்த அரசியலுக்கு வரவேண்டும்.

**- இரா. முத்துக்குமார்**

படம் : **ராஜன்**

நமஸ்காரம்.

**ஸ்ரீ சங்கர வித்யா கேந்திரா வளாகத்தில்**

உருவாகியுள்ள திறந்தவெளி அரங்கத்தை

**அமரர் 'கல்கி'**

**ரா. கிருஷ்ணமூர்த்தி**

நினைவுக்கு அர்ப்பணிப்பதில் பெருமை கொள்கிறோம். இந்த விழாவிற்கு

**மனித நேயர்**

**திரு. ஜி. வரதராஜன்**

அவர்கள் முன்னிலையில்

**திரு. ஜி.கே. வாசன்**

(பாராளுமன்ற உறுப்பினர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர்)

அவர்கள் தலைமை ஏற்று அரங்கத்தை திறந்து வைக்க இசைந்துள்ளார்.

**திரு. விசு**

(திரைப்பட இயக்குனர்)

அவர்கள் பங்கேற்று சிறப்புரை ஆற்றி

**"கல்கி", ஜகதீச ஐயர், ஜானகி அம்மாள்** மூவரின் திருஉருவப் படங்களைத் திறந்து வைக்கிறார்.

வாழ்த்துரைகள் :

**திரு. கி. ராஜேந்திரன்**

(கல்கியின் புதல்வர்)

**திரு. ச. கி. ஸ்ரீதரன்**

(முன்னாள் துணை செயலாளர், விவேகானந்தா கல்வி கழகம்)

நன்றியுரை :

**திரு. ந. கந்தசாமி**

தாங்கள் சுற்றமும் நட்பும் சூழ வந்திருந்து விழாவினை சிறப்பிக்க வேண்டுகிறோம்.

**ஜெ. ரங்கநாதன்**

(புத்தமங்கலம் ஸ்ரீ ஜகதீச ஐயர் நினைவு அறக்கட்டளை)

தொடர்ந்து T.H. விக்கி விநாயகராம் குழுவினரின் தாள வாத்ய விருந்து நடைபெறும்

# வீசு ராசா வீசு!

**தூ**ஸ்ரா-இந்த வார்த்தை கடந்த சில மாதங்களாகவே கிரிக்கெட் விளையாட்டைப் படாதபாடு படுத்தி வருகிறது. உலக சாதனை புரிந்த நம்ம ஊர் மாப்பிள்ளையும், ஸ்ரீலங்காவின் முன்னணி பந்துவீச்சாளருமான முத்தையா முரளீதரனின் வண்ணமிகு கிரிக்கெட் வாழ்க்கையை பலி வாங்கப் பார்த்தது இந்த தூஸ்ரா. இதன் கரம் நீண்டு, இந்தியாவில் ஹர்பஜன் சிங், பாகிஸ்தானின் சோயிப் அக்தர் என்று இன்னும் பலர்மீதும் பொடாவாகப் பாயப் பார்த்தது. நல்ல காலம்! ஐ.சி.சி. தலையிட்டு, இவர்கள் வயிற்றில்





பால் வார்த்திருக்கிறது. அது என்ன தூஸ்ரா?

**ப**ந்து வீச்சாளர்கள், பந்து வீசுகிறபோது, தங்கள் கையை எந்த அளவுக்கு வளைக்கலாம் என்று ஏற்கெனவே விதிமுறைகள் உண்டு. அதன்படி சுழற்பந்து வீச்சாளர்கள் தங்கள் கையை ஐந்து டிகிரி வரையிலும் வளைத்து, பந்து வீசலாம். வேகப்பந்து வீச்சாளர்கள் என்றால், பத்து டிகிரி வரை கையை வளைக்க அனுமதி உண்டு. இப்படி கையை வளைத்து, பந்து வீசுவதைத்தான் தூஸ்ரா என்கிறார்கள்.

முத்தையா முரளீதரன் தான் முதன் முதலில் இந்த தூஸ்ராவுக்கு பலிகடா ஆனார். சுழற் பந்து வீச்சின்போது, இவரது கை பதினான்கு டிகிரிவரை திரும்புகிறது. இது விதிமுறைக்கு மாறானது என்று சொல்லி, இவர் வீசிய பந்துகளை 'நோபால்' என்று 1995ல் அம்பயர் ஹேர் அறிவித்ததுதான் பிரச்னையின் ஆரம்பம்.

முரளீதரன் 2004ம் ஆண்டு மார்ச்சில் தனது நூறாவது டெஸ்ட் விக்கெட்டை வீழ்த்தியதையடுத்து, அவரது பந்து வீச்சு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

ஐ.சி.சி. முரளீதரனின் பந்து வீச்சை பரிசோதனைக்குட்படுத்தியது. கடைசியாக முரளீதரன் தமது தூஸ்ரா பாணியில் பந்துவீசலாம் என்று சொல்லிவிட்டது. ஆனாலும் தூஸ்ரா குறித்த சர்ச்சை தொடர்ந்தது.

அதன் அடுத்த கட்டம் இப்போது நிகழ்ந்துள்ளது. ஐ.சி.சி. அமைத்த நிபுணர் குழு, இந்த தூஸ்ரா பந்து வீச்சைக் குறித்து ஆய்வு நடத்தியது அதன் பரிந்துரையின் பேரில், ஐ.சி.சி. இனி பௌலர்கள் தங்கள் கைகளை பதினைந்து டிகிரி வரை திருப்பி, பந்து வீச அனுமதிக்க ஏதுவாக விதிமுறைகளை தளர்த்திவிட்டார்கள்.

இந்த விதி தளர்த்தலால் என்ன பலன்?

பழைய விதிமுறையைக் கடுமையாகக் கடைபிடிக்கும் பட்சத்தில், இன்று உலகின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்கள் பலர் தங்களுடைய வழக்கமான முறையில் பந்துவீச முடியாது. தங்கள் ஸ்டைலை மாற்றிக் கொள்ள முடியாத பட்சத்தில் அவர்கள் கிரிக்கெட் ஆட்டமே தடை விதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டிருக்கும். விதிகளுக்கு ஏற்ப, மாற்றிக் கொண்டால், முன்போல திறமையாக விக்கெட்களை வீழ்த்தமுடியாமல் போகலாம். எனவே, இந்த விதி தளர்வு, பல பந்து வீச்சாளர்களை, குறிப்பாக ஸ்பின் பௌலர்களை நிம்மதிப் பெருமூச்சுவிட வைத்துள்ளது.

- கௌதம்




# சின்னான் செய்திகள்

ஹாய் வாசகாஸ்! இந்த வாரம் நான் 'அந்த' வார்த்தையை யூஸ் பண்ண மாட்டேன். 'அந்த' வார்த்தையில்லாமலேயே செய்திகளை 'கஷ்டப்பட்டு' எப்படியாவது சொல்லப் போறேன். செக் பண்ணிக்கோங்க!



நள்ளிரவு. மெதுவாக காம்பவுண்ட் சுவர் ஏறிக் குதிக்கிறான் அவன். 'ஏதாவது கிடைக்கிறதா?' நோட்டம் விடுகிறான். 'ஆஹா... எம்புட்டு இரும்பு'ன்னு சந்தோஷத்துடன் லபக்க முற்படுகிறான். அடுத்த சில நிமிடங்களில் மச்சான், மாமியார் வீட்டிற்கு கொண்டு செல்லப்படுகிறான். ஏன்னா, அந்தத் திருடன் திருட முயற்சித்த இடம் சென்னை போக்குவரத்து போலீஸ் இணை கமிஷனர் அலுவலகம். ஏம்ப்பா திருடா, இதுக்கு பேரு 'தில்லா?' இல்லாட்டி 'லொள்ளா?'.

கோல்கெட்டோ, கோபால் பல் பொடியோ, ப்ளெக்ஸிபிள் பிரஷ்ஷோ, வேப்பங்குச்சியோ, பல் இருக்கோ, இல்லையோ, தவறாம சோம்பேறித்தனப்படாம, யோசிக்காம, தினமும் அதாவது டெய்லி மறக்காம பல் தேய்ச்சிருங்கப்பா! இல்லேன்னா ஈறுகள்ல ஏற்படுற நோயினால, இதய நோய் வருவதற்கான வாய்ப்புகள் இருக்குன்னு கொலம்பியா பல்கலைக்கழக மருத்துவமையத்துல கண்டுபிடிச்சிருங்காங்க! (ஆஹா! இனிமே சன்டே ஹாலிடே விடாம பல் தேய்க்கணும்பா!) அதே மாதிரி 'அதிக நேர சன்பாத், புற்றுநோயை உருவாக்கும்.' அப்படிங்கிற கருத்து தவறுன்னு கண்டுபிடிச்சிருக்காங்க. 'ஹைய்யா ஜாலி'ன்னு பீச் மணல்ல போயி, மல்லாக்க படுத்துறாதீங்க. புற்று நோய் வராட்டியும் சுனாமி வந்திருச்சின்னா?



ஏம்ப்பா... போன வாரம்தான் கல்யாணத்துக்கு வந்த புரோகிதர் மாப்பிள்ளையான நியூஸைச் சொன்னேன். இந்த வாரம் நாகர்கோவில் பக்கம். ஒரு மாப்பிள்ளை எஸ்கேப் ஆக, கல்யாணத்துக்கு வந்த ஒரு வி.ஐ.பி.யோட கார் டிரைவர், பொண்ணுக்கு வாழ்க்கை கொடுத்தாராம். இப்படியே போனா, காருக்கு ஸ்டெப்னி வைக்கிற மாதிரி, கல்யாணத்துக்கும் ஸ்பேரா ஒரு மாப்பிள்ளை ரெடியா வைக்கணும் போல!

அப்பாடா... எப்படியோ 'அந்த' வார்த்தையை யூஸ் பண்ணாம எழுதி முடிச்சுட்டேன். அது எந்த வார்த்தை? அஸ்கு.. புஸ்கு... சொல்றதுக்கு நான் என்ன லூஸா!

# ஓட்டல் அதிபர் படுகொலை

## தொழிற்சங்க தலைவரே வெட்டிக் கொன்றார்!

இப்படியொரு அதிர்ச்சியூட்டும் செய்தி சமீபத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதற்கு தொழிலாளர் பிரச்னை - தனி நபர் விரோதம் என்று பல்வேறு காரணங்கள் யூகங்களாகக் கூறப்பட்டாலும், இதில் நமக்கெழும் சந்தேகம், பிரச்னைகளுக்கு தீர்வு தேடி தொழிற்சங்கவாதிகள் வன்முறைப் பாதையில் பயணிக்கத் துவங்கி விட்டனரோ என்பதுதான்.

இதற்கு விளக்கமளித்த ஏஐடியூசி தொழிற்சங்க பிரமுகரான சி.மகேந்திரன், "லட்சியப்பூர்வமற்ற, தொழிலாளர் சட்டங்கள் பற்றிய அடிப்படை ஞானம் கூட இல்லாத, நியாயமான முறையில் போராடத் தைரியமற்ற சிலரது தலைமையின்கீழ் இயங்கும் தொழிற்சங்கங்களில்தான், இது போன்ற வன்முறைச் சம்பவங்கள் நடந்து விடுகின்றன. ஆகவே அங்கொன்றும் இங்கொன்றுமாகவும் நடக்கும் ஓரிரு சம்பவங்களை வைத்து, எல்லா தொழிற் சங்கங்களையும் சந்தேகிப்பது தவறு" என்கிறார் சூடாக.

"ஒருவேளை இத்தகைய சம்பவங்களுக்குக் காரணம் தொழிலாளர்கள் விவகாரத்தில் அரசியல் தலையீடும், வன்முறையாளர்கள் தொழிற்சங்கங்களில் கலந்து விட்டதும்தானா?" என்றதற்கு பதிலளித்த சிஐடியூவின் செளந்தரராஜன், "தொழிலாளர்கள் பிரச்னையைத் தீர்க்க தொழிற்சங்கங்களின் குறைந்தபட்ச பங்களிப்பை, முதலாளிகள் தரப்பு உதாசீனப்படுத்துவதால்தான் வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறிவிடுகின்றன. இதற்கு அரசியலையும், குண்டர்களையும் காரணமாகச் சொல்ல முடியாது. ஏனென்றால் தனது கருத்துக்கு ஒவ்வாத எந்தவொரு அரசியல் கட்சியையும் தொழிலாளி ஏற்க மாட்டான். அதே போல் எந்தவொரு தொழிலாளியும் ஒரு வன்முறையாளனைத் தலைவனாக ஏற்றுக் கொள்ள மாட்டான்" என்று கூறுகிறார்.



• கொலையுண்ட பலால்


"இவ்வாறு பிரச்னைகளுக்குத் தீர்வு தேடி வன்முறையைக் கையிலெடுக்கும் போது, அது தொழிற்சங்கங்கள் மீதான நம்பிக்கையை சீர்குலைத்து விடாதா- இது ஒட்டுமொத்த தொழிற்சங்கங்களுக்கும் ஓர் அவமானமில்லையா?" என்றதற்கு பதிலளித்த பாரதீய மஸ்தூர் சங்கத்தைச் சார்ந்த தங்கப்பன், "தனி நபர்களுக்கிடையேயான சிறு விவகாரம், இன்றைக்குப் பெரிதாகி இந்த அளவுக்கு வந்து விட்டது. இதற்கெல்லாம் காரணம் வன்முறையாளர்களும், அரசியலும் தொழிற்சங்க விவகாரங்களில் மூக்கை நுழைத்ததுதான். அதனால் தொழிற்சங்கங்களின் ஒழுக்கம் சீர் குலைந்து விட்டது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அதே சமயம் இது போன்ற ஓரிரு சம்பவங்கள் தொழிற் சங்கங்கள் மீதான நம்பிக்கையை தகர்த்து விடாது; அவற்றின் பணிகளையும் பாதிக்காது" என்கிறார்.

- கோகிலா

• செளந்தராஜன்



• மகேந்திரன்



• தங்கப்பன்



# சுர்ஜித் ஊதிய சங்கு!

மூன்று நாள் மாநில மாநாட்டை நாகர்கோவிலில் வெற்றிகரமாக நடத்தி முடித்திருக்கிறது மார்க்ஸிஸ்ட் கட்சி.

● ஆயிரக்கணக்கான செம்படைத் தொண்டர்களின் அணி வகுப்பை நடத்தி நாகர்கோவிலையே கலக்குவது என்று முடிவு செய்து வைத்திருந்தார்கள். ஆனால் ஆழிப் பேரலை சோகம் காரணமாக, பேரணி ரத்து செய்யப்பட்டது. இதில் காம்ரேடுகளுக்குக் கொஞ்சம் வருத்தம் தான்.

● மாநாட்டில் மூத்த தலைவர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார்கள். ஐந்து வருடம் சிறை சென்ற பாப்பா உமாநாத்துக்கு, அவரது கணவர் உமாநாத் சால்வை அணிவித்து கௌரவித்த போது பலத்த கரகோஷம்.

● மாநாடு நடைபெற்ற இடத்துக்கு முத்தையா நகர் என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது. கட்சிப் பத்திரிகையான தீக்கதிர் மற்றும் செம்மலரின் ஆசிரியராக இருந்தவர் முத்தையா. மாநாட்டில் கலந்து கொண்ட பொலிட் பீரோ உறுப்பினர் பிரகாஷ் கரத், "தொலைத் தொடர்பு மற்றும் பொதுத் துறையில் அன்னிய முதலீடு குறித்த மார்க்ஸிஸ்ட் கட்சியின் கருத்துக்களை காங்கிரஸ் புறக்கணித்தால் அரசியல் பின் விளைவைச் சந்திக்க நேரும்" என்று ரெட் சிக்னல் கொடுத்தார்.

● கட்சியின் பொதுச் செயலாளர் சுர்ஜித்தும் மாநாட்டில் கலந்து கொண்டார். உடல் நலம் சரியில்லாத நிலையிலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்க்க வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார் சுர்ஜித். "நாம் மத்திய அரசில் பங்கேற்காவிட்டாலும், அரசு எந்தெந்தப் பிரச்னையில் எப்படிச் செயல்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டுகிறோம். அவர்கள் செவி சாய்த்தால் நல்லது. நாங்கள் சொல்வதை மதிக்காவிட்டால் எங்கள் பாதைக்குத் திரும்பி விடுவோம் என்று எச்சரிக்கிறோம்" என்றார் சுர்ஜித்.

- கௌசி

• பிரகாஷ் கரத் • வரதராஜன்








சிறுவயதில் இரவு நேரங்களில் அமரர் கல்கியின் 'பொன்னியின் செல்வன்' கதையையும் ஆங்கிலப் படங்களுக்கே உரித்தான அதன் பிரம்மாண்ட காட்சிகளையும் விவரித்தே வளர்த்தார் என் அப்பா. இதனால் சிறுவயது முதல் க்ளோஸ் டு மை ஹார்ட் என்றால் அது கல்கி இதழ்தான்.

வெறும் சினிமாச் செய்திகளுக்கு மட்டும் முக்கியத்துவம் தராமல், அதே சமயம் அப்படி வெளியிட்டாலும் கண்ணியமான சினிமா புகைப்படங்களை மட்டுமே வெளியிடுவதால் பத்திரிகைகளில் என் சாய்ஸ் என்றால், அது கல்கிதான்.

- 'பெப்ஸி' உமா

படம் : ஸ்ரீஹரி


Celebrate Your Meal!
with wide range of
SAKTHI®
PICKLES
Avakkai Mango,
Cut Mango,
Lime, Lime and Mango,
Tomato,
Garlic, Ginger
Mixed Vegetable,
Mango Thokku and many more!
SAKTHI
SAKTHI
SAKTHI
CUT MANGO PICKLE
Something Special
A Quality Product from
SAKTHI MASALA
SAKTHI MASALA (P) LTD., #6, Mamarathupalayam, Erode - 638



காவியக்காதல் பட்டுகள்
Year of seven
2005
Year of Pothys
சொந்தத் தறியில் நெய்த பந்தம்
பாரதத்தின் பெருமை பேசும் நம் புராதன கலைச் சின்னங்களை
பட்டிழைகளிலே பெருமையுடன் போத்தீஸ் அளித்ததுதான்
காவியக்காதல் பட்டுகள்
பாரசீக வணிகர்களிடமிருந்து இராஜஇராஜசோழன்
மகள் குந்தவைக்கு பரிசாகக் கிடைத்த தங்க மாங்கனியை
மாணிக்கப் பரல்கள் பொதிந்த செட்டிநாட்டுக்
காசுமாலையில் சேர்த்திழைத்து
பட்டின் சரிகையிலே வடிவமைத்தது போத்தீஸ்
பொன்மாங்கனி சேலையிலே...
பெருமிதமாய் உணர்வீர்கள்!
போத்தீஸ்
அழகிய ஜவுளிகளின் ஆலயம்
சென்னை • திருநெல்வேலி • ஸ்ரீவில்லிபுத்தூர்
குந்தவை பெற்ற தங்க மாங்கனி
Sky Kommercials